GOVERNMENT OF MADRAS

सत्यमेव जयते

# மதுரை

## பத்தாண்டுச் சாதனைகள்

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS

தமிழ்நாடு அரசாங்க
செய்தித்துறை வெளியீடு

முதற் பதிப்பு: டிசம்பர், 1961

விலை: 25 காசுகள்

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை-5

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS



# முன்னுரை

மக்கள் வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்பதற்காக ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. அத்திட்டங்களின் கீழ் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அந்தந்தப் பிரதேசத்தின் அமைப்பு, இயற்கை வளங்கள், மக்கள் மனப் போக்கு ஆகியவற்றுக்கேற்ப, முன்னேற்றத்தின் அளவு அமைந்திருக்கிறது. ஆனால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சிறந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியைப் பிறநாடுகளிலிருந்து வருகின்ற தலைவர்களும் பாராட்டி யிருக்கிறார்கள்.

மாவட்ட வாரியாக நம்முடைய சாதனைகளைத் தொகுத்துத் தனித்தனியாக 12 நூல்களை வெளியிட்டு இருக்கிறோம். எல்லாம் சாதித்தாகிவிட்டது என்று பூரித்துப் பேசுவது இந்த நூல் வரிசையின் நோக்கமல்ல. எந்த அளவுக்கு அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன என்னும் விவரம் இதன் மூலம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. உருவாகி வரும் சுபிட்ச மாளிகையின் எழுத்து உருவம் இது. அந்த மாளிகையைப் பூரணமாகக் கட்டி முடிப்பதில் நடந்துள்ள பணியை அறியவும், நடக்க வேண்டிய வேலையை அனுமானிக்கவும் இது பயன்படும். ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றிக்குப் பொது மக்கள் தொடர்ந்து ஒத்துழைக்க, இந்த நூல் பெரும் தூண்டுகோலாக இருக்கும் என்று நம்புகிறோம்.

சென்னை-9
12-12-1961

நெறியாளர்,
தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை.

## அட்டைப் படம்

தமிழால் வளர்ந்ததும், தமிழை வளர்த்ததும் மதுரையம்பதி. முடி மன்னர்கள், ஆலயங்களும் அழகு மாளிகைகளும் கட்டி அதை மேம்படுத்தினர். அந்தப் புராதனச் சிறப்பை இன்றும் அந்நகரில் காணலாம். அதோடு சுதந்திர சகாப்தத்தில் கட்டப்பட்ட வைகை நீர்த்தேக்கமும், மருத்துவக் கல்லூரியும் மதுரை மாவட்டத்திற்கு மக்களாட்சி தந்த பரிசுகளாகும்.

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| மக்கள் திட்டம் ... | 1 |
| சங்கம் வளர்த்த மதுரை ... | 11 |
| பூம்புனல் ... | 17 |
| உற்பத்தி உயர்வு ... | 22 |
| கிராமங்களில் புதுவாழ்வு ... | 41 |
| மின்சாரப் பெருக்கம் ... | 48 |
| வளரும் தொழில்கள் ... | 52 |
| கல்வி விளக்கு ... | 65 |
| நாட்டின் நரம்புகள் ... | 72 |
| நோயற்ற வாழ்வு ... | 77 |
| கூட்டுறவின் சாதனைகள் ... | 88 |
| சமூக முன்னேற்றம் ... | 98 |
| மத்திய அரசாங்கத் திட்டங்கள் ... | 111 |
| வளமான எதிர்காலம் ... | 116 |

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS

# மதுரை மாவட்டம்




## குறிப்புகள்:

| | | |
|---|---|---|
| மாவட்ட எல்லை | மாவட்டத்தின் பரப்பு | 4869 ச.மைல் |
| வட்ட எல்லை | மக்கள் தொகை | 32·05 லட்சம் |
| தேசிய நெடுஞ்சாலை | ஆண்கள் | 16·07 லட்சம் |
| மாநில நெடுஞ்சாலை | பெண்கள் | 15·98 லட்சம் |
| ரயில் பாதை | எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் | 10·34 லட்சம் |
| ஆறுகள் | ஆண்டு சராசரி மழை | 819·9 மி.மீட்டர் |

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS

# மக்கள் திட்டம்

பொழுது புலர்ந்தது. புள்ளினம் ஆர்த்தன. ஆர்த்தன முரசம். பொங்கியது எங்குஞ் சுதந்திர நாதம். வெள்ளிய சங்கம் முழங்கின. வீதியெலாம் அடிமை விலங்கொடித்த அணிவகுப்பின் ஆரவாரம். அந்த ஆரவாரத்தோடு நாட்டின் பொருளாதார சுபிட்சத்துக் கான புதிய போராட்டம் ஆரம்பமாயிற்று. தாழ்வும் நலிவும் நீங்கி, மகிழ்ச்சியும் பொலிவும் நிறைந்த புதுவாழ்வு காண மாபெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இடையில் ஏற்பட்ட இடையூறுகள் அனைத்துக்கும் ஈடு கொடுத்துப் புது வாழ்வு என்னும் பயிரைத் திட்டமிட்டு வளர்க்கத் தொடங்கினோம்.

1951-ல் முதல் ஐந்தாண்டுத் திட்ட வேலை ஆரம்பமாயிற்று. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்பு இப் போது மூன்றாவது திட்ட வேலை தொடங்கியிருக்கிறது. மூன்றாவது திட்டம் மிகப் பெரியது என்று அனைவரும் கருதினாலும், அதில் வெற்றி காணமுடியும் என்ற தன்னம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள் ளது. இந்தத் தன்னம்பிக்கையை நமக்குக் கொடுத்தது எது? முதல் இரு திட்டங்களில் கிடைத்த வெற்றியே.

ஐந்தாண்டுத் திட்டம் என்றால் சமுதாயத்தின் மேல்தளத்தில் உள்ள சிலர், கீழே இருக்கும் பலரை வேலை வாங்கும் திட்டமல்ல. இது மக்கள் திட்டம். மக்கள் நலனுக்காக மக்கள் ஒத்துழைப்பைக் கொண்டு நடத்தப்படும் திட்டம். இந்தியாவின் பொருளாதார ஜனநாயகத்துக்குக் கொடுக்கப்பட்ட வரிவடிவமே இது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான தேசியத் திட்டம், மூன்று பெரும் பிரிவுகளைக்கொண்டது. மத்திய அரசாங்கத் திட்டம், மாநில அரசாங்கத் திட்டம், தனியார்துறைத் திட்டம் என்பன அந்த மூன்று பிரிவுகள் ஆகும்.

புதிய உருக்காலைகள் அமைப்பு, கனரக யந்திரத் தொழிற்சாலை, ரசாயன உரத் தொழிற்சாலை, நிலக்கரிச் சுரங்கம், எண்ணெய் வளம்கண்டுபிடித்தல், எண்ணெய் சுத்திகரிப்பு, பெரிய துறைமுகங்கள், ரயில்வேக்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி வேலைகள் முதலியன மத்திய அரசாங்கத் திட்டம் என்ற பிரிவில் வருகின்றன.

மாநில அரசாங்கத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சமூகநலப் பணிகள், சுகாதாரம், கிராம முன்னேற்றம் முதலியன அடங்கும்.

மூன்றாவது, தனியார் துறை. ஜவுளி, சர்க்கரை, சிமிட்டி, இஞ்சினீரிங் மற்றும் இதர பொருள்கள் உற்பத்திக்கான ஸ்தாபன ரீதியான தொழில்களில் பொதுமக்கள் முதலீடும், வேளாண்மை, வீடு கட்டுதல் ஆகியவற்றில் பொதுமக்கள் முதலீடும் இந்தப் பிரிவில் சேர்ந்தவை.

**திட்டச் செலவுகள்**

முதல் இரண்டு திட்டக் காலங்களில் இந்தியா முழுவதற்குமாக ரூ. 10,110 கோடி செலவிடப்பட்டது. மூன்றாவது திட்டத்தில் இந்தியா முழுவதற்குமாக உத்தேசமாக ரூ. 11,600 கோடி செலவாகும். இதில் மத்திய அரசாங்கம் ரூ. 3,775 கோடி செலவழிக்கும். மாநில அரசாங்கங்கள் ரூ. 3,725 கோடி செலவழிக்கும். தனியார்துறை ரூ. 4,100 கோடி செலவிடும்.

தமிழ் நாட்டின் முதலாவது, இரண்டாவது திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 266 கோடியாகும். அதாவது முதல் திட்டத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 186 கோடியும் செலவிடப்பட்டது.

திட்ட வேலைகளின் பயனாக இந்தப் பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வேளாண்மை, பாசனம், கல்வி, மின்சாரம், தொழில்கள், சமுதாய நலன், போக்குவரத்து ஆகிய எல்லாத் துறைகளிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் உணவு உற்பத்தி 38 லட்சம் டன்னாக இருந்தது. இரண்டு திட்டங்களை நிறைவேற்றிய தின் பயனாக உற்பத்தி இப்போது 53 லட்சம் டன் ஆக உயர்ந் துள்ளது. ஏக்கர் விகித மகசூலை அதிகரிக்கும் முறையில் உயர்தர வித்துக்களைப் பரப்புவதிலும் ஜப்பானியமுறைச் சாகுபடியை அனு சரிப்பதிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக மாநிலத்தில் நெல் சாகுபடியாகும் பரப்பு பூராவிலும், புஞ்செய் தானியங்கள் சாகுபடியாகும் பரப்பில் 45 சதவீதத்திலும் உயர்தர வித்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. சென்ற பத்து ஆண்டு களில் வேளாண்மை, சமுதாயநலத் திட்டங்களின்கீழ் சுமார் ரூ. 42 கோடி செலவில் இந்த அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன.

**பாசனமும், மின்சாரமும்**

தமிழ் நாட்டில் பாசன வசதிகளைப் பெருக்க சென்ற பத்து ஆண்டுகளில் ரூ. 37 கோடிக்குமேல் செலவிடப்பட்டது. 14 பாச னத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக 4·65 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசனம் பெற்றன. ரூ. 35 கோடி செலவாகக் கூடிய பரம்பிக்குளம் - ஆளியாறு திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் 2·4 லட்சம் ஏக்கர் பாசனம் பெறும்.

மின்சாரப் பெருக்கம் தமிழ் நாட்டின் மற்றொரு முக்கிய சாதனை யாகும். சென்ற பத்து ஆண்டுகளில் மின்சார அபிவிருத்திக் காக மட்டும் சுமார் ரூ. 110 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக மின்சார வசதி பெற்ற கிராமங்களின் எண் ணிக்கை 1,610-லிருந்து 11,000-ஆக அதிகரித்துள்ளது. மின் சாரத்தால் இயங்கும் பம்பு செட்டுகளின் தொகை சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 14,000-லிருந்து 1,16,000-ஆக அதிகரித் துள்ளது.

**கல்வி**

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் சுமார் 16,000 ஆரம் பப் பள்ளிகள் இருந்தன. தற்போது ஆரம்பப் பள்ளிகளின் தொகை கிட்டத்தட்ட 27,000 ஆகும். 1951-ல் பள்ளிகளுக்குச் சென்ற குழந்தைகள் தொகை 18·53 லட்சம். 1961-ல் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகள் தொகை 33·80 லட்சம் ஆகும். குழந்தை கள் பள்ளிக்கு வரும்படிச் செய்வதில் ஊக்கமளிப்பதற்காக நண் பகல் உணவுத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டது. இத் திட்டப்படி, ஒவ்வொரு ஏழைக் குழந்தைக்கும் பத்துக் காசு செலவில் இலவசமாக உணவு அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் சுமார் 10 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைகின்ற னர். இலவச நண்பகல் உணவு மட்டுமின்றிச் சுமார் 3·6 லட்சம்



நெய்வேலியில் உருவாகிவரும் புதிய அனல் மின்சார நிலையம்

குழந்தைகளுக்கு இலவசமாக நிகராடை வழங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடத்துவதும் கல்வித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும். இத்திட்டத்தின் மூலம் ஆங்காங்கே உள்ள பொதுமக்கள் பள்ளிக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய முன்வருகின்றனர். ரொக்கமாகவும் பொருளாகவும் உதவுகின்றனர். இந்த வகையில் அளிக்கப்பட்ட உதவியின் மதிப்பு ரூ. 6·47 கோடி.

தொழில் நுட்பக் கல்வி வசதியில் இரண்டாவது திட்டக் காலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு மொத்த இடவசதி 662 ஆகும். இரண்டாம் திட்ட முடிவில் இந்த இடவசதி 1,157-ஆக அதிகரித்தது. பாலிடெக்னிக்குகளில் இடவசதி சென்ற 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 822-லிருந்து 2,910-ஆக அதிகரித்துள்ளது.

## தொழில் வளர்ச்சி

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்துள்ளது. நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டம், தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் தொழில் முயற்சியாகும். இத் திட்டத்துக்குச் செலவு மதிப்பு 110 கோடி ரூபாய். இந்திய அரசாங்கம் இதுவரை

ரூ. 49 கோடி முதலீடு செய்துள்ளது. பழுப்பு நிலக்கரி எடுக்கும் வேலை தொடங்கி விட்டது. நெய்வேலியில் புதிய அனல் மின்சார நிலையம் 1961-62ல் உற்பத்தி தொடங்கும். முதல் கட்டத்தில் 2·5 லட்சம் கிலோவாட் உற்பத்தித் திறனுடையதாக அது இருக்கும். 1·52 லட்சம் டன் ஊரியா உற்பத்தி செய்யக்கூடிய ரசாயன உரத் தொழிற்சாலையும், 3·5 லட்சம் டன் சுட்ட நிலக்கரிக் கட்டிகள் தயாரிக்கக் கூடிய ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்துவதற்கு வகை செய்யப்படுகிறது. நெய்வேலி ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் பெரிய தொழில் பிரிவுகளான இந்த வேலைகள் வெற்றிகரமாக நிறைவேறுவதை யொட்டி, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி கணிசமான முன்னேற்றத்தைக் காணும்.

சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலையும் முக்கியமான ஒரு தொழில் அபிவிருத்தி வேலையாகும். இதுவும் மத்திய அரசாங்கத் தொழில் திட்டத்தில் சேர்ந்தது. ரூ. 7·35 கோடி செலவில் அமைந்த இந்தத் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 300 பெட்டிகளுக்கு ஆசன வசதிகள் முதலியன செய்யக் கூடிய தொழில் பிரிவு புதிதாக ரூ. 3·60 கோடி செலவுமதிப்பில்

---

**நிலத்தைக் குடைந்து மண்ணையெல்லாம் அகற்றிவிட்டு நிலக்கரியை வெட்டிக் கொண்டு வருவதென்பது சாதாரண காரியமல்ல. நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் மண்ணை அகற்றும் பெரும் பணிக்கு உரிய பெரிய யந்திரம்**



ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. ரயில் பெட்டித் தொழிற்சாலையில் சுமார் 7,800 பேர் வேலை செய்கிறார்கள்.

ரயில் பெட்டி உற்பத்தியானது, பல துணைத் தொழில்கள் பெருகவும் வாய்ப்பு அளித்திருக்கின்றது. உருக்கு வார்ப்புகள், ஸ்பிரிங்குகள், ரப்பர் சாமான்கள் முதலிய சுமார் 200 வகைப் பொருள்கள் உள்நாட்டுத் துணைத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன. இதனால் சென்னை நகரின் சுற்றுப் பிரதேசங்களிலும், மற்றும் நாட்டில் பல்வேறு இடங்களிலும் துணைத் தொழில்கள் பெருக ஊக்கம் ஏற்பட்டுள்ளது.

**தனியார் துறை**

தமிழ் நாட்டில் தனியார் துறையில் சிமிட்டி, துணி ஆலைகள், இஞ்சினீரிங் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத்தில் 1934-க்கும் 1946-க்கும் இடையே மூன்று சிமிட்டித் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் முன்பு 7·58 லட்சம் டன்களாக இருந்தது. இப்பொழுது உற்பத்தி 8·13 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. ராஜபாளையம் பகுதியில் ஒரு சிமிட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1·94 லட்சம் டன்களாகும். இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்றும் திட்டக் காலத்தில் இரண்டு சிமிட்டித் தொழிற்சாலைகளைப் புதிதாகத் தொடங்கச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

துணி உற்பத்தித் தொழிலைப் பொறுத்த வரையில் இந்தியாவில் 131 லட்சம் கதிர்கள் இருக்கின்றன. இவற்றில் 31 லட்சம் கதிர்கள் தமிழ் நாட்டு ஆலைகளில் உள்ளன. 1951-ல் மாநிலத்தில் 71 ஆலைகள் இருந்தன. தற்போது 134 ஆலைகள் இருக்கின்றன. துணி ஆலைத் தொழிலினால் 1950 ல் 90,000 பேர்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. இன்று சுமார் 1·2 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைத்து வருகிறது.

தனியார் துறையின்கீழ், வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி, சென்னை அருகே திருவொற்றியூரில் உள்ள ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை, அம்பத்தூரில் உள்ள டி. ஐ. சைக்கிள் கம்பெனி, எண்ணூரில் உள்ள அசோக் லேலெண்ட் லிமிடெட் ஆகிய தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. மேட்டூர் அருகில் மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. ஈரோட்டுக்கருகில் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருறது; இதில் அரசாங்கம் ரூ. 1 கோடி முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் சாகுபுரத்தில் தாரங்கதரா ரசாயனத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 30,000 டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்து வருகின்றது. காஸ்டிக் சோடா தயாரிப்பில் இது இந்தியாவிலேயே பெரிய தொழிற்சாலையாகும்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்துக்கருகில் ரெயான் என்னும் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வேலை தொடங்கி விட்டது. இத்தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.

அம்பத்தூரில் உள்ள டன்லப் ரப்பர் கம்பெனி, மேட்டுப் பாளையம் செயற்கை வைரத் தொழிற்சாலை ஆகியனவும் தனியார் துறையில் குறிப்பிடத்தக்க தொழில் அமைப்புக்களாகும்.

**சர்க்கரை ஆலைகள்**

ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப் பின் தமிழ்நாட்டில் நெல்லிக் குப்பம், புகளூர், பாண்டியராஜபுரம் ஆகிய இடங்களில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருந்தன. பின் இரண்டாம் திட்டக் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டம் வடபாதி மங்கலத்திலும், திருச்சி மாவட்டம் பேட்டைவாய்த்தலையிலும் இரு சர்க்கரை ஆலைகள் அமைக்கப் பட்டன. இவையல்லாமல் உடுமலைப்பேட்டை, ஆம்பூர், படாலம் ஆகியவைகளில் கூட்டுறவுச்சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்துவதில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது.

சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கிண்டியிலும், விருதுநகரிலும் தொழிற் பண்ணைகள் அமைக்கப் பட்டன. ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, பேட்டை, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் தொழில் பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. காட்பாடியில் ஒரு தொழில்பேட்டை உருவாகி வருகிறது. இவற்றின் மூலம் சிறு தொழில்கள் வளர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பயிற்சி—உற்பத்தி நிலையங்கள் 44 ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்தத் தொழில் வளர்ச்சி முக்கியமாக இரண்டாவது திட்டத்தில் ஏற்பட்டதாகும்.

சென்ற பத்து ஆண்டுகளில் சாலை வசதி 21,198 மைல்களிலிருந்து 25,878 மைல்களாக அதிகரித்துள்ளது.



பெரிய துறைமுகங்களையும், ரயில்வேக்களையும் அபிவிருத்தி செய்வது மத்தியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். உலக பாங்கியிடமிருந்து கடன் உதவியுடன் சென்னைத் துறைமுகத்தை ரூ. 16 கோடி செலவில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டமும், தாம்பரம்—செங்கற்பட்டு—விழுப்புரம் இடையில் மின்சார ரயில் அமைப்புக்கான திட்டமும் செயலாக்கப்பட்டு வருகின்றன.

**மருத்துவ வசதிகள்**

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் உள்ள மருத்துவ மனைகளில் மொத்தம் 8,500 படுக்கைகள் இருந்தன. தற்போது படுக்கைகளின் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்துள்ளது. செங்கற்பட்டு, பாளையங்கோட்டை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், கடலூர், சேலம் ஆகியவைகளில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்குக் கட்டிடங்கள் கட்டும் வேலை ரூ. 53 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சாவூரில் ரூபாய் 130 லட்சம் செலவில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கிராமப் புறங்களில் 110 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

**கூட்டுறவு**

1955-56 ல் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் குடியானவர்களுக்கு ரூபாய் 6 கோடி வேளாண்மைக் கடன் வசதி அளிக்கப்பட்டது. 1960-61 ல் இது ரூபாய் 25 கோடியாக அதிகரித்திருக்கிறது. மாநிலத்தில் தற்போது எல்லாக் கிராமங்களும் கூட்டுறவுச் சங்க அனுகூலங்களைப் பெற்று வருகின்றன. முழுக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 43 வட்டாரங்களிலுள்ள கிராம மக்கள் பயனடைகின்றனர். இவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் குறைந்த காலக் கடன் வசதிகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற வகை செய்யப்பட்டிருக்கிறது. இக் குடியானவர்களுக்கு ஜாமீன் இன்றி முன் பணம் கொடுப்பதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்திற்கு அரசாங்கம் ஈடு செய்யும். தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிரச் சாகுபடித் திட்டம் அமுலிலிருந்து வருகிற 23 வட்டாரங்களும் இதில் அடங்கும்.

தமிழ் நாடு 375 அபிவிருத்தி வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 363 வட்டாரங்களுக்குப் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடி மட்டத்தில் இந்த ஜனநாயக நிர்வாக முறையானது நாட்டின் அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கும்.

சென்ற பத்து ஆண்டுகளில் பின்னடைந்த வகுப்பினர் நிலை அபிவிருத்தி சம்பந்தமாக முனைப்பான நடவடிக்கைகள் மே, கொள்ளப்பட்டன. முதல் திட்டம் முதற்கொண்டு ஹரிஜன நலத் திட்டங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வந்தது. அத்துடன் புதிய ஹரிஜன நலத் திட்டங்களுக்காக ஆண்டுதோறும் மேற்கொண்டு சுமார் 2 கோடி செலவு செய்யப்படுகிறது. சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 1·71 லட்சம் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. 27,000 உணவு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. ஹரிஜனங்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 20,200 வீடுகள் கட்டப்பட்டன.

## வீட்டு வசதி

சென்னை நகரில் சேரிச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 478 புதிய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன ; 1,546 மனை இடங்கள் அபிவிருத்தி செய்து தரப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்காக அரசாங்க உதவியுடன் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1,377 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன ; 239 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

குறைந்த வருமானக்காரர்களுக்கு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 3,160 வீடுகள் கட்டப்பட்டன. 467 மனை இடங்கள் ஏற்படுத்தித் தரப்பட்டன. இந்திய ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் நிதி உதவியுடன் கூடிய நடுத்தர வருமானக்காரர்களுக்கான வீடு வசதித் திட்டத்தின்கீழ் 120 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. போலீஸ்காரர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 260 லட்சம் செலவில் சுமார் 4,200 வீடுகள் கட்டப்பட்டன.

வேளாண்மைப் பெருக்கம், மின்சார வசதிகளில் பெரும் முன்னேற்றம், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டவேலை, தொழில் நுட்பக் கல்வியில் அதிகப்படியான பயிற்சி வசதிகள் முதலியன காரணமாகத் தமிழகத்தின் தொழில் வளத்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் பலமான அஸ்திவாரம் அமைக்கப்பட்டுவிட்டது. அரசாங்கத் தொழில் துறை, தனியார்துறை இரண்டிலுமே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் மாவட்டவாரியாக முன்னேற்ற வேலைகளைத் தொகுத்துத் தரும் நூல் வரிசையில், மதுரை மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளை அடுத்துவரும் அத்தியாயங்களில் காணலாம்.

“அத்தி ருத்தகு நாட்டினை அண்டர் நாடு
ஒத்தி ருக்குமென் றுல்உரை ஒக்குமோ
எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
முத்தும் முத்தமி ழும்தந்து முற்றலால்”

கம்பராமாயணத்தில்
பாண்டிய நாட்டு வருணனை



# சங்கம் வளர்த்த மதுரை

முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிகள் தமிழின் பெருமையைத் தமிழ்ச் சங்க வாயிலாகத் தரணிக்குணர்த்திய சிறப்பு, மதுரை மாநகருக்கு உண்டு. தித்திக்கும் முத்தமிழை எண்ணும்போதெல்லாம் கடைச் சங்கம் எனப் பெயர் பெற்ற மூன்றும் தமிழ்ச் சங்கம் வைத்து, தமிழ் வளர்த்த மதுரையின் பெருமையும் நினைவிற்கு வருகிறது. பழங்காலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகராய், பாவேந்தர்களின் உறைவிடமாய் மதுரை ஓங்கு புகழ் எய்தி விளங்கியது.

மதுரை என்னும் சொல் இனிமை என்னும் பொருளையுடையது. அமிழ்தினும் இனிய தமிழ் மொழியால் இனிமை பெற்றது மதுரை. இது பற்றியே ''கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழ்'' என்றார் மாணிக்கவாசகர். மருத மரங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதாலும், மருத நிலவளத்தைப் பெற்றிருப்பதாலும், மருதை என்ற பெயரைப் பெற்று,நாளடைவில் மதுரை எனத் திரிந்தது என்றும் சிலர் கூறுவர். வயலும், வயல்சார்ந்த இடமும் மருதநிலமாகும்.

தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்று மதுரையைக் குறிப்பிடுகின்றனர். கடம்பவனம் என்றும், மதுராபுரி என்றும் நான்மாடக் கூடல் என்றும் புராண இலக்கியங்கள் மதுரையைக் குறிப்பிடுகின்றன. இது தென்னகத்துப் பாண்டியப் பேரரசின் நடு நாயகமாய் விளங்கியது என கி. பி. 140-ல் வாழ்ந்த தாலமியின் குறிப்புக்கள் காட்டுகின்றன. கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பிளீனி என்பவர் பாண்டிய மக்களைப் பற்றியும், பாண்டிய அரசினைப் பற்றியும், இம்மதுரையைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

**தமிழ் மதுரை**

தமிழுக்கும் மதுரைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனைச் ''சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய அங்கண் மூதூர்'', ''தண்பனையுடுத்த தமிழ்ப் பெருங்கூடல்'', ''தடம்பனை யுடுத்த தண்டமிழ்க் கூடல்'', ''தெய்வத் தமிழ்க் கூடல்'', ''தானின்று உலகு தழையத் தழைந்த தமிழ் மதுரை'' என்னும் பல இலக்கியத் தொடர்கள் வாயிலாக அறியலாம். இரண்டு தமிழ்ச் சங்கங்கள் கடலால் கொள்ளப்பட்ட பிறகு, மூன்றும் சங்கம் தோன்றுவதற்கு நிலைக்களனாக மதுரை இருந்தது. அதனால் தான்

''தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை''

என்று சிறுபாணாற்றுப்படையும்,

''தமிழ் கெழுகூடல் தண்கோல் வேந்தே''

என்று புறநானூறும் போற்றுகின்றன.

மதுரைக்கு வருவோர் எவராயினும் அவர்களை "வருக வருக" என உயர்தோங்கியுள்ள கோபுரங்கள் வரவேற்கின்றன. கூடல் அழகர் கோயில், வடதிருவாலவாயில், பழைய சொக்க நாதர் கோயில், திருநடுவூர் இம்மையே நன்மை தருவார் கோயில், கண்ணகியின் சிலை கொண்ட செல்லத்தம்மன் கோயில் ஆகிய பல கோயில்கள் இங்கு உள்ளன. அதனால்தான் இதைக் கோயில் நகரம் என அழைக்கிறோம். மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், நகரின் நடுவே, தாமரை மலரின் மொக்குப் போன்று காட்சி அளிக்கிறது. இதன் நீளம் கீழ்மேல் 852 அடி, அகலம் தெற்கு வடக்கே 750 அடி. இதனுள் மீனாட்சியம்மன் கோயிலும், சுந்தரேஸ்வரர் கோயிலும் தனித்தனியாக உள்ளன. நாற்றிசையிலும், ஒவ்வொரு

திருவாயலின் மீதும் உயர்ந்த கோபுரம் உள்ளது. கோபுரங்களுள் காலத்தால் பழமை பெற்றது கீழக் கோபுரமேயாகும். ஆனால் மிகவும் உயரமானது தெற்குக் கோபுரமே யாகும். இதன் உயரம் 150 அடி. கோபுரங்களிலுள்ள ஒவ்வொரு வரிசையிலும் இறைவன், இறைவியர், விலங்குகள், புராண நிகழ்ச்சிகளைக் காட்டும் உருவங்கள் அமைந்துள்ளன.

கோயிலுக்குள், சொக்கர் சந்நிதியிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் கலைக் கவின் மிக்க சிற்பங்களைக் காணலாம். மண்டபத்தினுள் இருக்கும் தூண்களின் வரிசை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக இருக்கின்றது. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், வேறுபடாத வகையில் கோடு இழுத்தாற்போல் இவை தோற்றம் அளிக்கின்றன. இங்குள்ள இசைத்தூண், அயல் நாட்டாரையும் வியப்பில் ஆழ்த்துகிறது. கோயிலுக்குத் தென்மேற்கே திருமலைநாயக்கர் மகால் அமைந்துள்ளது. கட்டிடத்தின் எப்பகுதியிலும் மரமேபயன்படுத்தப்படாமல், முழுதும் செங்கல்லும், வெண்சுதைச் சாந்தும் பயன்படுத்தப்பட்டிருப்பது இதன் சிறப்பாகும். இன்று, பல அரசினர் அலுவலகங்கள் இம்மகாலில் உள்ளன.

மதுரை காந்தி மியூசியம்



மதுரை மீனாட்சியம்மன் கோயிலை மையமாகக் கொண்டு நாற்புறத்திலும் சமசதுரமான தெருக்கள் அமைக்கப்பட்டுள்ள முறை குறிப்பிடத்தக்கதாகும். கோயிலுக்கு உள்ளேஇருக்கும் தெரு ''ஆடிவீதி'' என்றும், அதனையடுத்து வெளியில் இருக்கும் தெருக்கள் ''சித்திரை வீதி'', ''ஆவணி வீதி'', ''மூல வீதி'', ''மாசி வீதி'', ''வெளி வீதி''என்றும் அழைக்கப்படுகின்றன. மதுரை, தமிழகத்தில் சென்னைக்கு அடுத்த இரண்டாவது பெரிய நகரமாகும்.

## இயற்கை அமைப்பு

இத்தகு சிறப்பு மிக்க மதுரையைத் தலைநகரமாகக் கொண்ட மதுரை மாவட்டம் நீர்வளம், நிலவளம் மிகுந்த பகுதியாகும். தமிழகத்தில் இது நான்காவது பெரிய மாவட்டமாகும். மேற்கில் கேரளமும், வடமேற்கில் கோயம்புத்தூர் மாவட்டமும், வடகிழக்கில் திருச்சிராப்பள்ளி மாவட்டமும், தெற்கிலும் தென்கிழக்கிலும் இராமநாதபுரம் மாவட்டமும் இதன் எல்லைகளாகும். மதுரை மாவட்டத்தின் பரப்பு 4,869 சதுர மைல்களாகும். மதுரை, மேலூர், திண்டுக்கல், கொடைக்கானல், நிலக்கோட்டை, பழனி, திருமங்கலம், பெரியகுளம் ஆகிய எட்டு வட்டங்கள் உள்ளன.

மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள பொற்றாமரைக் குளம்



ஆண்டிபட்டி, பழனிமலை, சிறுமலை, காந்தமலை, நத்தம், அழகர் மலை முதலிய மலைத் தொடர்கள் உள்ளன. வைகையும் அதன் துணை ஆறுகளான சுருளியும், வராக ஆறும் பாய்கின்றன. நெல், பிற சிறுதானிய வகைகள், வேர்க்கடலை, கரும்பு, முந்திரி, பருத்தி முதலியன பயிராகின்றன. காடுகளில் அரக்கு , வாட்டில், தேக்கு முதலியன விளைகின்றன. குன்றுகளில் ஏலம், காப்பி, தேயிலை வெள்ளைப்பூண்டு, வாழை முதலியன பயிராகின்றன.

1950—51-ல் 1,53,500 டன் நெல் உற்பத்தியாயிற்று. 1959—60-ல் நெல் உற்பத்தி சுமார் 2,40,000 டன்னாக உயர்ந்திருக்கிறது. நிலக்கடலை 53,690 டன்னிலிருந்து 1,02,000 டன் அளவிற்கு உற்பத்தி உயர்ந்திருக்கிறது. சிறுதானிய வகைகள் 1950—51-ல் 1,08,670 டன் உற்பத்தியாயின. தற்போது 2,53,000 டன் அளவிற்கு உற்பத்தி உயர்ந்திருக்கிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு 4,31,500 ஏக்கர்கள் மட்டுமே பாசன வசதி பெற்றிருந்தன. வைகை நீர்த்தேக்கம் போன்ற பாசன வசதிகளால் தற்போது 4,66,705 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. இந்த மாவட்டத்தில் 1960—61-ல் மழை அளவு 1,060 மில்லி மீட்டர் ஆகும். பத்து ஆண்டுகளில் இதுதான் அதிக மழை அளவாகும். குறைந்த அளவு மழை 1952—53-ல் 660 மில்லி மீட்டர் ஆகும்.

### மக்கள் தொகை

இந்த மாவட்டத்தில் மக்கள் தொகை சுமார் 32,04,866 ஆகும். அவர்களுள் ஆண்கள் 16,06,809 பேர்; பெண்கள் 15,98,057 பேர். 1951-ல் ஒரு சதுர மைலுக்கு 658 பேர் இருந்தனர். 1951 கணக்கெடுப்பின்படி பிறப்பு சதவீதம் 23·29 ஆகவும், இறப்பு சதவீதம் 15·36 ஆகவும் இருந்தன. 1960-ல் பிறப்பு வீதம் 18·4 ஆகவும், இறப்பு வீதம் 8·5 ஆகவும் உள்ளன. பத்து ஆண்டுகளில் 11 சதவீதம் மக்கள் தொகை உயர்ந்திருக்கிறது.

நாடு சுதந்திரம் பெற்றதும், இந்த மாவட்டத்தின் நிலவளத்தைப் பெருக்கியதோடு நின்றுவிடாமல், அறிவு வளத்தைப் பெருக்கவும் சிறந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஊர்தோறும் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் ஆறு கல்லூரிகள் இருக்கின்றன. பழனியில் ஓரியண்டல் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தற்போது மொத்தம் 10,33,827 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தோர் உள்ளனர். பத்து ஆண்டுகளில், ஏறக்குறைய பதினொரு சதவீதம் அளவிற்கு எழுதப் படிக்கத் தெரிந்தோர் தொகை உயர்ந்திருக்கிறது.

வேளாண்மைத் தொழிலுடன், ஏறக்குறைய 75,000 மக்கள் பல்வேறு குடிசைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். பஞ்சாலைத் தொழில், தோல் பதனிடுதல், தீக்குச்சி உற்பத்தி, கைத்தறி நெசவு, பூட்டு உற்பத்தி, பனை வெல்ல உற்பத்தி முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. திண்டுக்கல், பூட்டுத் தொழிலுக்கும் தோல் பதனிடும் தொழிலுக்கும் பெயர் பெற்றது. நத்தத்தில் கால் அணி செய்யும் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. கைத்தறித் தொழிலை நம்பி இந்த மாவட்டத்தில் ஏறக்குறைய முப்பதாயிரம் மக்கள் வாழ்கின்றனர். இந்த மாவட்டத்தில் உற்பத்தியாகும் கரும்பில் பெரும் பகுதி, பாண்டியராசபுரம் சர்க்கரை ஆலைக்குப் பயன் படுகிறது.



மதுரை மாரியம்மன் தெப்பக்குளம்

இங்ஙனம், துறைதோறும் இந்த மாவட்டம் வளர்ச்சி பெற்று, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகிறது. இரண்டு ஐந் தாண்டுத் திட்டங்களால் வேளாண்மை, பாசனம், மின்சாரம், தொழில்கள், கல்வி, போக்குவரத்து, சமூக நலன் ஆகியவற்றில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

———




புனலின் பெருமையைப் போற்றுதார் எவரும் இலர். உலகை வாழவைக்கும் மழையை அமிர்தம் என்று திருவள்ளுவர் கூறினர். "நீர் இன்று அமையாது உலகு" என்பதை அந்தப் புலவர் உணர்த்தினர். அதனல் தான் பாய்ந்துவரும் புனலை அன்னையெனக் கருதி நம் முன்னேர் வழிபட்டனர். புனல் வளத்தைப் பெருக்குவதே தலையாய பணியென்று பண்டைய தமிழ் மன்னர் கருதினர்.

மக்களாட்சி மலர்ந்திருக்கும் இந்நாளில் சுதந்திர அரசாங்கம் புனல் வளம் பெருக்கும் பணியில் சிறந்த ஆர்வம் காட்டி வருகிறது. முதல் திட்டக்காலத்தில் தமிழகத்தில் 12·34 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. அதன் விளைவாக 1·32 லட்சம் ஏக்கருக்குப் புதிதாகப் பாசன வசதி ஏற்பட்டது. இரண்டாவது திட்டக்காலத்தில் 11 பாசனத் திட்டங்கள் முடிவுற்றன. அதன் பயனுக மேலும் 2·09 லட்சம் ஏக்கர்களுக்குப் புதிய பாசன வசதி ஏற்பட்டதுடன், 1·24 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு முன்பு கிடைத்து வந்த பாசன வசதி நிலைப்படுத்தப்பட்டது. முதல் திட்டக் காலத்

தொடக்கத்தில் 21·95 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெற்றிருந்த தற்குப் பதிலாகத் தற்போது 25·36 லட்சம் ஏக்கர்கள் பாசன வசதி பெற்றுள்ளன. சென்ற பத்து ஆண்டுகளில் ஏரி, குளங் களைச் சீர்படுத்த, சுமார் 8 கோடி ரூபாய் அளவிற்குச் செலவு ஆகியிருக்கிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் குளங்கள் சீரமைப்புத் திட்டத்தின்மூலம் 47 குளங்கள் ரூ. 36·44 லட்சம் செலவில் சீரமைப்புச் செய்யப்பட்டன. கிணற்றுப் பாசன வசதியைப் பெருக்குவதற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் சுமார் 90 லட்சம் ரூபாய் செலவில் 6,000 கிணறுகள் வெட்ட உதவி அளிக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல், சென்ற பத்தாண்டு களில் சுமார் 5,000 வடிகுழாய்க் கிணறுகள் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு, புனல் வளம் பெருக்கும் மரபு மங்கிவிடாதபடி காத்து வருகிறது.

**புலவர் போற்றும் வைகை**

மதுரை மாவட்டத்தின் புனல் வளம் என்றதும் வைகையின் நினைவு வராமல் இராது. அதன் பெருமையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் மிகச் சிறப்பாகப் போற்றுகின்றன.

"வையை யென்ற பொய்யாக் குலக்கொடி"

என்று சிலப்பதிகாரம் போற்றுகிறது. வைகையில் புதுப்புனல் வருவது பற்றியும், அதில் நீராடி மகிழும் மக்களைப் பற்றியும் நமது நூல்கள் நயம்பட உரைக்கின்றன. வைகை ஆற்றினைத் "தமிழ் வைகை" என்று அவை குறிப்பிடுகின்றன.

புலவர் போற்றும் இத்தகைய வைகையே மதுரை மாவட்டத் தின் சிறப்பான ஆறாக விளங்குகிறது. அத்துடன் மஞ்சளாறு, வராகநதி ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இந்த மாவட் டத்தின் ஆண்டுச் சராசரி மழை 30 அங்குலமாகும். பெரியாற்றின் குறுக்கேயுள்ள அணையின் மூலம் 1,20,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. நெல், கரும்பு, வாழை ஆகியவை பெரியாற்றுப் பாசனப் பகுதிகளில் பயிரிடப் படுகின்றன.

வைகை ஆற்றுடன் முல்லையாறு, சுருளியாறு முதலியன கலக் கின்றன. வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கம் மதுரை மாவட்டத்தில் பாசன வசதிகளைப் பெருக்கியுள்ளது. இந்தத் தேக்கம், பெரியகுளம் வட்டத்தில் ஆண்டிபட்டிக் கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ளது. பெரியாற்றின் குறுக்கேயுள்ள அணையால் பாசன வசதி பெறும் நிலங்கள் போக, எஞ்சிய நீர் வீணாகாமல்

தடுக்கவே இந்தத் தேக்கம் கட்டப்பட்டது. இதற்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 83·41 லட்சமும், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 174 லட்சமும் செலவிடப்பட்டன. இந்தத் தேக்கத்தின் கொள்ளளவு 68,000 லட்சம் கன அடி. அணையின் நீளம் 11,675 அடி. ஆற்று மட்டத்திலிருந்து அதன் உயரம் 110 அடியாகும். தேக்கம் பெருகி, உச்ச மட்டத்தை அடையும்போது 9·4 சதுர மைல்களுக்கு நீர் பரவி நிற்கும்.

மின்சார உற்பத்திக்கு வழிவகுக்கும் வகையில் 10 அடி குறுக்களவுள்ள இரண்டு பென்ஸ்டாக் குழாய்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனால் பெரியாறு சமவெளிப் பகுதிகளுக்கு



வைகை அணை

நிலையான பாசன வசதிகள் ஏற்படும். மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், மேலூர் வட்டங்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகெங்கை, திருப்பத்தூர் வட்டங்களுக்கும் பாசன வசதி ஏற்படுகிறது. இந்தத் தேக்கத்திலிருந்து மதுரை நகரத்திற்குத் தண்ணீர் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. திருமங்கலம் வட்டத்தில் 10,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் அளிப்பதற்காக $17\frac{1}{2}$ மைல் நீளமுள்ள ஒரு கால்வாய் வெட்டப்பட்டுள்ளது.

1958-ம் ஆண்டு பாசனத்திற்குத் தண்ணீர் விடப்பட்டது. 1959-60-ம் ஆண்டில் 11,884 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றது. 1960 ஜூலை முதல் திருமங்கலம் கால்வாயின் கீழ் உள்ள



திருமங்கலம் கால்வாய்

மொத்தப் பரப்பான 10,384 ஏக்கர் நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கப்பட்டது. 1960-ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து பெரியாறு டெல்டா பகுதிகள் உள்ளிட்ட 18,818 ஏக்கர் நிலங்களுக்கு நீர் விடப் பட்டது. அணைக்கட்டுப்பகுதியில் ரூ. 2·5 லட்சம் செலவில் பூங்காவும், தோட்டமும் நிர்மாணிக்கப்பட்டன. அவைகளைக் காணவரும் பொது மக்களுக்காக ரூ. 70,000 செலவில் ஓய்வுஇல்லமும், ஊர்தி நிலைய மும் அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்காக ஓர் ஓய்வு இல்ல மும், சீர்ப் பயணம் வருவோர்களுக்கான ஓய்வு விடுதியும் ரூ. 15,000 செலவில் கட்டப்பட்டுள்ளன. இந்த வகையில் மதுரை மாவட்டத் தில் குறிப்பிடத்தக்க முறையில் வைகை நீர்த்தேக்கம் திகழ்ந்து வருகிறது. ரூ. 25 லட்சம் செலவில் பெரியாற்றின் நீர்க்கழிவாய் தாழ்த்தப்பட்டதால், 4,000 ஏக்கர்நிலம் பாசன வசதி பெறுகிறது.

சிறுபாசனத்திற்காகக் கடந்த பத்தாண்டுகளில்ரூ. 8·38 லட்சம் செலவிடப் பட்டது. திட்டக் காலத்தில் 188வேலைகள் முடிக்கப் பட்டன. இவற்றின் விளைவாக சுமார் 32, 980 ஏக்கர் ஆயக்கட்டு பாசன வசதி பெற்றது. சுமார் 6,120 டன் அதிக உணவு உற்பத்தி யானது.

இந்த மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 2·55 லட்சம் கடன் வழங்கப்பட்டது. 150 க்கு மேற்பட்ட வடிமுனைக் குழாய்க்கிணறுகள் இறக்கப்

பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் 122 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்கப்பட்டன. 1950-51-ல் 548 ஆயில் என்ஜின்களும், 728 மின்சாரப் பம்புசெட்டுகளும் இயங்கின. 1961-ல் அவை முறையே 1,096 ஆகவும், 6,416 ஆகவும் அதிகரித்தன.

மதுரை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாசன வசதிகள் வருமாறு:

| பாசன ஆதாரம் | பாசன வசதி 1950-51 (ஏக்கர்கள்) | 1959-60 (ஏக்கர்கள்) |
|---|---|---|
| அரசாங்கக் கால்வாய்கள் மூலம் | 1,24,014* | 1,49,906 |
| குளங்கள் ,, | 95,400 | 1,41,962 |
| கிணறுகள் ,, | 1,50,300 | 1,67,324 |
| ஊற்றுக் கால்வாய் போன்ற பிற பாசன ஆதாரங்கள் மூலம் | 3,900 | 7,013 |
| ஒருதடவைக்கு மேல் பாசன வசதி பெற்றவை | 97,331 | 1,63,848 |

*1954-55-ம் ஆண்டிற்கு உரியது.

இங்ஙனம் மதுரை மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளில் சிறந்த முறையில் பாசனவசதிகள் ஏற்பட்டுள்ளன. பூம்புனல் ஊட்டும் பொலிவு மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

# உற்பத்தி உயர்வு

வற்றாத ஆறுகளும், வளமிக்க வயல்களும் ஒரு நாட்டிற்குச் சிறப்பு அளிக்கக்கூடியவை. பசியும் பிணியும் இன்றி, வாழ்வதையே அனைவரும் விரும்புவர். வயிற்றுப் பசியால் வாடும் மக்களின் வாட்டம் போகும் வகையில் கழனிகளில் விளைவின்பம் ஏற்பட்டால் தான் நாடு நாடாகத் திகழமுடியும். அதனால்தான் நாட்டிற்கு இலக்கணம் கூறிய திருவள்ளுவர்,

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு "

என்று குறிப்பிட்டார். பழங்காலத்தில் தமிழகத்தை ஆண்ட முடி மன்னர்கள் இந்த உண்மையை மறந்துவிடவில்லை. " உழுவார் உலகத்தார்க்கு ஆணி " என்பதை உணர்ந்து, உழவுச் செல்வத்தைப் போற்றி வளர்த்தனர். வரப்பு உயரவும், அதனால் மக்கள் வாழ்வு உயரவும் நற்பணிகள் ஆற்றினர்.

சுதந்திர அரசாங்கம் வேளாண்மைத் துறையில் சிறந்த பணிகளை ஆற்றிவருகிறது. நாடு விடுதலை பெற்ற வேளையில், உணவுப் பற்றாக் குறை மிகுந்திருந்தது. வேளாண்மை முறைகளில் அவ்வளவாகப்



பல தொழில்களுக்குத் தாய்த்தொழிலான உழவுத்தொழில்

புதுமை இல்லை. போதிய பாசன வசதிகள் ஏற்படவில்லை. இந்தக் குறையைத் தீர்ப்பதற்காக, முதல் திட்டத்தில் வேளாண்மை அபிவிருத்திக்கு முதன்மையான இடம் கொடுக்கப்பட்டது. முதல் திட்டக் காலத்தில் தமிழகத்தில் உணவு உற்பத்தி 38 லட்சம் டன்களிலிருந்து சுமார் 44 லட்சம் டன்களாக அதிகரித்தது. தற்போது உணவு உற்பத்தி ஏறக்குறைய 52 லட்சம் டன்களாக உயர்ந்திருக்கிறது. நெல் மட்டும் சென்ற பத்தாண்டுக் காலத்தில் 16 லட்சம் டன் அளவிற்கு அதிக உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. இந்த முன்னேற்றம் வளமான பாதையில் நாடு மேம்பாடு அடைந்து வருகிறது என்பதைக் காட்டுகிறது.

வேளாண்மைத் துறையில், மதுரை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறிப்பிடத் தக்கதே. சிறப்பாக திருமங்கலம், பழனி, பெரியகுளம், திண்டுக்கல் ஆகிய வட்டங்களில் வேளாண்மை சிறப்பான முறையில் விளங்குகிறது. இந்த மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 31,15,718 ஏக்கர் ஆகும். அவற்றுள் 3,94,105 ஏக்கர்கள் காடுகளாகும். சாகுபடி நிலங்கள் 11,70,342 ஏக்கர்கள்.

நெல்லும், சிறுதானியங்களும் இந்த மாவட்டத்தில் முக்கியமாகப் பயிராகின்றன. பருத்தி, நிலக்கடலை, மிளகாய், கரும்பு முதலியவை

யும் சாகுபடியாகின்றன. மலைத் தோட்டங்களில் காப்பியும், ஏலமும் பயிரிடப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளில் புதிதாகச் சாகு படிக்குக் கொண்டு வரப்பட்ட நிலப்பரப்பு பின்வருமாறு:

| பயிர் | 1950-51 ஏக்கர் | 1959-60 ஏக்கர் |
|---|---|---|
| நெல் | 3,16,436 | 3,69,467 |
| சிறுதானியம் | 5,49,682 | 6,03,691 |
| பருத்தி | 1,05,713 | 1,27,165 |
| நிலக்கடலை | 1,65,208 | 2,22,034 |
| மிளகாய் | 10,912 | 13,784 |
| காப்பி | 12,220 | 17,990 |
| ஏலம் | 3,107 | 10,454 |

உரங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் பாசன வசதிகளை அதிகப்படுத்தி புது வேளாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் உற்பத்தியைப் பெருக்க, திட்டக் காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றால் அதிகமான உணவு உற்பத்தி ஏற்பட்டது: அவையாவன.

| பயிர் | உற்பத்தி 1950-51 டன்கள் | உற்பத்தி 1959-60 டன்கள் |
|---|---|---|
| நெல் | 1,53,500 | 2,40,000 |
| சோளம், கம்பு, ராகி | 1,08,670 | 1,53,000 |
| நிலக்கடலை | 53,690 | 1.02,000 |
| கரும்பு | 2,95,900 | 3,65,000 |
| பருத்தி | 30,290* | 40,360* |

*392 ராத்தல் கொண்ட பேல்கள்

இந்த மாவட்டத்திலிருந்து பெரும் அளவில் அரிசி இராமநாத புரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது.

ஆள் ஒன்றுக்கு 14 அவுன்ஸ் உணவு தானியம் என்று கணக்கிட்டால், சுமார் 32 லட்சம் மக்கள் தொகையுள்ள இந்த மாவட்டத்திற்கு சுமார் 4 லட்சம் டன்கள் உணவு தானியம் தேவைப்படும். இந்தக் கணக்கின்படி, இந்த மாவட்டம் இரண்டு திட்டங்களின் இறுதியில் தன்னிறைவு பெறும் கட்டத்தில் இருப்பதை உணரலாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் 18 வேளாண்மை டிப்போக்கள் இருந்தன. இரண்டாம் திட்டக் கால முடிவில் அவை 30 ஆக அதிகரித்தன. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு வேளாண்மை அதிகாரியும், மூன்று உதவியாளர்களும் உள்ளனர். நிர்வாக வசதிக்காக 1958 ஜுலை முதல் வடக்குப் பிரிவு, தெற்குப் பிரிவு ஆக இரு பிரிவுகளாக மதுரை மாவட்டம் பிரிக்கப்பட்டது. தெற்குப் பிரிவுக்கு மதுரையும், வடக்குப் பிரிவுக்குத் திண்டுக்கல்லும் தலைமை இடங்களாகும்.

**விதைப் பண்ணைகள்**

உயர்தர விதைகள் வழங்குதல் வேளாண்மைத் துறையின் பெரும் பணிகளில் ஒன்று. நெல், சிறுதானியங்கள், நிலக்கடலை ஆகியவற்றின் உயர்தர விதை வகைகளை உற்பத்தி செய்வதற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ஆறு விதைப் பண்ணைகள் இந்த மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட உயர்தர நெல் விதைகள் மாவட்டமெங்கும் விநியோகிக்கப்பட்டன.

நம் நாட்டில் ஜப்பானிய முறை நெல் சாகுபடி 1953-ல் பின்பற்றப்பட்டது. இந்தச் சாகுபடி முறைக்கு உயர்தர விதைகளை உபயோகித்தல், அதிக அளவு இரசாயன உரங்களை உபயோகித்தல், வரிசையில் நடுதல், ஊடு சாகுபடி ஆகியவை முக்கியத் தேவைகளாகும். மாவட்ட வேளாண்மைத் துறைப் பணியாளர்களின் தீவிரப் பிரச்சாரத்தால் இச்சாகுபடி முறை உழவர்களிடையே பெருத்த ஆதரவைப் பெற்றுள்ளது. முதல் திட்டக் காலத்தில் 2,371 இடங்களில் இம்முறை பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதியில் 20,000 ஏக்கர் நிலங்களில் இம்முறை கையாளப் பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் இந்த முறை இன்னும் தீவிரப்படுத்தப்படவே, 2,82,000 ஏக்கர் நிலங்களில் இம் முறை கையாளப்பட்டது.

உணவு உற்பத்தி பெருக, விளைச்சல் பெருகவேண்டும். உழவர்கள் ஆர்வத்தோடு பணியாற்றினால் இந்த எண்ணம்

நிறைவேறும். அந்த ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கரும்பு, நிலக்கடலை, நெல் முதலிய சாகுபடிகளில் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டன. முதல் திட்டக் காலத்தில் 3,976 உழவர்கள் போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டனர். இரண்டாவது திட்டக் காலத்தில் போட்டிகளில் வெற்றி பெற்ற உழவர்களுக்கு ரூ. 1,360 மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்பட்டன.

**உர வகைகள்**

ஆர்வத்தோடு பாடுபடும் உழவர்களுக்கு உதவும் வகையில் சூப்பர் பாஸ்பேட், அம்மோனியம் சல்பேட் முதலிய இரசாயன உரங்கள் குறைந்தவிலைகளில் வழங்கப்பட்டன. தீவிர எருவிடும் திட்டத்தின் கீழ் இரசாயன் உரங்களை வாங்குவதற்காக உழவர்களுக்கு விசேஷக் கடன் கொடுக்கப்பட்டது. யூரியா, அம்மோனியம் சல்பேட், நைட்டிரேட் போன்ற இராசயன உரங்கள் உழவர்களிடையே பிரபல்யப்படுத்தப்பட்டன. இரண்டாவது திட்டக்காலத்தில் 2,90,000 டன் இராசயன உரங்கள் விநியோகிக்கப்பட்டன. அவை 4,76,409 ஏக்கர் நிலங்களுக்குப் பயன் படுத்தப்பட்டன. அதன் விளைவாக, உணவுப் பொருள்கள் 63,326 டன்கள் அதிக உற்பத்தியாயின.

• முதல் திட்டக் காலத்தில் கிராமப்புறக் கலவை எரு 68,636 டன்கள் தயாரிக்கப் பட்டு, 13,726 ஏக்கர் நிலங்களுக்குப் பயன் படுத்தப்பட்டன. இதனால் 1,716 டன் உணவுப் பொருள் கூடுதல் உற்பத்தி ஏற்பட்டது. இரண்டாவது திட்டக்காலத்தில் 1,42.690 டன்கள் கலவை எரு தயாரிக்கப்பட்டு, 25,538 ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. இதனால் கூடுதலாக 7,134 டன் விளைச்சல் கிடைத்தது.

நகர்ப்புறக் கலவை எருத்திட்டத்தின் கீழ் நகராட்சி மன்றங்களும், மாவட்டக் கழகமும் முதல் திட்டக்காலத்தில் 1,43,626 டன் கலவை எருக்களைத் தயாரித்தன. கலவை எருக்கள் 28,724 ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. கூடுதலாகக் கிடைத்த விளைச்சல் 3,590 டன்களாகும். இரண்டாவது திட்டக் காலத்தில் 1,34,355 டன்கள் எரு தயாரிக்கப்பட்டன. அவை 26,871 ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. கூடுதலாகக் கிடைத்த விளைச்சல் 6,718 டன்களாகும். முதல் திட்டக்காலத்தில் 113 டன் தழை உரங்கள் தயாரிக்கப்பட்டன. 6,355 ஏக்கர் நிலங்களுக்குப் பயன் படுத்தப்பட்டன. இதனால் கூடுதலாகக் கிடைத்த விளைச்சல் 578 டன்கள் ஆகும். இரண்டாவது திட்டக் காலத்தில் 368 டன் தழை உரங்கள் தயாரிக்கப்பட்டன.

55,250 ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. இதனல் 5,520 டன் விளைச்சல் கூடுதலாயிற்று.

சாகுபடி செய்யப்படாத நிலங்களையும், தரிசு நிலங்களையும் பண்படுத்துவதற்காக, உழவர்களுக்கு வேளாண்மை இயந்திரங்களை அளித்து உதவுவதே நில அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பத்து டிராக்டர்கள் பயன்படுத்தப்பட்டன. தவணை முறையிலும் இவை வழங்கப்பட்டன. உழவர்களிடையே ஆர்வம் ஏற்படும் வகையில், இரண்டாம் திட்டக் காலத்தில் 15,000க்கு மேற்பட்ட வேளாண்மைக் கருவிகள் குறைந்த விலையில் வழங்கப்பட்டன.

### பயிர்ப் பாதுகாப்பு

வேளாண்மைத் துறையில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை முக்கியமானதாகும். பயிர்களைப் பூச்சிகள் அழித்துவிடாதபடி பாதுகாப்பதே இதன் நோக்கம். முதல் திட்டக் காலத்தில் 78,321 ஏக்கர்களுக்காக, 208 டன் பூச்சி கொல்லும் மருந்துகள் விநியோகிக்கப்பட்டன. கூடுதலாகக் கிடைத்த விளைச்சல் 3,914 டன்களாகும். இரண்டாவது திட்டக்காலத்தில் 3.37,447 ஏக்கர் நிலத்திற்காக 574 டன் மருந்துகள் விநியோகிக்கப்பட்டன. இதனுல் கூடுதலாகக் கிடைத்த விளைச்சல் 16,894 டன்கள் ஆகும்.

உழவர்களுக்குத் துணை வருவாய் தேடித்தரும் வகையில், முதல் இரு திட்டக் காலங்களில் 500க்குமேற்பட்ட தேன் கூடுகள் விநியோகிக்கப்பட்டன.



கொடைக்கானல், திண்டுக்கல், பெரியகுளம் ஆகிய வட்டங்களில் தோட்டக்கலை அபிவிருத்திக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன. பழமரங்களை வளர்க்கும் நிலப்பரப்பை அதிகப்படுத்தவும், தற்போதுள்ள பழமரத் தோட்டங்களைச் சீர் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதல் திட்டக் காலத்தில் பெரிய குளத்தில் ஒரு பழத்தோட்டம் அமைக்கப்பட்டது. இரண்டாம் திட்



கனி குலுங்கும் தோட்டம்

டக் காலத்தில் அலுவலகத்திற்காகவும், அலுவலர்களுக்காகவும் ரூ. 24,000 செலவில் கட்டிடங்கள் கட்டப்பட்டன. மா, எலுமிச்சை, கொடி முந்திரி ஆகியவற்றிற்கு வேண்டிய வளர்ப்பு முறைகளையும், பாசனத் தேவைகளையும் பற்றிய ஆராய்ச்சி பெரிய குளத்திலுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டது. இங்குள்ள பழச் செடி வளர்ப்புப் பண்ணையில் விதைகளும், பழச்செடிகளும் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. முதல் திட்டக் காலத்தில் 1,67,481 பழச் செடிகளும் வினியோகிக்கப்பட்டன. இரண்டாம் திட்டக் காலத்தில் இவ்வேலைகள் தீவிரமாக்கப்பட்டன. நல்ல பழ மரங்களை வளர்ப்போருக்குப் புதிய பழமரங்களை நடுவதற்காக ஏக்கருக்கு ரூ. 300 வீதம் நீண்ட காலக் கடன் கொடுக்கப்பட்டது. பழைய பழ மரத் தோட்டங்களைப் புதுப்பிப்பதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 65 வீதம் குறைந்த காலக்கடன் கொடுக்கப்பட்டது.

இந்த மாவட்டத்திலுள்ள ஏலத்தோட்ட உரிமையாளர் பலருக்கு கேரளாவிலேயே பண்ணைகள் உள்ளன. அங்கு விளையும் ஏலமும், இந்த மாவட்டத்தில் விளையும் ஏலமும், தேவிபுரம், பண்ணைப் புரம், உத்தமபாளையம், போடி நாயக்கனூர், கம்பம், கோம்பை ஆகிய இடங்களில் உள்ள விற்பனைக் கடைகள் மூலமே விற்பனையாகின்றன.

## காடுகள்

ஒரு நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 33·3 சதவீதம், காடுகளாக இருக்க வேண்டுமெனத் தேசீய வனக் கொள்கை வலியுறுத்துகிறது. நமது தமிழ் நாட்டில் இப்போது 6,718 சதுரமைல் பரப்பளவுள்ள ஒதுக்கக் காடுகள் உள்ளன. இவை தவிர சுமார் 1,550 சதுர மைல் பரப்பளவுள்ள முன்னாள் ஜமீன் காடுகளும் இருக்கின்றன. நமது மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் காடுகளின் பரப்பு 17 சதவீதம் ஆகும். எனவே நமது மாநிலத்தின் காடுகளை மேலும் வளர்க்க வேண்டியது மிக இன்றியமையாதது. முன்னாளில் பஞ்சாயத்துக்களையும், ஜமீன்களையும் சேர்ந்திருந்த காடுகளை மாநிலக் காட்டுத் துறையினர் தங்கள் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொண்டு விட்டனர். இக்காடுகள் அழிந்து போகாமல் பாதுகாத்து வளர்க்கப் பெரிய அளவில் காட்டு அபிவிருத்தி வேலைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்றன.

மதுரை மாவட்டத்தில் அடர்ந்த காடுகள் உள்ளன. 1950-51ல் 3,60,005 ஏக்கர்களில் காடுகள் இருந்தன. தற்போது 3,94,195 ஏக்கர்களில் காடுகள் உள்ளன.

தேக்கு வளர்ப்பு





திராட்சைத் தோட்டம்

கால்நடைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்குப் புல் படுகைகளையும், மேய்ச்சல் நிலங்களையும் அபிவிருத்தி செய்வது அவசியம் என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது. கடந்த பத்தாண்டுகளில் மதுரை வடக்குப் பிரிவில் 1,060 ஏக்கர் பரப்புள்ள மேய்ச்சல் நிலங்கள் ரூ. 15,700 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டன.

## முந்திரி

முந்திரி ஒரு முக்கியப் பயிராகும். மதுரை தெற்குப் பிரிவில் 60 ஏக்கர் நிலப்பரப்பு முந்திரிச் சாகுபடியின் கீழ் கொண்டுவரப் பட்டது. இதற்காக ரூ. 3,000 செலவிடப்பட்டது.

கடந்த பத்தாண்டுகளில் ரூ. 1,29,700 செலவில் 660 ஏக்கரில் தேக்கு முதலிய மரங்கள் பயிரிடப்பட்டன. மெல்லிய தீக்குச்சி மரங்கள், தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு நாளுக்கு நாள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. இந்தத் தேவையை நிறைவு செய்வதற்காகப் பொருத்தமான இடங்களிலெல்லாம் மென்மைத் தன்மை வாய்ந்த மரவகைகளைப் பயிர் செய்ய வேண்டுமென்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். முதல் இரண்டு திட்டக் காலங்களில் இந்த மாவட்டத்தில் 732 ஏக்கர் பரப்பில்

திக்குச்சி மரம் பயிர் செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 75,600 செலவிடப்பட்டது. தோல் பதனிடுதல், காகிதம் செய்தல் ஆகியவற்றிற்கு வாட்டில் மிக முக்கியமான மூலப்பொருள். தோல் பதனிடும் தொழிலுக்குத் தேவையான 'டானின்' என்ற நிறமாற்ற பொருள் நன்கு முதிர்ந்த வாட்டில் மரப்பட்டைகளி லிருந்து தயாரிக்கப்படுகிறது. தக்க இடங்களில் வாட்டில் வளர்க்க முயற்சி செய்யப்பட்டது. கொடைக்கானலில் உள்ள புல்வெளி களில் வாட்டில் வளர்க்கப்பட்டது. இரண்டாவது திட்டக்காலத்தில் 5330 ஏக்கர் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதற்காக ரூ. 3,64,000 செலவிடப்பட்டது, கொடைக்கானல் பகுதியில் ரூ. 14,600 செலவில் 422 ஏக்கர் பரப்பில் புனுகம் மரங்கள் நடப்பட்டன.

குன்றுப்பகுதிகளில் மண்சரிவைத் தடுத்து, மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் இரண்டு திட்டக் காலங்களில் ரூ. 94,300 செலவில் 3,477 ஏக்கர் பரப்பில் காடுகள் வளர்க்கப்பட்டன. ரூ. 1,50,000 செலவில் தெற்குப்பிரிவில் 3,250 ஏக்கர் பரப்பில் காடுகள் வளர்க் கப்பட்டன.

காடுகளுக்குச் சிறந்த முறையில் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்தில் காவல்காரர்களுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் பல இடங்களில் குடியிருப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டன. தெற்குப் பிரிவில் ரூ. 73,400 செலவில் 13 வீடுகள் கட்டப்பட்டன.

**வன விலங்குப் பாதுகாப்பு**

காட்டு விலங்குகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. ஏராளமான அளவில் வேட்டையாடிக் கொல்லப்படுவதால், அருகி வரும் வனவிலங்குகளுக்கும், ஏனைய வனவிலங்குகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. பழனிமலை வனவிலங்குப் பாது காப்புச் சங்கம் குறிப்பிடத்தக்க ஒரு அமைப்பாகும்.

மிகப் பழங்காலத்திலிருந்தே அரக்கு இந்தியாவில் விளைந்து வருகிறது. உலகத்திலுள்ள அரக்கு உற்பத்திசெய்யும் நாடுகளில் இந்தியா ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. அந்நியச் செலாவணி பெற்றுத்தரும் வாய்ப்பும் இதற்குள்ளது. ஆயின், தமிழ்நாட்டில் பெருமளவு உற்பத்தி செய்யப்படவில்லை. அதனால் இரண்டாம் திட்டத்தில் அரக்கு உற்பத்தியில் அக்கறை காட்டப்பட்டது. மதுரை மாவட்டத்திலுள்ள வண்ணாத்திப்

பாறைப் பள்ளத்தாக்கில் 1930-ம் ஆண்டிலிருந்தே அரக்கு தயாரிக்கப்படுகிறது. இரண்டாம் திட்டக்காலத்தில் வண்ணத்திப் பாறை விஸ்தரிப்புப் பண்ணை, காந்த மலைப்பண்ணை, சிறுமலைப் பண்ணை ஆகியஇடங்களில் அரக்கு நிலையங்கள் அமைக்கப்பட்டன. கடந்த மூன்றாண்டுகளில் அரக்கு உற்பத்தி அதிகரித்து வந்திருக்கிறது. 1958—59-ல் 33,390 பவுண்டு அரக்கு உற்பத்தி செய்யப்பட்டது. 1960—61-ல் உற்பத்தி 38,883 பவுண்டாக அதிகரித்துள்ளது. மொத்தத் தமிழ் நாட்டில் உற்பத்தியான அரக்கு 47,280 பவுண்டாகும். கடந்த பத்தாண்டுகளில் மதுரை தெற்குப் பிரிவில் 320 ஏக்கர் பரப்பில் புளிச்சி மரங்கள் நடப்பட்டன. இதற்கு ரூ. 5,800 செலவிடப்பட்டது.

## விலங்குச் செல்வம்

வேளாண்மை வளர்ச்சிக்குக் கால்நடை அபிவிருத்தி மிகவும் அவசியமாகும். நாட்டின் கிராமப் பொருளாதாரத்தில் கால்நடைகள் முக்கியப் பங்கு கொள்கின்றன. அவற்றின் நல்வாழ்வு மக்களுக்கு உயிர்நாடி போன்றது. சென்ற பத்து ஆண்டுகளில் கால்நடை வளத்தைப் பெருக்குவதற்காகப் பல திட்டங்கள் நிறை

மதுரை மாட்டுத்தாவணி



வேற்றப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 234 கேந்திர கிராம நிலையங்களும், 39 செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது நம் மாநிலத்தில் சுமார் 97 லட்சம் பசுக்களும், 20 லட்சம் எருமைகளும், 70 லட்சம் செம்மறியாடுகளும், 38 லட்சம் வெள்ளாடுகளும், 104 லட்சம் கோழிகளும் உள்ளன.




கேந்திரக் கிராம நிலையம் : தர்மத்துப்பட்டி

மதுரை மாவட்டத்தில் 1951-ம் ஆண்டில் 22,72,082 கால்நடைகள் இருந்தன. இன்று 25,25,000 கால்நடைகள் உள்ளன. பத்தாண்டுகளில் ஏறக்குறைய 11 சதவீதம் உயர்ந்திருக்கிறது. கால்நடை அபிவிருத்தியைச் சிறந்த முறையில் கவனிப்பதற்காக வடக்குப் பிரிவு, தெற்குப் பிரிவு ஆக இரு பிரிவுகளாக இந்த மாவட்டம் பிரிக்கப்பட்டது. இரு கால்நடை மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். முதல்நிலை, இரண்டாம்நிலை வட்டாரங்களில் அபிவிருத்தி வேலைகளைக் கவனிப்பதற்காக 21 விஸ்தரிப்பு அதிகாரிகள் உள்ளனர்.

முதல் திட்டக்காலத்தில் பிரிமியம் திட்டம், அரசாங்கக் கால்நடை வினியோகத் திட்டம், செயற்கைக் கருத்தரிப்பு நிலையத் திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. தொப்பம்பட்டியில் ஒரு கேந்திரக் கிராம நிலையம் தொடங்கப்பட்டது. பொலி காளைகளைப் பராமரித்தல், மருத்துவ உதவி அளித்தல் ஆகிய வேலைகள் நடைபெற்றன.



காங்கயம் காளை

கேந்திரக் கிராமத் திட்டம், அகில இந்தியத் திட்டமாகும். விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி, கால்நடை இன அபிவிருத்தி செய்தல், முறையான தீவன வசதி செய்துதருதல், நோய்த் தடுப்பு ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். இதன் மூலம் கிராமப் பகுதிகளில்கால்நடைகளின் தரம் உயர்த்தப்படுகிறது. இதற்காகக் கிராமப் பகுதிகளில் செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்கள் அமைக்கப் பட்டன. ஒவ்வொரு நிலையத்தோடும் ஆறு கேந்திரக் கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தேவையான செயற்கை முறை கருத்தரிப்புச் சாதனங்களும், காளைகளும் அளிக்கப்பட்டுள்ளன. நிலையங்களில் தொழில் நுட்பமறிந்த பணியாளர்களும் உள்ளனர்

இந்த மாவட்டத்தில் 13 கேந்திரக் கிராம நிலையங்களும், 5 செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்களும் உள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் ஒரு உதவி மருத்துவ அதிகாரியும், எட்டு ஸ்டாக்மென்களும் உள்ளனர். இரண்டாவது திட்டக் காலத்தில் 9,050 பசுக்களுக்குச் செயற்கை முறையில் கருத்தரிப்புச் செய்யப் பட்டது. அந்த வகையில் 520 கன்றுகள் பிறந்தன.

**கன்று உதவித் திட்டம்**

கேந்திரக் கிராமப் பகுதிகளில் தோன்றிய கன்றுகள் பருவ மடையும் வரை, பாங்காக வளர்த்து, வேறு இடங்களில் இனப் பெருக்கத்துக்குப் பயன்படுத்துவது அவசியம். கால்நடைச் சொந்தக்காரர்கள் கன்றுகள் சிறியனவாக இருக்கும்போதே,

அவற்றை விற்றுவிடும் வழக்கம் உண்டு. அக்கன்றுகளைப் பருவ வயது வரை வளர்ப்பதற்கு ஊக்கமளிப்பதற்காகக் கன்றுக்கு மாதம் ரூ. 10 வீதம் பொருள் உதவி அளிக்கப்படுகிறது. இரண்டாம் திட்டக் காலத்தில் 750 கன்றுகளுக்கு உதவியளிக்கப்பட்டது.

கேந்திரக் கிராமத் திட்டம் செயல்படாத பகுதிகளில், கால் நடை அபிவிருத்திப் பணியைத் துவக்கி வைப்பது கேந்திரக் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஐயாயிரத்திற்கு மேற்படாத பசுக்கள், எருமைகள் உள்ள கிராமங்களில் விஸ்தரிப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 50 காளைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. அவற்றைப் பராமரிப்பதற்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு காளைக்கு மாதம் ரூபாய் 30 வீதம் வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் கோம்பை, கம்பம், ராசிங்கா புரம், உத்தமபாளையம், திருமங்கலம், திண்டுக்கல், சாணார்பட்டி, சிறுவத்தூர் ஆகிய எட்டு இடங்களில் விஸ்தரிப்பு நிலையங்கள் உள்ளன.

பொலி காளைகளை வாங்கும் உழவர்களை ஊக்குவிப்பதற்காகப் பொருள் உதவி அளிக்கப்படுகிறது. வட்டார வளர்ச்சி அதிகாரி மூலம், காளையின் விலையில் பாதி உதவியாக அளிக்கப்படுகிறது. அவற்றைப் பராமரிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் பிரிமியம் வழங்கப்படுகிறது.

**கோழி வளர்ப்பு**

கேந்திரக் கிராமப் பகுதிகளில் கோழி வளர்ப்பு அபிவிருத்தியைத் தீவிரமாகச் செய்யும் கருத்தோடு நெய்க்காரப்பட்டி, தொப்பம்பட்டி, ஆயக்குடி, இடைய கோட்டை ஆகிய இடங்களில் கோழித் தரப் பிரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

காந்திக் கிராமம் கோழிப் பண்ணைக்குரிய அலுவலகமும், அலுவலாளர் குடியிருப்பும் ரூ. 17,500 செலவில் கட்டப்பட்டன. கொடைக்கானல் கோழிப் பண்ணைக்கு ரூ. 17,500 செலவில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ரூ. 12,600 செலவில் காந்திக் கிராமத்தில் அடைகாப்பு இல்லம் அமைக்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது.

கால்நடைகளுக்குத் தொத்து நோய் ஏற்படாமல் தடுப்பதற்காக இந்த மாவட்டத்தில் இரு இயங்கும் மருத்துவப் பிரிவுகள் உள்ளன. அவசரக் காலங்களில் இவற்றின் பயன் அதிகமாகும்.

நோய்களைக் குணப்படுத்துவதற்காக மருத்துவ வசதிகள் சிறந்த முறையில் செய்து தரப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில்

மொத்தம் 21 கால்நடை மருத்துவ மனைகள் உள்ளன. அத்துடன் 8 முதல் உதவி நிலையங்களும் இருக்கின்றன.

## மீன் வளம்

குளிர்ந்த நீரையுடைய அழகிய தடாகம். அதில் வாளை மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. நீருண்ண வந்த பசுவின் மடியில் முட்டுகின்றன. பசுவோ, தனது கன்று முட்டியதென்று மனமுருகி விரைவாகப் பாலைச் சொரிகிறது. பால் வெள்ளத்தில் வாளைகள் தாவிக் குதிக்கின்றன. தாழம்பூவின் நிழலைக் கொக்கு என்று அஞ்சிய கெண்டை மீன்கள், தாமரை மலரில் புகுந்து மறைந்து கொள்கின்றன.

இப்படியொரு அழகான காட்சியைத் திருவிளையாடற் புராண ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார். நீரில் நெளியும் மின்னலாகத் துள்ளி ஓடும் மீன்களை செல்வங்களாகவே நாம் கருதுகிறோம். அதனால் தான் இன்று மீன் வளத்தைப் பெருக்கும் பணியில் சிறந்த கவனம் செலுத்தப்படுகிறது. மீன் மிகச் சிறந்த துணை உணவாக விளங்குகிறது.

தமிழகத்தில் 620 மைல் நீளக் கடற்கரை இருக்கிறது. உட் பகுதிகளில் 4 லட்சம் ஏக்கர் அளவுக்கு நீர்ப்பரப்புகள் உள்ளன. 3·5 லட்சம் மீனவர்கள் 415 உள்நாட்டுக் கிராமங்களிலும், 242 கடலோர மீன் பிடிப்புக் கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மீன் வளத்தைப் பெருக்கவும் மீன் அளத்திட்டம் முயல்கிறது. மீன்பிடித் தொழிலுக்கு வசதியாக உள்ள நீர்நிலைகளிலெல்லாம் விஞ்ஞான முறைப்படி மீன் பண்ணைகளை அமைக்கும் முறையைப் புகுத்துதல், மீன் குஞ்சுகளைச் சேகரித்து வழங்குதல், மாதிரி மீன் பண்ணைகளைச் செய்து காட்டுதல், விரைந்து வளர்ந்து இனத்தை அதிகமாகப் பெருக்கக் கூடிய மீன் இனங்களை, நீர் நிலைகளில் புதிதாக வளர்க்கத் தொடங்குதல் இன்னோரன்ன பல பணிகள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.



மதுரை மாவட்டத்தில் பல சிறந்த உள்நாட்டு நீர்நிலைகள் உள்ளன. வைகை ஆறு, சண்முக நதி ஆகிய ஆறுகள், பாசனக்

கிணறுகள், ஏரி, குளங்கள் முதலியவை மீன் பிடிப்பதற்கு ஏற்ற நிலையில் இருக்கின்றன.

மீன் வளத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மதுரை, நிலக்கோட்டை ஆகிய வட்டங்களில் ஏழு குளங்கள் அரசினரால் எடுத்துக் கொள்ளப் பட்டன. மாதிரி மீன் பண்ணைகள் மதுரை, கல்லுப்பட்டி, வடுக பட்டி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன.

இப்பண்ணைகளிலும், அரசினர் குளங்களிலும் விரைவில் பெருகி வளரக்கூடிய மீன் குஞ்சுகள் விடப்பட்டதுடன், தனிப்பட்ட நபர்களுக்கும், தேசிய வளர்ச்சித் திட்டப் பஞ்சாயத்துக்களுக்கும் அவை வழங்கப்பட்டன.

**மீன் வளர்ப்பு**

மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பழனி, பெரியகுளம், மதுரை ஆகிய இடங்களில் மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. மீன் பாசி வழங்குவதில் அச்சங்கங் களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டன.

கொடைக்கானல் ஏரியில் புது வகையான மீன்களை நிறைய வளர்த்து ஏரியை நிரப்பியதோடு, தூண்டில் போடுவோருக்கு உரிமைச் சீட்டும் வழங்கப்பட்டது. அதனால் அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் கிடைத்தது. மதுரை மாவட்டத்தில் மீன் வளர்ப்புக் குப் பயன்பட்ட நீர் நிலைகளின் பரப்பு 6,380 ஏக்கராக இருந்தது. ஐந்தாண்டுகளிலும் இவற்றில் இனவிருத்திக்காக விடப்பட்ட பல வகை மீன்களின் எண்ணிக்கை சுமார் 70 லட்சம் ஆகும்.

மேலும் வைகை அணைத் தேக்கத்தில் மீன் வளத்தை அபிவி ருத்தி செய்யும் பொருட்டு ஒரு புதிய திட்டமும் ஏற்படுத்தப்பட்டது. வைகை நீர்த்தேக்கம் 9·34 சதுர மைல் பரப்புள்ளது. வைகை ஆற்றின் மீன் வளத்தை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பு நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டதால் மேம்பாடடைந்துள்ளது. திட்டக் காலத்தில் மீன் குஞ்சுகள் சேகரிக்கப்பட்டு, உள்நாட்டு நீர் நிலை களில் வளர்க்கப்பட்டன.

மீன் வளர்ப்புக்கு அடிப்படையான சிறு மீன் குஞ்சுகளை மீனவர்கள் ஆயிரக் கணக்கில் பிடித்து, அவற்றை உடனேயே உபயோகப்படுத்தி விடுகின்றனர். அவர்கள் அடையும் பயன் மிக மிகக் குறைவு. இந்த மீன் குஞ்சுகளை அப்படி அழித்துவிடாமல் சேகரித்து, குளங்களில் விட்டால் அவை நன்ருய் வளர்ந்து அதிகப் பலன் தரும். இதற்காக மீன் அளத் துறையினர் மீன் குஞ்சுகளை ஆறுகளிலிருந்து சேகரித்துத துறைக்குச் சொந்தமான மீன் மாதிரி

வளர்ப்புப் பண்ணைகளிலும், குளங்களிலும் விடுகின்றனர். மதுரை, கல்லுப்பட்டி, கொடைக்கானல் ஆகிய இடங்களிலுள்ள மாதிரிப் பண்ணைகளிலிருந்து பிடிபட்ட மீன் 1,50,721 ராத்தல் ஆகும்.

மதுரை மாவட்டத்தில் திலேபியா எனப்படும் மீனும், குறவை, கேனஸ், கெழுத்தி போன்ற மீன்களும் கிடைக்கின்றன. எளிதிலும், விரைவிலும் வளரக்கூடியதும், ஆதாயமுள்ளதுமான மீன்கள்



மீன்குஞ்சு சேகரித்தல்

தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன. மாதிரிப் பண்ணைகளிலும், மற்றக்குளங்களிலும் அவை வளர விடப்படுகின்றன. இவை தவிர, குளிர்ந்த நீரில் உள்ள மீன்களாகிய கண்ணாடிக் கெண்டை, பொன் கெண்டை போன்றவைகளும், கழி முகங்களில் உள்ள பாலக் கெண்டை, கெண்டை மீன்களும், உதகை, கொடைக்கானல் போன்ற இடங்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன.

### கொடைக்கானல் ஏரி

கொடைக்கானல் ஏரி 96 ஏக்கர் பரப்புள்ளது. இந்த ஏரியில் கண்ணாடிக் கெண்டை, பொன் கெண்டை ஆகிய நீர் மீன்கள் வளர்கின்றன. ஏரிக்கு அருகிலேயே மாதிரி மீன் பண்ணையும் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு 6 மீன் வளர்ப்புக் குளங்கள் உள்ளன. மீன் ஆராய்ச்சி நிலையமாகவும் இப்பண்ணை விளங்குகிறது.

கொடைக்கானல், தென்னகத்தின் கோடை வாசஸ்தலமாக இருக்கும் காரணத்தால் கோடைக் காலங்களில் வெளிநாடுகளி

லிருந்தும் பலர் இங்கு வருகின்றனர். அப்படி வருபவர்களுக்கு ஒரு பொழுது போக்காக விளங்குவது தூண்டிலாகும். பார்வையாளர்கள் தூண்டில் போட்டு மீன் படிப்பதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள். இதற்குக் குறிப்பிட்ட கட்டணம் செலுத்த வேண்டும். தினந்தோறும் பிடிப்பதற்கும், மாதம் முழுவதும் பிடிப்பதற்கும், ஆண்டு முழுதும் பிடிப்பதற்கும் உரிமைச் சீட்டுகள் அளிக்கப்படுகின்றன.

கொடைக்கானலைச் சார்ந்துள்ள பேரிஜம் ஏரி, பாம்பன் நீர்த் தேக்கம், ப்ரையன்ட்-பார்க்குளம் ஆகிய மூன்றும் கண்ணாடிக் கெண்டை வளர்ப்பதற்கு ஏற்றதாயுள்ளன. இவைகளில் மீன் வளத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பழனி மலைச்சாரலில் பாம்பார், பரப்பார், குண்டார், கோணலார், புலவாச்சியார் போன்ற நீரோடைகள் ட்ரௌட் மீன் வளர்வதற்கு ஏற்றவையாய் உள்ளன. வைகை நீர்த்தேக்கத்திலும் மீன்வளம் செழிப்படைய ரோகு, மிர்கால், ஆட்லா, கெண்டை, வெண் மீன், திலேபியா ஆகிய மீன்கள் விடப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விடப்பட்ட மீன் குஞ்சுகள் மொத்தம் 8·99 லட்சம் ஆகும். இதனால், வைகை நீர்த் தொகுதி முழுவதிலும் மீன் வளம் மேம்பட்டு, இம்மாவட்டத்தின் மீன் தேவைப் பாட்டை நிறைவு செய்கிறது.

கொடைக்கானல் ஏரி



தேசிய வளர்ச்சித் திட்டமும் சமுதாய நலத்திட்டமும் மீன் அபிவிருத்தியில் பங்கு கொள்கின்றன. ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டத் தொகுதியும் மீன் வளர்ப்பவர்களுக்கு 50 சதவீதம் உதவித் தொகையுடன் மீன் குஞ்சுகள் வழங்குகிறது. இப்படி வழங்குவதற்காக ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ. 200 வரை யறுக்கப்பட்டிருக்கிறது. மீன்வளர்ப்போர் இதனல் பெரும்பயன் அடைகின்றனர். அந்தந்த வட்டாரங்களில் உள்ள மீன் வள நிலைமைகளை அறியவும், அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் மீன்வள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**மீனவர் நலன்**

மீனவர், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் பின்தங்கியுள் ளனர். அவர்களது நிலையை உயர்த்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. 1953, 1955-ம் ஆண்டுகளில் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடையும் உணவும் வழங்கப்பட்டன. இந்தச் சமூகத் திற்கு நிரந்தரமான உதவி அளிக்கும் வகையில் சில திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை யாவன:

1. குறைந்த வட்டியுடன், நீண்டகால, மத்தியக் கால, குறுகிய காலக் கடன் அளித்தல்.
2. உதவித் தெகையுடன் மீன் கிடங்கு கட்டுவது.
3. உதவித் தொகையும், கடன் தொகையும் பெற்று வீடு கட்டுவது.
4. நைலான் நூல் வாங்குவது, அதற்கான உதவித் தொகை யும் பெறுவது.
5. குறைந்த விலையில் பருத்தி நூல் பெறுவது.
6. விசைப் படகுகளைத் தவணை முறையில் பெறுவது.

மேற்கூறிய திட்டங்களின் மூலம் மீனவர்களின் நிலை உயர்வது வெள்ளிடை மலை. மதுரை மாவட்டத்திலுள்ள மதுரை மீனவர் சங்கம், பழனி மீனவர் சங்கம், பெரியகுளம் மீனவர் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களின் மூலம் மீனவர்களுக்கு ரூ. 17,750 கடனுகத் திட்டக் காலத்தில் அளிக்கப்பட்டது.

ஊராட்சி மன்றங்களுக்கும் நகராட்சி மன்றங்களுக்கும் மீன் சந்தைகளைத் திருத்தி அமைப்பதற்காக 50 சதவீதம் உதவி அளிக் கப்பட்டது. அதன்படி திண்டுக்கல் நகராட்சி மன்றத்திற்கு ரூ. 11,870 உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் மீன் வளத்திற்காக இந்த மாவட்டத்தில் இயன்ற வகையில் எல்லாவித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உள் நாட்டு நீர் நிலைகளில் மீன்பிடிக்கும் வாய்ப்புகள் அதிகரித் துள்ளன.

# கிராமங்களில் புதுவாழ்வு



நாடு விடுதலை பெற்ற நாள் முதல், வளமான வாழ்வை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த நாட்டின் முன்னேற்றம், பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் ஏற்படும் புதுவாழ்வில் அடங்கியிருப்பதை உணராதார் எவரும் இல்லை. சுயராஜ்யத்தின் பயன், எல்லாக் கிராமங்களுக்கும் செல்ல வேண்டும். அப்போதுதான் அது ஜனநாயக முறையில், உண்மையான சுயராஜ்யமாக இருக்க முடியும். வேளாண்மைத் துறையில் பெரும்பாலான கிராம மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்வை உயர்த்தவில்லையென்றால், நாட்டில் பொருளாதார முன்னேற்றம் அடைய இயலாது. இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்து தான் கிராம முன்னேற்றத்திற்காகச் சமுதாய நலத் திட்டம் கொண்டு வரப்பட்டது.



சோழவந்தான் பகுதியில் கழனி திருத்துதல்

கடந்த பத்தாண்டுகளாக, கிராம மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையில் நல்லதொரு மாறுதல் ஏற்பட்டு வருகிறது. கிராம மக்களின் உழைப்புச் சக்தி, பொருள் வளம் இரண்டையும் உயர்ந்த பட்சம் உபயோகப் படுத்தவும், அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் சமுதாய நலவளர்ச்சித் திட்டம் முனைந்து பணியாற்றி வருகிறது. அதனல் பயனும் கிடைத்துள்ளது.

வட்டார வளர்ச்சி அதிகாரி பொதுவில் இதர அதிகாரிகளின் வேலைகளை மேற்பார்வையிடுகிருர். வேளாண்மை, விலங்கு மருத்துவம், கூட்டுறவு, பஞ்சாயத்து, தொழில்கள், கல்வி, கதர் ஆகிய பல்வேறு துறைகளுக்கும் வளர்ச்சி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

**வேளாண்மைப் பணி**

ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண்மை வளர்ச்சி அதிகாரி வேளாண்மைத் துறையில் அபிவிருத்தி வேலைகளைக் கவனிப்பார். தரம் உயர்ந்த பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள் ஆகியவை உழவர்களுக்கு வழங்கப்பட்டன. புதிய கருவிகளைக் கொண்டு, புதிய முறைகளில் சாகுபடி செய்வதில் உழவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள வேளாண்மை நிலையத்திலிருந்து பூச்சி கொல்லும் மருந்துகள், விதைகள் விநியோகிக்கப்பட்டன. அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று புதிய உழவு முறைகளைப் பற்றி உழவர்களிடம் விளக்கி வருகின்றனர்.

திருத்தி அமைககப்பட்டபடி, இந்த மாவட்டம் மொத்தம் 34 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமுடிவில் திருப்பரங்குன்றம், நத்தம், ஆண்டிபட்டி, போடி நாயக்கனூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, கொடைக்கானல், திண்டுக்கல், வேடசந்தூர்,பழனி ஆகிய முதல் நிலை வட்டாரங்களும், மதுரை - கிழக்கு, மதுரை - மேற்கு, மேலூர்-1, மேலூர்-2, திருமங்கலம், கல்லுப்பட்டி, கள்ளிக்குடி, செல்லம்பட்டி, சேடபட்டி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, அலங்காநல்லூர், ஆத்தூர்-1, ஆத்தூர்-2 ஆகிய இரண்டாம் நிலை வட்டாரங்களும் இம் மாவட்டத்தில் உள்ளன. கம்பமும், வடுகபட்டியும் விஸ்தரிப்புக்கு முந்திய வட்டாரங்களாகும்.

**கடன் வசதிகள்**

கிராம மக்கள் பண நெருக்கடியால் தொல்லைப்படாமல் இருக்கக் கடன் வசதிகள் செய்து தரப்பட்டன. குறிப்பாக வேளாண்மைத் துறையில் வேளாண்மைக் கருவிகள் வாங்கவும், தண்ணீர்க் குழாய்கள் அமைக்கவும், கிணறுகள் வெட்டவும் கடன்கள் வழங்கப்பட்டன. இத்தகைய வசதிகள் கிராம மக்களின் நல் வாழ்வுக்கு வழிகோலின.

| | |
|---|---|
| பத்து ஆண்டுகளில் நில அபிவிருத்திக்காக | ரூ. 97,52,312 |
| பத்தாண்டுகளில் தண்ணீர்க் குழாய்கள் அமைக்க | ரூ. 17,47;050 |
| முதல் திட்டக் காலத்தில் வேளாண்மைக் கருவிகள் வாங்க | ரூ. 6,130 |
| ஆறு ஆண்டுகளில் ரசாயன உரங்களுக்காக | ரூ. 29,15,925 |
| இரண்டாவது திட்டக் காலத்தில் தீவிர உரத் திட்டத்தின் கீழ் | ரூ. 37,09,476 |
| 1951-52-ல் புதுக் கிணறுகள் வெட்ட (பழைய திட்டப்படி) | ரூ. 3,65,000 |
| மூன்று ஆண்டுகளில் புதுக் கிணறுகள் வெட்ட (திருத்திய திட்டப்படி) | ரூ. 2,87,500 |
| நான்கு ஆண்டுகளில் கிராம தானத்திற்காக | ரூ. 3,95,113 |
| இரண்டு ஆண்டுகளில் புயல் நிவாரணமாக | ரூ. 13,48,375 |
| எட்டு ஆண்டுகளில் சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் பாசனம், கிராமக் குடியிருப்பு வசதி ஆகியவற்றிற்காக | ரூ. 50,44,515 |
| எட்டு ஆண்டுகளில் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் குறைந்தகாலக் கடன் அளிக்கப்பட்டன | ரூ. 27,56,236 |

கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 292 கிணறுகள் வெட்டப்பட்டன. மூன்று குடிதண்ணீர் மேல் மட்டத் தொட்டிகள் அமைக்கப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 882 கிணறுகள் வெட்டப்பட்டன. 37 குடி தண்ணீர் மேல் மட்டத் தொட்டிகள் அமைக்கப்பட்டன.



மேல் மட்டக் குடிதண்ணீர்த் தொட்டி

உள்ளூர் மக்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டு பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டனர். மக்களிடையே ஆர்வத்தை எழுப்பவும், ஊருக்காகப் பணியாற்றும் கடமை உணர்ச்சியைத் தூண்டவும் இத்தகைய மக்கள் திட்டங்கள் பெரிதும் பயன்படுகின்றன. முதல் திட்டக் காலத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் மேற்கொள்ளப்பட்ட வேலைகளாவன :-

| | | |
|---|---|---|
| குடிதண்ணீர் மேல் மட்டத் தொட்டி அமைப்பு சம்பந்தமான வேலைகள் | | 14 |
| சிறு கிணறுகள் | ,, | 448 |
| பள்ளிகள் | ,, | 219 |
| சாலைகள் | ,, | 766 |

மக்களின் நல்வாழ்வுக்காக ஏற்பட்ட சமுதாய நலத் திட்டத்தால் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. அவைதான் பஞ்சாயத்து,

பஞ்சாயத்து யூனியன் அமைப்புக்களாகும். தமிழ்நாட்டில் தற்போது பஞ்சாயத்து யூனியன்கள் செயலாற்றி வருகின்றன. கிராம நல வேலைகளைப் பஞ்சாயத்துக்களே ஏற்று நடத்தும் நல்ல வாய்ப்பு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

**கிராம ராஜ்யம்**

வேளாண்மை, கைத்தொழில், கல்வி, குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, மாதர் நலம், குழந்தைகள் பராமரிப்பு சுகாதார வசதி, முதலிய பல்வேறு பொறுப்புக்களைக் கிராமப் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் மேற்கொண்டுள்ளன. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், குறிப்பாக வேளாண்மைத் திட்டங்கள் பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் செயல்படுகின்றன. பொறுப்பும் அதிகாரமும் பல்வேறு இடங்களில் பரவும் வகையில் ஆட்சியை அமைப்பதே கிராம ராஜ்யமாகும். புதிய பஞ்சாயத்து ஆட்சி இத்தகைய கிராம ராஜ்யத்தை—பொறுப்பான கிராமப் பிரதிநிதிகளின் நிர்வாகத்தை உருவாக்க முயல்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் மதுரை மாவட்டம் முழுவதிலும் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் மொத்தம் 1,143 கிராமங்கள் உள்ளன. அவற்றுள் 1,140 கிராமங்கள் பஞ்சாயத்து ஆட்சி முறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பஞ்சாயத்துச் சட்டம் இரண்டாவது திட்டக் காலத்தில் மதுரை--கிழக்கு, மதுரை--மேற்கு, கல்லுப்பட்டி, உசிலம்பட்டி, திருமங்கலம், வாடிப்பட்டி, அலங்காநல்லூர், மேலூர் ஆகிய எட்டு வட்டாரங்களில் நடைமுறைக்கு வந்தது. பொதுவில் எட்டு வட்டங்களிலும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டன. அவை செவ்வனே இயங்கி வருகின்றன.

**லட்சியக் கிராமம்**

புதிய பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்தபிறகு, நமது கிராமங்களில் புத்துணர்வும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. எண்ணற்ற கிராம மக்கள் தொண்டு மனப்பான்மையுடன் கலந்து கொள்கின்றனர். இத்தகைய சிறந்த நிலைக்கு எடுத்துக் காட்டாக மதுரை மாவட்டத்தில் கல்லுப்பட்டி வட்டாரத்திலுள்ள காரைக் கேணி கிராமம் திகழ்கிறது. என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு ஊருக்குச் செய்யும் நல்வாழ்வுத் திருப்பணியில் இந்தக் கிராம மக்கள் முன்னோடிகளாக விளங்குகிறார்கள். சின்னஞ்சிறு ஊர் காரைக்கேணி. அதன் மக்கள் தொகை 1,020 தான். ஆனால் செய்துள்ள பணிகளோ பெருமைக்குரியவை.



கல்லுப்பட்டி காந்திநிகேதன் ஆசிரமம்

ஊருக்கு அருகில் உள்ள கண்மாயில், கருவேல மரங்களை நட்டு வளர்த்ததினால் இக்கிராமத்திற்கு ரூ. 21,000 வருவாய் கிடைத்திருக்கிறது. குளம் இல்லாமல் இருந்த கிராமத்தில் மக்களின் பொதுமுயற்சியால் இன்று அழகான குளம் இருக்கிறது. நாலுபக்கமும் காங்கிரீட்டால் கரை கட்டி, மிக அழகான குளம் ஒன்றைக் கட்டி முடித்திருக்கிறார்கள். இதற்கு ரூ. 10,000 செலவாகியது. செலவு கிராம மக்களுடையது. கிராம மக்களின் ஊக்கத்தையும் ஆக்கத்திறனையும் அரசாங்கம் புரிந்து கொண்டு அக் கிராம மக்களுக்கு வேண்டிய உதவியைச் செய்கின்றது.

வேளாண்மைத் துறையில் காரைக்கேணி கிராமம் தன்னிறைவு பெற்றுவிட்டது. கிராமத்தைச் சுற்றி மரங்களை ஏராளமாக நட்டுள்ளனர். இவை தழை உரமாகப் பயன்படுகின்றன. 42 கலவை எருக் குழிகள் வெட்டப்பட்டுள்ளன. கிராமத்தில் 22 கிணறுகள் வேளாண்மைக்குப் பயன்படும் வகையில் உள்ளன. ரசாயன உரத்தை ஊர்க்கூட்டுறவு நிறுவனம் வாங்கி வழங்குகிறது.

கால்நடை அபிவிருத்தியிலும் காரைக்கேணி கிராமம் சீரிய நிலையை அடைந்துள்ளது. அண்மையில் இக்கிராம மக்கள் அரசாங்கம் அளித்த கடன் உதவிப் பணத்திலிருந்து காங்கயம் கன்றுகளை வாங்கியுள்ளனர். பாதிவிலையில் ஒரு காங்கயம் பொலிகாளை

அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. சுகாதாரம், கிராமத் துப்புரவு வேலைகளில் இக்கிராமம் முன்னணியில் நிற்கிறது. வட்டார வளர்ச்சித் துறையின் உதவியுடன் இக்கிராம மக்கள் சாக்கடைத் தண்ணீர் தெருவில் ஓடாமல் இருக்க, கிராமத்தைச் சுற்றி சிமிட்டியில் 14,000 அடி வடிகால்கள் கட்டியுள்ளனர். சாக்கடைத் தண்ணீர் சென்றுவிழ ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் சிமிட்டியால் இரு குழிகள் கட்டியுள்ளனர். சாக்கடைக் கழிவுகள் குழிகளில் தேக்கப்பட்டு அப்படியே அவை உரமாகி விடுகின்றன. ஊரில் ஐந்து குடிதண்ணீர்க் கிணறுகள் உள்ளன. தண்ணீர் சேகரித்து வைக்கும் பெரிய நீர்த்தொட்டி ஒன்று கட்டியுள்ளனர்.

**இலவச நண்பகல் உணவு**

பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச நண்பகல் உணவு அளிப்பதற்கான ஈட்டு மானியம் அளிக்கவேண்டி, பஞ்சாயத்து 10 ஏக்கர் நிலத்தைப் பள்ளிக்கூடத்திற்கு ஒதுக்கியுள்ளது. இங்குள்ள திருவள்ளுவர் நூல் நிலையம், கிராம மக்களால் நடத்தப்படுகிறது. இங்ஙனம் வேளாண்மை, கூட்டுறவு, கல்வி ஆகிய பல்வேறு துறைகளில் இந்தக் கிராமம் நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது. இதை இந்த மாவட்டத்தின் லட்சியக் கிராமம் என்றே சொல்லலாம்.



இலவச நண்பகல் உணவு வழங்கப்படுகிறது.

இதே ரீதியில் ஊர் தோறும் பள்ளிகள், சாலைகள், மின்சார விளக்குகள், கூட்டுறவு நிறுவனங்கள் இன்ன பிற வசதிகளும் ஏற்பட்டுள்ளன. பத்து ஆண்டுகளில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.




அறிவியல் வளர்ந்து வரும் இந்நாளில் மின்சாரத்தின் சிறப்பினை உணராதவர் எவரும் இல்லை. ஏழை உழவன் முதல் பெரிய தொழிலதிபர் வரை மின்சாரத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்திருக்கின்றனர். அதன் பயனை அனைவரும் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் அரசாங்கம் மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இத்துறையில் தமிழ் நாடு இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கிறது. மின்சார உற்பத்தியிலும் வினியோகத்திலும் தமிழ்நாடு அருமையான சாதனைகளைச் சாதித்திருக்கிறது என்று நமது பிரதமர் நேரு பாராட்டியிருக்கிறார். கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்குகிறது.

தமிழ் நாட்டில் 1947-48-ல் 1,090 கிராமங்கள் மட்டுமே மின்சார வசதி பெற்றிருந்தன. இன்று 10,700 கிராமங்கள் மின்சார வசதி பெற்று விளங்குகின்றன. தண்ணீர் இறைக்கும் பம்பு செட்டுகள் 1947-48-ல் 7,555 ஆக இருந்தவை இப்போது

1,16,000 ஆக உயர்ந்துள்ளன. முன்பு சராசரி தனி ஆள் உபயோகித்த மின்சக்தி 11யூனிட்டுகள்; இன்று அது 60 யூனிட்டுகளாக உயர்ந்திருக்கிறது. 1947-48-ல் 40·80 கோடி யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. 1960-61-ல் 230 கோடி யூனிட் உற்பத்தி செய்யப்படுகிறது.

மின்சார அபிவிருத்தியில், கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பது சிறப்பான திட்டமாகக் கருதப்படுகிறது. மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த பத்தாண்டுகளில் சுமார் 376 கிராமங்கள் புதிதாக மின்சார வசதிபெற்றன. முதல் திட்டக் காலத்தில் 358 பம்பு செட்டுகளும், இரண்டாவது திட்டக்காலத்தில் 2,106 பம்பு செட்டுகளும் மின்வசதி பெற்று இயங்கின. கடந்த பத்தாண்டுகளில் 11,315 வீடுகளுக்கு மின்விளக்குகள் போடப்பட்டன. தெரு விளக்குகளின் எண்ணிக்கை 1,364 ஆகும். திட்டக்காலத்தில் சுமார் 233 தொழிற்சாலைகளுக்கு மின்சார வசதி செய்து தரப்பட்டது. இவற்றின் விளைவாக, கடந்த பத்தாண்டுகளில் 282 மைல் நீள அதிசக்தி மின்சாரத் தொடரும், 527 மைல் நீள குறைந்த சக்தி மின்சாரத் தொடரும் அதிகமாகப் போடப்பட்டன. அத்துடன் 192 டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டன.

பரவை மீனாட்சி ஆலை, விளாங்குடி விசாலாட்சி ஆலை, கோச்சடை வி. பெல்ட் தொழிற்சாலை, திருநகர் சீதாலட்சுமி ஆலை, கப்பலூர் தியாகராச நகர் ஆலை, சிலைமான் ருக்குமணி ஆலை ஆகிய தொழில் நிறுவனங்களுக்கு உயர்ந்த மின்சாரத் திறன் வழங்கப்படுகிறது.

**மின்சார உற்பத்தி**

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கு முன் அதிசக்தி மின்சாரத் துணை நிலையம் பசுமலையில் இருந்தது. மக்களின் மின்சாரத் தேவையை நிறைவுபடுத்துவதற்காகவே பெரியாறு நீர் மின்சாரத் திட்டம் இந்த மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கேரள மாநிலத்திலுள்ள பெரியாறு ஏரியின் நீரைப் பயன்படுத்தி, மின்சாரம் தயாரிப்பதற்காக மதுரை மாவட்டத்திலுள்ள கூடலூருக்கு அருகில் இம்மின்சார நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1955) தொடங்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1958) முடிக்கப்பட்டன. இந்நிலையத்தின் தொடக்கக் கட்ட உற்பத்தித் திறன் 1,05,000 கி. வா. ஆகும். இறுதிக் கட்டத்தில் இந்நிலையம் 1,40,000 கி. வா. உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் செலவு ரூ. 10·09 கோடி

என்று கணக்கிடப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் ஏற்பட்ட முதல் நீர் மின்சார நிலையம் இதுவேயாகும்.

பெரியாறு மின்சார நிலையத்திலிருந்து மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்காக, பெரியாறு-தேனி-மதுரை 110 கே. வி. இரு சர்க்யூட் லைன்கள், தேனி-செம்பட்டி-திருச்சிராப்பள்ளி 110 கே. வி. தனி சர்க்யூட் லைன் போன்ற லைன்களைப் பற்றிய வேலைகளும், அவற்றோடு தொடர்புடைய துணை நிலையங்களின் வேலைகளும் செய்து முடிக்கப்பட்டன. திருமங்கலம், அனுப்பானடி, தேனி, செம்பட்டி, கல்லுப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள துணை நிலையங்கள் குறிப்பிடத் தக்கவை யாகும்.



பெரியாறு நீர் மின்சார நிலையம்

### அனல் மின்சார நிலையம்

மதுரைக்கு வடக்கே சுமார் 8 மைல் தொலைவில் உள்ள சமயநல்லூரில் மதுரை அனல் மின்சார நிலையம் அமைந்துள்ளது. இந்த மின்சார நிலையம் ரூ. 1·32 கோடி செலவில் உருவானதாகும். இதன் உற்பத்தித் திறன் 14,000 கிலோவாட்டுகள் ஆகும்.



சமயநல்லூர் அனல் மின்சார நிலையம்

இங்ஙனம் மதுரை மாவட்டத்தில் மின்சாரப் பெருக்கத்திற்கான பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கிராமங்களில் பெருகி வரும் மின்சாரப் பம்புச் செட்டுகள், மக்களின் ஆர்வத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றன. மனித சக்தி வீணாகாமல் தடுக்க இதை விடச் சிறந்த சாதனம் இல்லை என்பதை அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். இருளில் மூடிக் கிடந்த கிராமங்கள், இன்று தெரு விளக்குகளால் ஒளி பெற்று விளங்குகின்றன. மின்சாரத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கிராமங்களில் தெளிவாகக் காண முடிகிறது. கிராம முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்.

———

# வளரும் தொழில்கள்



தொழில் வளர்ச்சியுள்ள நாடுதான் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும். உழைக்கும் திறன் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பெருந் தொழில்களையும், நடுத்தரத் தொழில்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

மதுரை மாவட்டத்தில் தேயிலைத் தோட்டத் தொழில் வளர்ச்சிக்காகச் சிறந்த கவனம் செலுத்தப்பட்டது. பொதுவாகத் தேயிலைத் தோட்டத் தொழில் இந்தியாவிலேயே குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சணலுக்கு அடுத்தபடியாகப் பெருவாரியாக இந்தியாவில் ஏற்றுமதி செய்யப்படும் பொருள் தேயிலையேயாகும். மதுரை மாவட்டத்தில் 1951-ம் ஆண்டிற்கு முன்பு 827 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டது. தற்போது அதன் பரப்பளவு 1590 ஏக்கராக அதிகரித்திருக்கிறது. முதல் திட்டக் காலத்திலும், இரண்டாம் திட்டக் காலத்திலும் ஆன மூலதனச் செலவு ரூ. 36 லட்சம் ஆகும். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்க்கு வேண்டிய குடியிருப்பு வசதிகள், பிராவிடன்ட் பண்டு வசதி, மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள் ஆகிய அனைத்தும் தரப்படுகின்றன.



கப்பலூர் தியாகராசர் ஆலை

இந்த மாவட்டத்தில் பருத்தி அரைக்கும் தொழிற்சாலைகள், நெல் அரைக்கும் தொழிற்சாலைகள், நெசவாலைகள், அச்சகங்கள் முதலிய 507 தொழிற்சாலைகள் உள்ளன. 1960-ம் ஆண்டுக் கணக்குப்படி, இவற்றில் 27,197 ஆண்களும், 5,110 பெண்களும், 15 சிறுவர்களும் பணியாற்றி வந்தனர். இவர்களுக்குரிய சம்பளமாக 1960-ல் வழங்கப்பட்ட தொகை ரூ. 3·2 கோடி ஆகும். போனசாக ரூ. 19·6 லட்சம் அளிக்கப்பட்டது.

**சிறு தொழில்கள்**

குறைந்த முதலீட்டைக் கொண்டு, அதிகமான மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த சிறு தொழில்களால் இயலும். சிறு தொழில் வளர்ச்சிக்காக இந்த மாவட்டத்தில் பல தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டன. அந்தந்த வட்டாரங்களில் கிடைக்கும் பொருள்களுக்கேற்பத் தொழில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இனி, முதல் திட்டக்காலத்திலும், இரண்டாவது திட்டக் காலத்திலும் ஏற்பட்ட தொழில் நிலையங்களைப் பற்றி அறியலாம்.

மதுரை மாவட்டத்திலுள்ள திண்டுக்கல்லில் பூட்டுத் தொழில் நெடுங்காலமாகவே நடைபெற்று வருகிறது. பல்வேறு வகையான பூட்டுக்களை உற்பத்தி செய்யும் பணியில்100 சிறு பிரிவுகள் வேலை செய்து வருகின்றன. தொழிலில் புதுமுறைகளைக் கையாளாததால், ஏதும் இலாபம் பெற இயலாமல் இருந்தது. இந்த நிலையைப்

போக்கவே பூட்டுத் தொழில் பயிற்சி-பணி நிலையம் நிறுவப் பட்டது. குறைந்த செலவில் சிறந்த பூட்டுக்களை உற்பத்தி செய்ய இந்த நிலையம் துணையாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டிலும் இருபது பயிற்சியாளர் பயிற்சி பெறுகின்றனர். அவர்களுக்கு மாதம் ரூ. 30 வீதம் உதவித்தொகை அளிக்கப் படுகிறது. இந்த நிலையத்திற்கான செலவுத் தொகை ரூ. 8 லட்ச மாகும்.

**தொழில் பேட்டை**

தொழில்கள் ஆரம்பிக்க முன்வருவோருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தொழில் பேட்டைகள் நிறுவப்படுகின்றன. தொழிற்சாலை களுக்கான காலிமனைகளைப் பிற இடங்களைக் காட்டிலும் குறைந்த வாடகைக்கு விடுதல், பொதுவான பணி வசதிகளை அளித்தல் முதலியவை தொழிற்பேட்டையின் தனிப்பெரும் சிறப்புக்களாகும். இந்த அடிப்படையில் ரூ. 8·18 லட்சம் செலவில் மதுரையில் தொழிற்பேட்டை நிறுவப்பட்டது. 1959 ஆகஸ்டிலிருந்து இந்தப் பேட்டை 18 தொழிற்சாலை யூனிட்டுகளுடன் இயங்கிவருகிறது. மொத்தம் 200 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். மாதம் ரூ. 2 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகின்றன. மேலும் பத்து யூனிட்டுகள் நிறுவப்பட்டு வருகின்றன.

பருத்தி ஆலைகளும், நூற்பு ஆலைகளும் நம் மாநிலத்தில் மிகுதி

மதுரை தொழில்பேட்டை



யாக உள்ளன. தற்போது ஆலைகளுக்கு வேண்டிய இயந்திரப் பகுதிகள் ஆமதாபாத்திலிருந்து வரவழைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் கோயம்புத்தூரில் மட்டும் ஒரு இயந்திரப் பகுதிப் பணிநிலையம் இருக்கிறது. மேலும் ஒரு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், மதுரையில் பணி நிலையம் நிறுவப்பட்டது. சிறு தொழில் அதிபர்கள் நெசவாலை இயந்திரப் பகுதிகளை உற்பத்தி செய்வதற்காகப் பணி வசதிகளை அளிப்பதே இதன் நோக்கமாகும். இரண்டாம் திட்டக்காலத்தில் திட்ட அளவில் இதற்கான செலவு ரூ. 4·92 லட்சமாகும்.

### ஒளி விளக்குகள்

பழனியில் ஹரிக்கன் விளக்குகள் உற்பத்திப் பணி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தகரவேலை செய்வோர் மிகுதியாக உள்ளனர். ஹரிக்கன் விளக்குகளை உற்பத்தி செய்வதில் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடனும், ஹரிக்கன் விளக்குகளையும் தகர டப்பாக்களையும் உற்பத்தி செய்பவர்களுக்குப் பணி வசதிகளை அளிக்கும் நோக்கத்துடனும் இந்த நிலையம் நிறுவப்பட்டது. டப்பாக்கள் செய்வதற்கு வேண்டிய அச்சுக்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இரண்டாவது திட்டக்காலத்தில் இதற்காகச் சுமார் ரூ. 4·72 லட்சம் செலவாகியிருக்கிறது. பணி வசதிகளைச் சேர்த்து இங்கு உற்பத்தியான பொருள்களின் மதிப்பு ரூ. 1·89 லட்சம் ஆகும்.

சிறு தொழில்கள் மட்டுமல்லாமல், கிராம மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு வழிதேடித் தரும் கிராமத் தொழில்களையும் ஆதரித்து வளர்க்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. மங்கி மறைந்து வருகிற கைத்தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பதில் சிறந்த பணிகள் செய்யப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் தச்சுத் தொழில், கொல்லுவேலை, பானை வனைதல், சோப்பு செய்தல் முதலிய தொழில்களை வளர்க்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

தச்சுவேலையிலும், கொல்லுவேலையிலும் புதுமையான கருவிகளைக் கையாள்வதற்காகத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், கிராமத் தச்சர்களையும், கொல்லர்களையும் இயந்திரங்களை உபயோகப்படுத்துவதில் பழக்கப் படுத்துவதற்குரிய சாதனங்களை அமைக்கவும், இந்த நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பயிற்சி நிலையங்களில் 10 வினைஞர்கள் பயிற்சி பெறுகின்றனர். மாதம் ரூ. 30



வத்தலக்குண்டில் உள்ள தச்சு வேலைப் பிரிவு

உதவிச் சம்பளம் அளிக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் நத்தம் வட்டாரத்தில் உள்ள கோயில்பட்டியில் ஒன்றும், பழனி வட்டாரத்தில் வத்தலக்குண்டில் ஒன்றும், நெய்க்காரப் பட்டியில் ஒன்றும் ஆக மூன்று பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றிற்கான மொத்தச் செலவு முறையே ரூ. 24,700, ரூ. 24, 250, ரூ. 25, 950 ஆகும். இத்துடன் தர்மத்துப்பட்டி, அலங்காநல்லூர், தாடிக்கொம்பு ஆகிய இடங்களில் கொல்லுவேலை, தச்சுவேலை உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**மண்பாண்டத் தொழில்**

விஞ்ஞானம் வேகமாக வளர்ந்தபோதிலும், ஆயிரம் ஆயிரம் ஆலைகள் தோன்றிய போதிலும், அன்றிலிருந்து இன்றுவரை அழியாமல், நிலைபெற்று நிற்பது மண்பாண்டத் தொழிலாகும். இத்தொழிலுக்கு மேலும் நல்ல மதிப்பு ஏற்படும் வகையில் புதிய கருவிகள் கையாளப்படுகின்றன. உசிலம்பட்டியில் பயிற்சிப் பிரிவுடன் கூடிய உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. சிறந்த வகையில் மெருகிடப்பட்ட மண்பாண்டங்களை உற்பத்தி செய்யும் பணியில் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த நிலையத்தில் ஏழு பேர் பணியாற்றுகின்றனர். இங்கு பதினைந்து பேர் பயிற்சி முடித்துள்ளனர். ஆறுபேர் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்த நிலையத்திற்கான செலவு ரூ. 30,810 ஆகும்.

விஞ்ஞான முறையில் தோல் உரிப்பதைப் பற்றியும், தோலைப் பாதுகாத்துப் பதப்படுத்தும் முறையைப் பற்றியும் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் மதுரை மாவட்டத்தில் ஐந்து இடங்களில் உள்ளன. இந்தியப் பாணியிலும், ஐரோப்பியப் பாணியிலும் தோல் பாத அணிகளை, எளிய இயந்திரச் சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்வதில் பயிற்சி அளிப்பதற்காக, மதுரையில் ஒரு நிலையத்தைத் துவக்க அனுமதி அளிக்கப்பட்டது.

**சோப்புத் தயாரித்தல்**

இந்த மாவட்டத்தில் செக்கானூரணியில் ஒன்றும், மேலூரில் இன்னொன்றுமாக இரண்டு சோப்புத் தயாரிக்கும் நிலையங்கள் உள்ளன. 1958 ஏப்ரல் முதல் இந்த நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1960 மார்ச் வரை 38,194 ராத்தல் சோப்புகள் உற்பத்தி ஆகியிருக்கின்றன. இந்தத் தொழிலுக்காக இதுவரை சுமார் ரூ. 21,014 செலவாகி யிருக்கிறது.

புதுமுறைப்படி தேனீ வளர்த்துத் தேன் சேகரிக்கும் முறையினை கிராம மக்களுக்கு அறிவிக்கவும், வேண்டிய உதவிகளை அளிக்கவும் தேனீ வளர்ப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன்

காந்தி கிராமம் காகிதம் தயாரிக்கும் பிரிவு



படி தேன்கூடுகள் பாதி விலைக்கு வழங்கப் படுகின்றன. உசிலம்பட்டி வட்டாரத்தில் தேனீ வளர்ப்பு வேலைகள் சிறப்பாக மேற்கொள்ளப் படுகின்றன. அதற்காக ரூ. 5,625 அனுமதிக்கப்பட்டுள்ளது. இது வரை 304 தேனீக் கூடுகள் விநியோகிக்கப் பட்டுள்ளன. 130 தேன் காலனிகள் இந்த வட்டாரத்தில் பணிபுரிகின்றன. இதுவரை 2,178 ராத்தல் தேன் சேகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலைகள் 41 கிரா மங்களில் நடைபெறுகின்றன.

**காகிதம் தயாரித்தல்**

கிராமங்களில் தயாரிக்கப்படும் காகிதம் வன்மையுடனும், நீடித்த உழைப்புடனும் விளங்கக் கூடியது. இத்தகைய சிறந்த கிராமத் தொழிலை வளர்ப்பதற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் காந்தி கிராமத்தில் காகித உற்பத்தி நிலையம் அரசினரால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆண்டுதோறும் ஐவர் பயிற்சி பெறுகின்றனர். இதுவரை 45,889 ராத்தல் காகிதம் உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது. 1961 மார்ச்சு முடிய ரூ. 51,958 அளவிற்கு விற்பனை ஆகியிருக்கிறது.

மதுரை மாவட்டத்தில் பனைவெல்லம் காய்ச்சுதல் முக்கியத் தொழிலாகும். மதுவிலக்கு அமுலுக்கு வந்ததன் விளைவாகப் பனை வெல்லத் தொழிலில் புதியதோர் வேகம் ஏற்பட்டுள்ளது. மதுவிலக்கின் காரணமாக வேலையிழந்த பல மரமேறிகளுக்கு வேலை தேடித் தரவும், பனைவெல்லத் தொழிலை அபிவிருத்தி செய்யவும் பனை வெல்லத் தொழில் கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவப்பட்டன. இந்த நிறுவனங்களில் ஆண்டுதோறும் ரூ. 52,431 மதிப்புள்ள வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது.

முதல் திட்டக்காலத் தொடக்கத்தில் 23 கூட்டுறவு நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. திட்டக் காலத்தில் மேலும் ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனங்களில் 1,968 உறுப்பினர் இருந்தனர். அவர்களின் பங்கு முதல் ரூ. 12,996 ஆகும். ஐம்பது சதவீதம் அளவிற்குக் குறைந்த விலையில் 90 செட்டு கொப்பரை, அடுப்பு ஆகியவை அளிக்கப்பட்டுள்ளன. மாநிலத் தொழில் உதவி விதியின் கீழ் எட்டு உறுப்பினர்களுக்குக் கடன் உதவி அளிக்கப்பட்டது. பம்பாயிலுள்ள அகில இந்தியக் கதர் கிராமத் தொழில் கமிஷன், இயந்திரங்கள் வாங்குவதற்காக ஐந்து நிறுவனங்களுக்கு ரூ. 250 வீதத்தில் கடனும், ரூ. 250 வீதத்தில் மான்யமும் வழங்க அனுமதித்திருக்கிறது. மேலப்பட்டியிலுள்ள பனை வெல்ல உற்பத்திக் கூட்டுறவு நிறுவனத்தைச் சேர்ந்த 80 உறுப்பினர்களுக்கு 166 ஏக்கர் புறம்போக்கு நிலம் பனை உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டது.



மதுரையில் உள்ள தொழில் பயிற்சி நிலையம்

**கைத்திறத் தொழில்கள்**

பயிற்சி, ஆராய்ச்சி, உற்பத்தி, விற்பனை ஆகியவற்றிற்கான நிலையங்களை அமைப்பதற்கான வேலைகள் இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. தனியார் நிலையங்களிலும், அரசாங்க நிலையங்களிலும் உற்பத்தி செய்யப்படும் கைத்திறத்தொழில் பொருள்களை விற்பனை செய்வதற்காக விற்பனை நிலையம் மதுரையில் அமைக்கப்பட்டது. இந்த நிலையம் அரசாங்க அதிகாரிகளல்லாத பொது மக்கள் குழு ஒன்றால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 1957-58-ம் ஆண்டில் இந்த விற்பனைச் சாலைக்கு ரூ. 50,000 கடன் உதவி வழங்கவும், ரூ. 5,000 உதவித் தொகை வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டது.

மதுரையில் பொருத்திகளைச் செய்வதற்கான பணி நிலையம் இயங்கி வருகிறது. அலமாரிகள், கதவுகள் முதலியவற்றில் பொருத்துவதற்காக அழகு வேலைப்பாடுடன் கூடிய கைப்பிடிகளுக்கு நல்ல கிராக்கி இருந்து வருகிறது. பயிற்சி பெற்ற பணியாளர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இந்த அருமைப்பாட்டை நீக்குவதற்காக மதுரையில் 12 பயிற்சியாளர்களைக் கொண்ட மேற்சொன்ன பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது. 31 பேர்கள் தங்கள் பயிற்சியை முடித்துள்ளனர். திட்டக் கால இறுதியில் மூன்றாவது தொகுதியிலுள்ள 20 பயிற்சியாளர்கள் பயிற்சி

பெற்று வருகின்றனர். இதற்கான முழுச் செலவையும் இந்திய அரசாங்கம் ஏற்கிறது.

கண்ணையும் கருத்தையும் கவரவல்ல சிற்ப வேலைப்பாடு களுக்கு மதுரை பெயர்பெற்ற இடமாகும். பழம்பெரும் சிற்ப நூல் முறைப்படி, படிமங்களைச் செய்யும் கலை நுணுக்கம் அறிந்த சிற்ப வேலைக்காரர்கள் தொன்றுதொட்டு இந்தத் தொழிலைச் செய்து வருகின்றனர். உலோகத்தினால் ஆக்கப்படும் படிமங்களை வெளி நாட்டவர் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்ற னர். இத்துறையில் தேர்ச்சி பெற்ற வினைஞர் குறைவாகவே உள்ளனர். தக்க பயிற்சி அளித்து, இந்தப் பழம் பெரும் தொழில் அழிவுறாமல் காக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டிருக் கிறது. மதுரையில் அதற்கான பயிற்சி நிலையம் நிறுவப் பட்டுள்ளது. இதற்கான மொத்தச் செலவு ரூ. 34,488 ஆகும்.

### கண்ணாடிச் சாமான்கள்

கண்ணாடிச் சாமான்களுக்கு நல்ல கிராக்கி இருந்து வருகிறது. இத்தொழிலை வளப்படுத்தும் வகையில் கண்ணாடிச் சாமான்கள் உற்பத்திப் பயிற்சி நிலையம் மதுரையில் நிறுவ அனுமதிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு ரூ. 2·07 லட்சம் செலவு ஆகும்.

வளையல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் கச்சாப் பொருள்களை வழங்கவும், அவர்களுக்குத் தொழில் நுட்பத் தில் வழி காட்டி. புது முறைகளில் மெருகிடுவதற்கான வசதிகளை அளிக்கவும் மதுரையில் அரசாங்கக் கண்ணாடி வளையல் உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. 1956-57-ல் ரூ. 995 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியானதில், ரூ, 838 மதிப்புள்ளவை விற்பனை செய்யப்பட்டன. 1959-60-ல் ரூ. 6,284 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியானதில், ரூ. 2,485 மதிப்புள்ளவை விற்பனை செய்யப் பட்டன.

### நிதி உதவி

சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக அரசினர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுள் தலையானது சிறு தொழிலதிபர்களுக்குப் பண உதவி செய்வதாகும். 1922-ம் ஆண்டில் இது சம்பந்தமாகத் தொழிற் சட்டம் இயற்றப்பட்டது. சிறு தொழில், குடிசைத் தொழில் களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் 1956-57-ல் 16 நிதி உதவிகள் வழங்கப் பட்டன. அதற்காக அளிக்கப்பட்ட தொகை ரூ. 1.600 ஆகும். 1959-60-ல் 723 நிதி உதவிகள் அளிக்கப்பட்டன. அதற்காக வழங் கப்பட்ட தொகை ரூ. 99,520 ஆகும்.



உசிலம்பட்டி ஓட்டுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவு முறையில் தொழில்களை நடத்தும் முயற்சி சிறந்த பயனை அளிக்கிறது. உற்பத்தியைப் பெருக்கவும், தொழிலாளர்க்கு வருவாயைத் தேடித் தரவும் தொழில் கூட்டுறவுகள் பெரிதும் துணை புரிகின்றன.

### தொழில் கூட்டுறவுகள்

முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் இந்த மாவட்டத்தில் மூன்று சிறு தொழில் கூட்டுறவு நிறுவனங்கள் இருந்தன. அவற்றில் 546 உறுப்பினர் இருந்தனர். பத்தாண்டுக் கால வளர்ச்சியின் பயனாக, கூட்டுறவு நிறுவனங்களின் எண்ணிக்கை 28 ஆகவும், உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,511 ஆகவும் அதிகரித்தன. இந்த நிறுவனங்களுக்கு மத்திய அரசாங்கம் ரூ. 5·02 லட்சம். மாநில அரசாங்கம் ரூ. 38, 250 மானியமாக அளித்தன. அத்துடன், ரூ. 3·08 லட்சம் கடனாக அரசாங்கம் வழங்கியிருக்கிறது. இந்தச் சங்கங்களில் ரூ. 2·54 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்த நிலைமாறி, ரூ. 19·06 லட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்யும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் கிராமத் தொழிலுக்கான ஒரே ஒரு கூட்டுறவு நிறுவனம் இருந்தது. இரண்டாம் திட்டக் கால முடிவில் 30 நிறுவனங்களாக எண்ணிக்கை உயர்ந்தது. உறுப்பினர்களின் எண்ணிக்கை 90-லிருந்து 1,199 ஆக அதிகரித்

தது. மாநில அரசாங்கம் ரூ. 41,260 அளவிற்கு மான்ய உதவி வழங்கியது. மேலும் ரூ. 2·3 லட்சம் அளவில் கடனுதவி அளித்திருக்கிறது. இந்தச் சங்கங்களில் ரூ. 11,684 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்த நிலைமாறி, ரூ. 5·8 லட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்யும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

முதல் திட்டக்காலத் தொடக்கத்தில் கயிறுத் தொழில் கூட்டுறவு நிறுவனங்கள் மூன்று இருந்தன. உறுப்பினர்களின் எண்ணிக்கை 184 ஆகும். இரண்டாவது திட்டக் காலத்தில் மேலும் ஒரு சங்கம் ஏற்பட்டதுடன், உறுப்பினர்களின் எண்ணிக்கை 202 ஆக உயர்ந்தது. இந்தச் சங்கங்களில் தற்போது ரூ. 1,82,335 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**கைத்தறி**

தமிழகத்தில் ஏராளமான ஆண்களும். பெண்களும் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 20 லட்சம் மக்கள் தம் வாழ்விற்கு இத்தொழிலை நம்பியுள்ளனர். எனவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறிக்கான திட்டங்களுக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டது. நெசவாலைத் தொழில் அபிவிருத்தியும், அதன் தொழில் நுட்ப வளர்ச்சியும் கைத்தறி நெசவாளர்களைப் பெரிதும் பாதித்து விட்டன. மாநில அரசாங்கத்தின் தீவிர முயற்சியின் விளைவாக, இந்திய அரசாங்கம் ஆலைத் துணிகளின் வரி வருமானத்திலிருந்து கைத்தறி வரி நிதியினை ஏற்படுத்தியது.கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் புது வாழ்வு கொடுப்பதற்காக இந்த நிதி தற்போது பயன்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து, கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்வதில் முதல் இரண்டு திட்டங்களில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. மாநிலமெங்கும் கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவப்பட்டன.

மதுரைப் பிரிவில் முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் 18 நெசவாளர் கூட்டுறவு நிறுவனங்கள் இருந்தன. முதல் திட்டக் கால இறுதியில் 42 நிறுவனங்களாக அதிகரித்தன. இரண்டாம் திட்டக் கால முடிவில் 70 நிறுவனங்கள் இருந்தன. முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் 2,030 தறிகள் கூட்டுறவின் கீழ் இருந்தன. முதல் திட்ட இறுதியில் இந்த எண்ணிக்கை 6,501 ஆக அதிகரித்தது. இரண்டாவது திட்டக் கால இறுதியில் 13,547 ஆக உயர்ந்தது. முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் 4,090 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். முதல் திட்டக் கால இறுதியில் அந்த எண்ணிக்கை 7,455 ஆக அதிகரித்தது. இரண்டாவது திட்டக் கால இறுதியில் 13,370 பேராக அதிகமாயினர்.

சேலைகள், வேட்டிகள் படுக்கை விரிப்புகள், ஆகிய பல ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. முதல் திட்டக் காலத்தில் ரூ. 1,01,89,357 மதிப்புள்ள துணியும், இரண்டாம் திட்டக் காலத்தில் ரூ. 3,38,40,910 மதிப்புள்ள துணியும் உற்பத்தி செய்யப்பட்டது. முதல் திட்டக் காலத்தில் ரூ. 1,05,19,886 மதிப்புள்ள துணிகளும், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 3,50,14,634 மதிப்புள்ள துணிகளும் விற்பனை செய்யப்பட்டன.

கைத்தறித் துணியின் தரத்தை உயர்த்தி, அதன் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனும், உதவித் தொகையும் வரி நிதியிலிருந்து வழங்கப் பட்டன. பொதுத் தரமுள்ள பாவு நூல் பிரிக்கும் குழல்கள், ஊடு நூல்போடும் கருவிகள், காலால் இயக்கப்படும் கருவிகள், பாவு இயந்திரங்கள், ஜாக்குவார்டு என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட தறிகள் போன்ற சீர் செய்யப்பட்ட கருவிகளை வாங்குவதற்காகவே இக் கடனும், உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன. விளம்பரத்திற்காகவும், சாயச் சாலைகளை அமைத்துக் கொள்வதற்காகவும் உதவி அளிக்கப்படுகிறது. இங்ஙனம் பல வகையிலும் அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 66,940 ஆகும்.

### கதர்

கதர்த் தொழில் மிகச் சிறந்த கிராமத் தொழிலாகத் திகழ்ந்து வருகிறது. கிராமங்களில், வேளாண்மை செய்யாத காலங்களில், வேலையற்றிருக்கும் உழவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது. அவர்களது சராசரி வருவாயை உயர்த்தவும் இது ஓர் எளிதான வழி முறையாகும்.

மதுரை மாவட்டத்தில் அரசாங்க ஆதரவில் முதன் முதலாகக் கதர் அபிவிருத்தித் திட்டம் தி. கல்லுப்பட்டியில் தொடங்கப்பட்டது 1952-ம் ஆண்டு 16 நெசவாளர்களும், 500 நூற்பாளர்களும் கதர் அபிவிருத்தியில் ஈடுபட்டு, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1,000 கெஜம் கதர் உற்பத்தி செய்தனர். சிறிது சிறிதாக அபிவிருத்தி அடைந்த இக் கதர் திட்டத்தின் மூலம் முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 50 நெசவாளர்களும், 1,000 நூற்பாளர்களும் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இவர்கள் 1955-56-ல் சுமார் 10,000 கெஜம் துணி உற்பத்தி செய்து ஊதியம் பெற்றனர். அதே ஆண்டில் ரூ. 40,000 பெறுமானமுள்ள கதர் இம்மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம்மாவட்டம் முழுவதும் கதர்த் திட்டம் பரவலாயிற்று. 1960-61-ல் சுமார் 250 நெசவாளர்களும், 5,000 நூற்பாளர்களும் அரசாங்கக் கதர்த் திட்டத்தின் கீழ் பணி புரிந்துவருகின்றனர். இவர்கள் ஆண்டு

ஒன்றுக்கு சுமார் 1 லட்சம் கெஜம் கதர்உற்பத்தி செய்கின்றனர். இம் மாவட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 3,70,000 மதிப்புள்ள கதர் விற்பனையாகிறது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் திருமங்கலத்தில் ஒன்றும், திண்டுக்கல்லில் ஒன்றும் ஆக இரு தலைமை நிலையங்கள் உள்ளன. மதுரை, வடக்கம்பட்டி, அப்பக்கரை, உசிலம்பட்டி, தி. கல்லுப்பட்டி, திருப்பரங்குன்றம், மேலூர், எழுமலை ஆகிய இடங்களிலும், குஜிலியம்பாறை, வேடசந்தூர், தி. வாடிப் பட்டி, நிலக் கோட்டை, நரிக்கல்பட்டி ஆகிய இடங்களிலும் துணை நிலையங்கள் உள்ளன. மதுரை, தி. கல்லுப்பட்டி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. திருப்பரங் குன்றத்திலும், நரிக்கல்பட்டியிலும் பணி நிலையங்கள் நிறுவப்பட் டுள்ளன. நரிக்கல்பட்டியில் மாதிரி உற்பத்தி நிலையம் இயங்கி வருகிறது. இங்ஙனம் பல்வேறு கதர் அபிவிருத்தி வேலைகள் இந்த மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

**அம்பர் ராட்டை**

அம்பர் ராட்டைத் திட்டம் 1956-ம் ஆண்டு முதன் முதலாக இங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இம் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகள் அனைத்திலும் பரவலாக அம்பர் ராட்டைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு சுமார் 40,000 கெஜம் அம்பர் கதர்த் துணி இங்கு உற்பத்தியாகிறது. இந்த மாவட்டத்தில் கதர் உற்பத்திக்கும், விற்பனைக்கும் பொது மக்களின் வரவேற்பு மிகுதியாய் உள்ளதால், வருங்காலத்தில் கதர்த் திட்டம் சிறந்த முறையில் வளர நிறைய வாய்ப்புகள் உள்ளன.

இங்ஙனம் மதுரை மாவட்டத்தில் சிறு தொழில்களும், கிராமத் தொழில்களும் செழித்து வளர்வதைக் காணலாம். பெரிய ஆலைகளும், தொழிற்சாலைகளும் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியினை உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழும் வாழ்க்கையே உயர்ந்த வாழ்க்கை என்பதை உணர்ந்து மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். தொழில் துறையில் வருங்காலம் இன்னும் பல வெற்றிகளைத் தேடித்தரும் என்பதில் ஐயமில்லை.




நம் முன்னோர் கல்வியைக் கண்ணெனக் கருதி வந்தனர். கூடை முடையும் குறத்தியும், பானை வனையும் குயத்தியும் புலமைச் சிறப்போடு விளங்கியதாகப் பழந் தமிழிலக்கியம் பேசுகிறது. கல்வியைக் காட்டிலும் சிறந்த செல்வம் வேறு இல்லை என்பதை அனைவரும் உணர்ந்திருந்தனர். அதனால்தான் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்று கல்வியின் சிறப்பை உலகுக்கு உணர்த்தினான். தமிழக அரசாங்கம் கல்வி வளர்க்கும் பணியில் பெருங் கவனம் செலுத்தி வருகிறது. தமிழ் நாட்டில் 1950-51-ல் பொதுக் கல்விக்காக ரூ. 10·57 கோடி செலவிடப்பட்டது. ஆந்திரப் பிரிவினை காரணமாக நமது மாநிலத்தின் மக்கள் தொகை 40 சதவீதம் குறைந்தபோதிலும், 1955-56-ல் கல்விக்காகச்

செலவிடப்பட்ட தொகை ரூ. 10·93 கோடி ஆகும். இரண்டாவது திட்டத்தின் இறுதி ஆண்டாகிய 1960-61-ல் கல்விக்காக ஆன செலவுத் தொகை ரூ. 18·39 கோடியாகும். இவ்வாறு செலவுத் தொகைகளில் ஏற்பட்டுள்ள உயர்வு, கல்வித் துறையில் சாதிக்கப்பட்டுள்ள முன்னேற்றத்தை விளக்குகிறது. ஊர்தோறும் பள்ளிகளை ஏற்படுத்தியிருப்பதோடு, நண் பகல் உணவும் நிகர் ஆடையும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இலவசக் கட்டாயக்கல்வி வசதிகளை அளிப்பதே மாநில அரசின் குறிக்கோளாகும்.

தமிழகத்தின் நான்காவது பெரிய மாவட்டமான மதுரை கல்வித் துறையில் அடைந்திருக்கும் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். கடந்த பத்தாண்டுக் காலத்தில் பள்ளிகள் பெருகி வந்திருப்பதையும், படிப்போர் தொகை மிகுந்திருப்பதையும் கண்கூடாகக் காணலாம்.

**தொடக்கக் கல்வி**

பத்தாண்டுகளுக்கு முன்பு மதுரை மாவட்டத்தில் ஆதாரப் பள்ளிகள் உட்பட 1,619 தொடக்கப் பள்ளிகளும், 199 உயர்தர தொடக்கப்பள்ளிகளும் இருந்தன. முதல் ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேறிய நிலையில் இன்று ஆதாரப் பள்ளிகள் உட்பட 2,198 தொடக்கப் பள்ளிகளும், 261 உயர்தரத் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. 300 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள எல்லா ஊர்களிலும் பள்ளிகள் நிறுவப்படுகின்றன.

முதல் திட்ட முடிவில் 6 வயது முதல் 11 வயது வரையுள்ள சிறுவர்களுள் நூற்றுக்குத் தொன்னூற்றாறு பேர் கல்வி வசதிகள் பெற்றிருந்தனர். எனினும் நூற்றுக்கு 63 பேர் தான் பள்ளி சென்றனர். இரண்டாம் திட்டமுடிவில் நூற்றுக்குத் தொன்னூற்றி ஒன்பது பேர் கல்வி வசதி பெற்றுள்ளனர். அவர்களுள் 83 சதவீதத்தினர் பள்ளி செல்கின்றனர். எல்லாரையும் பள்ளிகளில் சேர்ப்பதற்குரிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. 1951-ல் 2,07,002 குழந்தைகள் கல்வி பயின்றனர். அவர்களுள் 1,39,674 சிறுவர்களும், 67,328 சிறுமிகளும் இருந்தனர். 1960-ல் கல்வி பயில்வோரின் எண்ணிக்கை 3,01,463 ஆக அதிகரித்தது. அவர்களுள் 1,90,085 சிறுவர்களும், 1,11,378 சிறுமிகளும் இருந்தனர்.

பள்ளிகளின் வளர்ச்சிக்கேற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. முதல் திட்டக் கால முடிவில் 5,446 ஆசிரியர்கள் இருந்தனர். இரண்டாம் திட்டக் கால முடிவில் ஆசிரியர்களின் எண்ணிக்கை 10,640 ஆக அதிகரித்தது.



அரசினர் பெண்கள் உணவு விடுதி: உசிலம்பட்டி

உழைப்பிற்கு மதிப்பு அளிக்கும் ஆதாரக் கல்வியிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆதாரக் கல்வியின் பெருமையை நன்கு உணர்ந்த தமிழக அரசு, தொடக்கப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றும் திட்டத்தை மேற்கொண்டது. முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் 27 ஆதாரப் பள்ளிகள் இந்த மாவட்டத்தில் இருந்தன. அவற்றில், 2,145 பையன்களும், 1,012 பெண்களும் கல்வி பயின்றனர். இரண்டாம் திட்ட முடிவில் ஆதாரப் பள்ளிகளின் எண்ணிக்கை 570 ஆக உயர்ந்தது. பயிலும் பையன்களின் எண்ணிக்கை 56,106 ஆகவும், பெண்களின் எண்ணிக்கை 34,633 ஆகவும் அதிகரித்தன. ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி அளிப்பது, ஆதாரப் பள்ளிகளுக்குக் கைத்திறத் தொழில் கருவிகள் அளிப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**நடுத்தரப் பள்ளிகள்**

முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் பையன்களுக்காக மூன்று நடுத்தரப் பள்ளிகளும், பெண்களுக்காக இரண்டு நடுத்தரப் பள்ளிகளும் இருந்தன. அவற்றில் முறையே 1,234 பையன்களும், 782 பெண்களும் பயின்று வந்தனர். முதல் ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் பையன்களுக்கான நடுத்தரப் பள்ளிகளின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்தது. இரண்டாம் திட்டக் காலத்தில் மூன்று நடுத்தரப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டன.

பிற மாநிலங்களின் பாராட்டைப் பெறும் வகையில் நண்பகல் உணவு வழங்கல், நிகர் ஆடை வழங்கல், பள்ளிச் சீரமைப்பு ஆகிய மூன்று திட்டங்களைத் தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது. நண்பகல் உணவுத் திட்டத்தின் கீழ் இந்த மாவட்டம் நல்ல பயன் அடைந்திருக்கிறது. 1957-ல் 827 இடங்களில் நண்பகல் உணவு வழங்கப்பட்டது. இரண்டாம் திட்டக் கால முடிவில் 2,283 இடங்களில் உணவு அளிக்கப்பட்டது. இதனால் 94,248 பிள்ளைகள் பயனடைந்தனர். நிகர் ஆடை வழங்கும் திட்டத்தால் 9,852 குழந்தைகள் பயனடைந்தனர். ஏறக்குறைய ரூ. 2,29,096 மதிப்புள்ள ஆடைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

ஊர்களிலுள்ள பள்ளிகளைச் சீரமைக்கும் வேலைகளை அந்தந்த ஊர் மக்களே ஏற்றுக் கொள்ளும் அருமையான திட்டம் தமிழகமெங்கும் நிறைவேறி வருகிறது. மக்களாட்சி மலர்ந்து வரும் இந்நாளில், கல்வித் துறையில் மக்கள் காட்டும் ஆர்வத்தைப் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் தெளிவாக உணர்த்துகின்றன. மதுரை மாவட்டத்தில் பதினெட்டு இடங்களில் இந்த மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தால் 1,815 பள்ளிகள் பயனடைந்துள்ளன. இந்தத் திட்டத்திற்காக வசூலான தொகை ரூ. 19,77,020 ஆகும். இத்தகைய அரிய திட்டங்களின் பயனாகக் கல்வித் துறையில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டம் இரண்டு கல்வி வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மதுரையில் ஒன்றும், திண்டுக்கல்லில் ஒன்றுமாக இரண்டு தலைமை அலுவலகங்கள் நிறுவப்பட்டன. தற்போது பத்து கல்வி டிவிஷன்கள் இந்த மாவட்டத்தில்உள்ளன.

**உயர்நிலைப் பள்ளிகள்**

தொடக்கக் கல்வியின் வளர்ச்சிக்கு ஏற்பவே, உயர்நிலைக் கல்வியும் வளர்ந்திருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்தில் பையன்களுக்காக 25 உயர்நிலைப் பள்ளிகளும், பெண்களுக்காக 9 உயர்நிலைப் பள்ளிகளும் இருந்தன. அவற்றில் முறையே 22,638 பையன்களும், 4,927 பெண்களும் பயின்று வந்தனர். இரண்டாம் திட்டக் கால முடிவில் பையன்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 67 ஆகவும், பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 16 ஆகவும் அதிகரித்தன. ஃபயன்களின் எண்ணிக்கை 36,142 ஆகவும், பெண்களின் எண்ணிக்கை 10,339 ஆகவும் உயர்ந்தன. பொறியியல், வேளாண்மை, மனை இயல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கும் பலநோக்குக் கல்வி வசதிகளும் உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டன. உயர்நிலைக் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக மத்திய அரசினரின் உதவியுடன் வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டன.

தொழில் துறையிலும், அறிவியல் துறையிலும் உலகம் முன்னேறி வரும் இந்நாளில் கல்லூரிக் கல்வி மிகமிக இன்றியமையாததாகும். இதை நன்கு உணர்ந்து, கல்லூரிக் கல்வியில் தமிழக அரசு சிறந்த கவனம் செலுத்தி வருகிறது. மதுரை மாவட்டத்தில் முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் நான்கு கல்லூரிகள் இருந்தன. அவற்றில் முறையே 2,252 மாணவர்களும், 207 மாணவிகளும் பயின்றனர். இரண்டாம் திட்டக்கால முடிவில் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. மாணவர் கல்லூரிகள் நான்காகவும், மகளிர் கல்லூரிகள் இரண்டாகவும் அதிகமாயின.



அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி : பெரியகுளம்

**ஆசிரியர் பயிற்சி**

முதல் திட்டக்காலத் தொடக்கத்தில் இரண்டு ஆண்கள் பயிற்சிப் பள்ளிகளும், ஆறு பெண்கள் பயிற்சிப் பள்ளிகளும் இருந்தன. அவற்றில் முறையே 427 ஆண்களும், 827 பெண்களும் பயின்று வந்தனர். ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆண்களுக்காக ஒன்றும், பெண்களுக்காக ஒன்றும் ஆக இரண்டு பள்ளிகள் இருந்தன. அவற்றில் முறையே 112 ஆண்களும், 53 பெண்களும் பயின்றனர். இரண்டாம் திட்ட முடிவில், ஆண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் 7 ஆகவும், பெண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் 10 ஆகவும் அதிகரித்தன. மேலூர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக்காக எல்லா வசதிகளும் கூடிய கட்டிடம் 1959-60-ல் ரூ. 3·11 லட்சம் செலவில் கட்டி முடிக்கப் பட்டது.

திண்டுக்கல் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் சமையலறை, உணவுக் கூடம் அமைக்க ரூ. 20,000 செலவிடப் பட்டது.

இரண்டாவது திட்டக் காலத்தில் தனியார் துறையில் மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி ஏற்படுத்தப் பட்டது. இதற்கு அரசாங்கம் பொருள் உதவி அளிக்கிறது. இதில் ஆண்டுக்கு 120 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.



தியாகராசர் என்ஜினியரிங் கல்லூரி

மதுரை தமிழ்நாடு கைத்தொழில் பயிற்சிப் பள்ளியில் முதல் திட்டக் கால இறுதியில் ஆண்டு ஒன்றுக்கு 140 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இரண்டாவது திட்டக் கால இறுதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை 186 ஆகும்.

**சமூகக் கல்வி**

பள்ளி செல்லும் சிறுவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து தருவதால் மட்டும் சமுதாயம் ஏற்றம் பெற்று விடாது. சிறுவயதில் படிக்கும் வாய்ப்பை இழந்து, பிற் காலத்தில் அவதிப்படுவோருக்கும் கல்வி அறிவு ஊட்டும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. அதன்படி, இரண்டாவது திட்டக் காலத்தில் முதியோர் கல்வியை வளர்ப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. கிராமங்களில் முதியோர் பள்ளிகளும், நூலகங்களும் நிறுவப்பட்டன. முதல் திட்டக்காலத் தொடக்கத்தில் மதுரை மாவட்

டத்தில் 48 முதியோர் பள்ளிகள் இருந்தன. சுமார் 2,145 பேர் பயின்று வந்தனர். இரண்டாம் திட்ட முடிவில் முதியோர் பள்ளி களின் எண்ணிக்கை 135 ஆக உயர்ந்திருக்கிறது. திருமங்கலத்தில் 1957 மே மாதம் முதியோர் கல்விப் பயிற்சிப் பள்ளி தொடங்கப் பட்டது.

**நூலகம்**

மக்களின் கல்வி ஆர்வத்தை வளர்க்கும் வகையில் நூலகங்கள் நிறுவப்பட்டன. முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் மதுரை நகரில் ஒரு மத்திய நூலகம் மட்டும் இருந்தது. இரண்டாம் திட்டக்கால முடிவில் 48 கிளை நூலகங்களும், 49 புத்தகம் வழங்கும் இடங்களும் இம் மாவட்டத்தில் உள்ளன.

இங்ஙனம் கல்வித்துறையில் மதுரை மாவட்டம் நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது. 1951-ல் எழுதப்படிக்கத் தெரிந்தோர் 20·3 சதவீதத்தினரே இருந்தனர். இன்று 32·3 சதவீதத்தினர் எழுதப் படிக்கத் தெரிந்தோராக உள்ளனர். படிக்கவைக்க வேண்டும் என்ற



ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப்பள்ளி : மேலூர்

ஆர்வம் பெற்றோருக்கும், படிக்கவேண்டும் என்ற விருப்பம் சிறுவர் களுக்கும் ஏற்பட்டிருக்கும் நல்ல சூழ்நிலை இன்று உருவாகி யிருக் கிறது. பத்து ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள இத்தகைய வளர்ச்சி வளமான எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை ஊட்டுகிறது. அந்த நம்பிக்கையில் கல்வி விளக்கின் ஒளியைப் பரப்பும் பணியில் அனைவரும் ஈடுபடுவது அவசியமாகும்.

# நாட்டின் நரம்புகள்

'நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானது எது என்று என்னைக் கேட்டால் செய்தித் தொடர்பையும், போக்குவரத்தையும் தான் குறிப்பிடுவேன்' என்று இந்தியாவின் கவர்னல் ஜெனரலாக இருந்த வேவல் பிரபு ஒரு முறை கூறினர். போக்குவரத்துக்கு முக்கியமாக இருப்பது சாலைகளாகும். கிராமங்களை இணைக்கவும், மக்களிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படவும், சாலைகள் பெரிதும் உதவியாக இருக்கின்றன.

உலகத்திலேயே நல்ல தரமான சாலைகளை அமைப்பதில் பாரசீகநாடு தான் முதன்மையாக இருந்தது. இயேசு கிருஸ்து பிறப்பதற்கு ஆறுநூறு ஆண்டுகளுக்கு முன்பே இந்த நாட்டு

மக்கள் பெரிய சாலை ஒன்று அமைத்தார்கள். அந்த நாட்டிற்கு அடுத்தபடியாக நம் நாடுதான் சாலைகள் அமைப்பதில் சிறந்து விளங்கியது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு, ஏழாம் நூற்றாண்டுகளில் இந்த நாட்டிற்கு வந்த பாகியான், யுவான்சுவாங் ஆகிய சீன யாத்திரிகர்கள் இந்திய நாட்டின் சாலைகளைப் புகழ்ந்து எழுதியுள்ளனர். இந்த நாட்டை ஆண்ட முஸ்லீம் மன்னர்களுள் ஷெர்ஷா சாலைகளை அமைத்துப் புகழ் பெற்றார். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சாலைகள் அமைக்கப்பட்ட போதிலும், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் அமைப்பதில் மட்டுமே அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர்.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு இந்தத் துறையில் பெருங் கவனம் செலுத்தப்பட்டது. சென்ற பத்தாண்டுகளில் தமிழ் நாட்டில் நல்ல சாலை வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்கின்றனர். முதல் திட்ட ஆரம்பகாலத்தில் தமிழகத்தில் 6,800 மைல் கிராமச் சாலைகளும், 14,400 மைல் நீளமுள்ள மற்றச் சாலைகளும் இருந்தன. முதல் திட்டக் காலத்தில் 1,643 மைல்களுக்குக் கப்பி போடப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் 2,860 மைல் கப்பி போடப்பட்ட சாலைகளும், 1,830 மைல் புதிய சாலைகளும் அமைக்கப்பட்டன. சென்ற பத்தாண்டுகளில் 4,690 மைல் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**சாலைகள் பராமரிப்பு**

சாலைகளை நல்ல நிலையில் வைத்துப் பராமரிப்பதற்காக நம்து மாநிலம் ஆண்டுதோறும் ரூ. 3 கோடி செலவிட்டு வருகிறது. அத்துடன், இரண்டாவது திட்டக்காலத்தில் அரசாங்க நிர்வாகத்தின் கீழுள்ள சாலைகளில் 31 பெரிய பாலங்களும், 104 சிறிய பாலங்களும் கட்டி முடித்திருக்கின்றனர். மாவட்டக் கழகத்தின் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய சாலைகளில் 12 பெரிய பாலங்களும், 120 சிறிய பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மாவட்டக் கழகத்தின் கீழிருந்து வந்த சாலைகளில் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டவை போக, எஞ்சியுள்ள சாலைகளின் பராமரிப்பு பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பாகும். அதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அரசாங்க மானியம் கொடுக்கப்படும். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 120 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை திட்டக் காலத் தொடக்கத்தில் 25 மைல் நீளமுள்ள காங்கிரீட் சாலைகளும், 52 மைல் தார் போட்ட சாலைகளும், 518 மைல் நீளமுள்ள கப்பிபோட்ட சாலைகளும் 26 மைல் நீளமுள்ள மண்சாலைகளும் இருந்தன. தார், கப்பி, மண் போடப்பட்ட மாவட்டக் கழகச்சாலைகளின் நீளம் 870 மைல்களா

கும். நிர்வாக வசதிக்காக மதுரை மாவட்ட நெடுஞ்சாலைத் துறை 1957-ல் தெற்குப் பிரிவு, வடக்குப்பிரிவு என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. தெற்குப் பிரிவிற்கு மதுரையும், வடக்குப் பிரிவிற்குத் திண்டுக்கல்லும் தலைமை இடங்களாகும்.

கடந்த பத்தாண்டுகளில் இந்த மாவட்டத்தில் 18 மைல் சிமெண்ட் காங்கிரீட் சாலைகளும், 388½ மைல் தார் போட்ட சாலைகளும் அமைக்கப்பட்டன.

**பாலங்கள்**

மதுரை நகராட்சி எல்லைக்குள் வைகையாற்றின் குறுக்கே உள்ள ஊடுபாதை முதல் திட்டக் காலத்தில் ரூ. 75,000 செலவில் செப்பனிடப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் பெரிய பாலங்கள், ஊடுபாதைகள் அமைக்கப்பட்டன. அவற்றிற்குச் சுமார் ரூ. 21,75,000 செலவாயிற்று.

முதல் திட்டக்காலத்தில் மதுரை—தேனி சாலை, பெரியகுளம்-குருவநூத்து சாலை, திருமங்கலம்-உசிலம்பட்டி சாலை, திண்டுக்கல்-வேட்டானம்சாலை ஆகியவற்றில் உள்ள மதகுகள் சீர்திருத்தி அமைக்கப்பட்டன. வத்தலக்குண்டு-பேரையூர் சாலையில் மஞ்சளாற்றின் குறுக்கே ஒரு ஊடுபாதை அமைக்கப்பட்டது. இவற்றிற்காக ரூ. 1·70 லட்சம் செலவிடப்பட்டது.

மேலக்காரன் பாலம்



இரண்டாவது திட்டக் காலத்தில், திண்டுக்கல் பிரிவில் 31 மதகுகள் அமைக்கும் வேலைகள் ரூ. 8,37,000 செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டன. திட்டக் கால முடிவில் 30 வேலைகள் முடிக்கப் பட்டன. ஒன்று முடியும் தறுவாயில் இருக்கிறது. மதுரைப் பிரிவில் ரூ. 1,01,500 செலவில் ஐந்து வேலைத் திட்டங்கள் முடிக்கப் பட்டன. பெரியகுளம்-குமுளி சாலையில் உள்ள இரும்புப் பாலத்தைத் திருத்தி அமைத்தல், மதுரை-தேனி சாலையில் மதகு அமைப்பது, அரண்மனைப்புதூர் அருகில் சுருளியாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இவ்வேலைகளுக்காக ரூ. 49,000 செலவிடப்பட்டது.

போடிநாயக்கனூரிலிருந்து கேரளா எல்லைக்கு அருகில் உள்ள போடிமேட்டுக்கு 12 மைல் 4 பர்லாங்கு மலைப் பாதை அமைக்கும் வேலை திட்டக் காலத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டது. வேலை முடியும் தறுவாயில் இருக்கிறது. இதுவரை ரூ. 21,39,555 செலவிடப் பட்டிருக்கிறது. இந்தப் பாதையில் கார் செல்லமுடியும். இன்னும் பயணிகள் விடுதி கட்டும் வேலை, சில சிறு வேலைகள் இப்போது கவனிக்கப் படுகின்றன.

**பஸ் போக்குவரத்து**

சாலை வசதிகளைப் போலவே, பஸ் போக்குவரத்துத் துறையிலும் மதுரை மாவட்டம் சிறந்து விளங்குகிறது. திட்டத்தில் போக்குவரத்து வளர்ச்சிக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது. தொழில் வளர்ச்சி ஏற்பட ஏற்பட, போக்குவரத்து வசதியும் வளர்ந்தால் தான் பொருளாதார வளர்ச்சி ஏற்படமுடியும்.

முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் இந்த மாவட்டத்தில் 343 ஸ்டேஜ் கேரியர்களும், 389 பப்ளிக் கேரியர்களும், 90 பிரைவேட் கேரியர்களும், 48டாக்ஸிகளும் இருந்தன. முதல் திட்டக் காலத்தில் 7 ஸ்டேஜ் கேரியர்களும், இரண்டாவது திட்டக் காலத்தில் 44 ஸ்டேஜ் கேரியர்களும் அதிகமாயின. தற்போது 394 ஸ்டேஜ் கேரியர்கள் உள்ளன. பப்ளிக் கேரியர்கள் முதல் திட்டக்காலத்தில் 67-ம், இரண்டாவது திட்டக்காலத்தில் 172-ம் அதிகமாயின. தற்போது 628 பப்ளிக் கேரியர்கள் உள்ளன. பிரைவேட் கேரியர்கள் முதல் திட்டக்காலத்தில் 7-ம், இரண்டாவது திட்ட காலத்தில் 51-ம் அதிகமாயின. தற்போது 148 பிரைவேட் கேரியர்கள் உள்ளன. முதல் திட்டக் காலத்தில் 21 டாக்ஸிகளும், இரண்டாவது திட்டக்காலத்தில் 83 டாக்ஸிகளும் அதிகமாயின. தற்போது 110 டாக்ஸிகள் உள்ளன.

முதல் திட்டக் காலத்தில் மதுரை-கங்குவார்பட்டி, பட்டிவீரன் பட்டி—தாண்டிக்குடி முதலிய ஏழு புதிய பஸ் மார்க்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் மதுரை—அழகர்



டி.வி. எஸ். தொழில்கூடத்தின் முன்தோற்றம் : மதுரை

கோயில், போடி—லோயர்கேம்ப், தேனி—லோயர்கேம்ப், மதுரை—தேனி, திண்டுக்கல்—பழனி, திண்டுக்கல்—புதூர் முதலிய பதினேழு புதிய பஸ் மார்க்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. மதுரை—கொடைக்கானல், மதுரை—திண்டுக்கல், மதுரை—பழனி, மதுரை—விருதுநகர், திண்டுக்கல்—கம்பம், திண்டுக்கல்—லோயர்கேம்ப் முதலிய மார்க்கங்களில் கூடுதலாகப் பஸ்கள் விடப்பட்டன. மதுரை—திண்டுக்கல், மதுரை—பழனி, மதுரை—விருதுநகர், மதுரை—இராசபாளையம், திண்டுக்கல்—லோயர்கேம்ப், மதுரை—தேனி, திண்டுக்கல்—பழனி ஆகிய மார்க்கங்களில் 14 எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்பட்டன.

மதுரையில் டி. வி. எஸ் டவுன் பஸ் வசதிகள் உள்ளன. எல்லா பஸ் நிலையங்களிலும் வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இங்ஙனம் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் போக்குவரத்து வசதிகள் பெருகியுள்ளன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப சாலைகள் அபிவிருத்தியும் ஏற்படுகிறது. வாணிபம் செழிக்கவும், தொழில் வளம் சிறக்கவும், சாலைகளும், போக்குவரத்து வசதிகளும் பேருதவியாக இருக்கின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாததாய் போக்குவரத்து இன்று அமைந்து விட்டது. மதுரை மாவட்டம் இந்தத் துறையில் நல்ல வளர்ச்சியைக் கண்டு வருகிறது.

———




பசி தீர உண்பதிலும், பட்டாடை உடுத்துவதிலும் வாழ்வு நிறைவு பெறாது. மகிழ்ச்சியான உள்ளமும், ஆரோக்கியமான உடலும் இருந்தால்தான் பூரணத்துவம் உண்டாகும். ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது நம் துணிபு. நாட்டிற்கு இலக்கணம் கூறிய திருவள்ளுவர்,

> ''பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
> அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து''

என்று பிணியின்மைக்கு முதலிடம் தருகிறார். சுதந்திர அரசாங்கம் நோயைப் போக்கவும், நோய் வராமல் காக்கவும் பல பணிகள் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் சுகாதாரத் திட்டங்களுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 14·35 கோடி செலவாகியிருக்கிறது. தற்போது ஆறு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன.

மதுரை மாவட்டத்தில் இந்தத் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உணவுப் பற்றுக் குறையும் நோய்க்கு ஒரு காரணமாக அமையும். அதனுல் உணவு உற்பத்தியைப் பெருக்குவதன் அவசியத்தைப் பற்றிச் சிறு சிறு நூல்களும், சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன. உணவு விடுதிகளில் தூய்மையைப் பாதுகாக்க, சுகாதார அதிகாரிகள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர். மேலூர், அல்லி நகரம், சோழவந்தான், திருமங்கலம், சின்னமனூர், வத்தலக்குண்டு, உசிலம்பட்டி, நிலக்கோட்டை, கூடலூர், கம்பம், ஆயக்குடி, கீரனூர் ஆகிய பஞ்சாயத்துகளில் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் அமுலாக்கப்பட்டது.

பல இடங்களில் குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டன அவற்றுள் சில முக்கியமான திட்டங்களாவன:—

| | பெயர் | செலவு மதிப்பு | இதுவரை ஆன செலவு |
|---|---|---|---|
| 1. | மதுரை தண்ணீர் வழங்கு திட்டம் (முதல் நிலே) | ரூ. 23,60,000 | ரூ. 20,07,271 |
| 2. | மதுரை தண்ணீர் வழங்கு திட்டம் (இரண்டாம் நிலே) | ரூ. 3,49,000 | ரூ. 21,369 |
| 3. | மதுரை தண்ணீர் வழங்கு திட்டம் | ரூ. 13,40,000 | ரூ. 12,40,589 |
| 4. | மதுரை வடிகால் திட்டம் (வட்டாரம்-7) | ரூ. 2,78,000 | ரூ. 2,60,286 |
| 5. | மதுரை வடிகால் திட்டம் (வட்டாரம்-1A) | ரூ. 3,69,000 | ரூ. 3,08,204 |
| 6. | மதுரை வடிகால் திட்டம் (இணைப்பு வேலேகள்) | ரூ. 2,17,000 | ரூ. 95,942 |
| 7. | மதுரை வடிகால் திட்டம் (வட்டாரம்-8) | ரூ. 18,40,000 | ரூ. 15,60,068 |
| 8. | மதுரை வடிகால் திட்டம் (வீடுகளில் இணைப்பு வேலேகள்) | ரூ. 2,56,350 | ரூ. 2,42,765 |
| 9. | கம்பம் பகுதி பஞ்சாயத்துக்களில் தண்ணீர் வழங்கு திட்டம் | ரூ. 47,10,000 | ரூ. 39,89,446 |
| 10. | திண்டுக்கல் தண்ணீர் வழங்கு திட்டம் | ரூ. 87,32,000 | ரூ. 82,86,450 |
| 11. | கொடைக்கானல் தண்ணீர் வழங்கு திட்டம் | ரூ. 71,050 | ரூ. 65,839 |

இவற்றுள் ஏறக்குறைய எல்லா வேலேகளும் முடிக்கப் பெற்றுவிட்டன. நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில், நீரைப் பாது காப்பதற்கு முதலிடம் தரப்பட்டது.

பிணி போக்கி, உடல் நலம் பேண மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் திட்டக்காலத் தொடக்கத்தில் 800 படுக்கைகள் இருந்தன. தற்போது அவை 1,100 ஆக அதிகரித்துள்ளன. சுமார் ரூ. 10 லட்சம் செலவில் புதிய சாதனங்கள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல், பெரியகுளம், பழனி, மேலூர், திருமங்கலம், போடிநாயக்கனூர், உசிலம்பட்டி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் பல வசதிகளுடன் கூடிய அரசாங்க மருத்துவ மனைகள் உள்ளன. இவற்றில் 303 படுக்கைகள் உள்ளன.

தல நிதியின் கீழும், பஞ்சாயத்து யூனியனின் கீழும் மருத்துவ நிலையங்கள் பல இயங்குகின்றன. திண்டுக்கல், பழனி, பெரிய குளம், நிலக்கோட்டை, திருமங்கலம், மேலூர், கொடைக்கானல் ஆகிய வட்டங்களில் 20 மருத்துவ நிலையங்களும், 12 கிராமப் புற மருத்துவ நிலையங்களும் உள்ளன.

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

மதுரையில் தொத்து நோய் மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்கு முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அனுமதியளிக்கப் பட்டது. 1958-ல் இது கட்டி முடிக்கப்பட்டது. இங்கு 40 படுக்கைகள் உள்ளன. 1958-ல் 200 பேருக்கும், 1959-ல் 800 பேருக்கும், 1960-ல் 1,500 பேருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது.

ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற அளவில் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்பச் சுகாதர நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தாடிக்கொம்பு, நத்தம், திருப்பரங்குன்றம், டொம்புச் சேரி, அலங்காநல்லூர், ஆத்தூர், வாடிப்பட்டி, வெள்ளலூர், சின்னாளப்பட்டி, கல்லந்திரி, எழுமலை, செக்கானூரணி ஆகிய இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டன.

இவற்றுடன் 57 துணைநிலையங்களும் இயங்கி வருகின்றன. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணி புரிவோருக்கு தாடிக்கொம்பு டொம்புச்சேரி, கல்லந்திரி, நத்தம், அலங்காநல்லூர், வாடிப்பட்டி, செக்கானூரணி, திருப்பரங்குன்றம், வெள்ளலூர் ஆகிய இடங்களிலும், நர்ஸ்கள் தங்குவதற்காக திண்டுக்கல், பழனி, பெரியகுளம் ஆகிய இடங்களிலும் விடுதிகள் கட்டித் தரப்பட்டன.

கிராமப்புறங்களில் மகப்பேறு மருத்துவ வசதிகள் சிறப்பான முறையில் செய்து தரப்பட்டன. முதல் திட்ட ஆரம்பத்தில் இந்த மாவட்டத்தில் 17 தாய் சேய் நல நிலையங்கள்

இருந்தன. 1955—56-ல் மேலும் 8 நிலையங்கள் திறக்கப்பட்டன. இவற்றுடன், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் 45 நிலையங்கள் திறக்கப்பட்டன. இவையல்லாமல், சமூக நல விஸ்தரிப்புத் திட்டக் குழுவின் நிர்வாகத்தின் கீழ் 7 நிலையங்கள் இயங்கி வருகின்றன.

### தாயிகளுக்குப் பயிற்சி

கிராமங்களில், பேறு காலங்களில் உதவி செய்யும் பெண்கள் தாயிகள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் மகப்பேறு துறையில் பயிற்சி பெற்றவர்கள் அல்லர். இத்தகையவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் நன்கு உணர்ந்தது. சுகாதாரப் பணியாளர்கள், பேறு கால உதவியாளர்கள் ஆகியோரைக் கொண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் குழந்தை மருத்துவ நிலையங்களிலும் இப்பயிற்சி நடைபெறுகிறது. பயிற்சிக் காலம் ஆறு மாதம் ஆகும். பயிற்சி முடிந்ததும், தாயிகள் கிராமங்களில் பணி புரிகின்றனர். இரண்டாம் திட்டக் காலத்தில் இத்தகைய பயிற்சி சிறப்பான முறையில் நடைபெற்றது.

| பயிற்சி இடங்கள் | பயிற்சி பெற்றோர் |
|---|---|
| வடமதுரை பேறுகாலக் குழந்தை நல நிலையம் | 33 |
| தேவாரம் பேறுகாலக் குழந்தை நல நிலையம் | 68 |
| செக்கானூரணி ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 33 |
| கல்லந்திரி ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 23 |
| தாடிக்கொம்பு ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 60 |
| சின்னாளப்பட்டி ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 35 |
| வாடிப்பட்டி ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 24 |
| வெள்ளலூர் ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 23 |
| டொம்புச்சேரி ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 30 |
| அலங்காநல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 33 |
| நத்தம் ஆரம்பச் சுகாதார நிலையம், அதன் துணை நிலையங்கள் | 31 |

சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன அவற்றுள் சுகாதார முறையில் கக்கூஸ்கள் அமைத்துத் தந்தது குறிப்பிடத் தக்கதாகும். வீட்டுச் சொந்தக்காரர்களுக்குக் கக்கூஸ் தொட்டிகள் சலுகை விலைக்கு வழங்கப்பட்டன. தகுதியுள்ள சிலருக்கு இலவசமாகவே வழங்கப்பட்டன. தனிப்பட்டவர் தம் வீடுகளில் அவைகளை அமைக்க விரும்பினால் அதற்குரிய ஆலோசனைகளைப் பொதுச் சுகாதாரத் துறை வழங்கியது. இரண்டாவது திட்டக் காலத்தில் பழனி, உத்தமபாளையம், மேலூர், திண்டுக்கல் (தெற்கு), நிலக்கோட்டை, மதுரை, திருமங்கலம், உசிலம்பட்டி, பெரியகுளம், திண்டுக்கல் (வடக்கு) ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்ட கக்கூஸ்களின் எண்ணிக்கை 2,132 ஆகும்.

இரண்டாம் திட்டக் காலத்தில் 1,920 கக்கூஸ்கள் அமைக்கவே திட்டமிடப்பட்டது. இலக்கிற்கு மேலாக 2,132 கக்கூஸ்கள் திட்டக் காலத்தில் கட்டப்பட்டன.

**மருத்துவ மனைகள்**

முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் வட்டத் தலைமை மருத்துவ மனைகளில் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

திண்டுக்கல் மருத்துவமனையில் இருபது படுக்கைகள் கொண்ட 3 வார்டுகள் கட்டுவதற்கான வேலை நடைபெறுகிறது. இந்த வேலை முடிந்தவுடன், 110 படுக்கைகள் இருக்கும். இங்கு ஒரு எக்ஸ்ரே பகுதி கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ரத்தச் சேமிப்பு நிலையம் அமைக்கும் வேலைகள் நடைபெறுகின்றன. விரைவில் இந்த மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனை நிலைக்கு உயர்த்தப்படும். தற்போது நர்ஸிங் ஆர்டர்லிகளுக்குப் பயிற்சி அளிக்கும் நிறுவனமாகவும் இது விளங்குகிறது. இங்குள்ள நடமாடும் மருத்துவப் பிரிவு, பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்தித் தருகிறது.

பழனி அரசாங்க மருத்துவ மனையில் புது முறையில் அறுவை அரங்கம் ஒன்றும், எக்ஸ்-ரே பகுதி ஒன்றும் கட்டப்பட்டிருக்கின்றன. இருபது படுக்கை வசதிகள் கொண்ட வார்டு புதிதாகக் கட்டப்பட்டிருப்பதால், தற்போது மொத்தம் 63 படுக்கை வசதிகள் உள்ளன. வெளி நோயாளிகள் பிரிவும் கட்டப்பட்டுள்ளது.

பெரியகுளத்தில் எக்ஸ்-ரே பகுதி ஒன்று கட்டப்பட்டுள்ளது. புதிதாக 24 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 60 படுக்கைகள் உள்ளன.

மேலூர் மருத்துவ மனையில் ஏற்கெனவே உள்ள 12 படுக்கை வசதிகளைத் தவிர, மேலும் 40 படுக்கை வசதிகளுக்காகப் புதிய வார்டு திறப்பதற்கான வேலைகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. எக்ஸ்-ரே பகுதிக்கான கட்டிட வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கொடைக்கானல் மருத்துவ மனையில் எக்ஸ்-ரே பிரிவு சிறந்த முறையில் இயங்கி வருகிறது. மகப்பேறு மருத்துவமனை விஸ்தரிப்புக்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**மகப்பேறு நிலையம்**

திருமங்கலத்திலுள்ள மருத்துவமனையில் 48 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு புது வார்டுக்கான வேலைகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. மேலும் 12 படுக்கைகளுடன், ஒரு மகப்பேறு மருத்துவப் பிரிவு அமைக்கப்படுகிறது. உசிலம்பட்டி மருத்துவ மனையில் படுக்கை வசதி 20-லிருந்து 32 ஆக உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஆஸ்டின்பட்டியில் உள்ள காசநோய் மருத்துவ மனை



நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்பு வேலையின் அவசியத்தை அரசாங்கம் நன்கு உணர்ந்தது. அதற்காகவே இரண்டு சுகாதார அதிகாரிகளும், நான்கு உதவியாளர்களும் ஒட்டன்சத்திரம், மேலூர் பகுதிகளில் 1959 முதல் பணியாற்றி வருகின்றனர். நரம்புச் சிலந்தி நோய் பரவும் இடங்களுக்கு சுகாதாரப் பணியாளர் உடனே சென்று அதை ஒழிப்பதற்கான வேலைகளை மேற்கொண்டனர். குடி நீர்க் கிணறுகளில், குளோரின் மருந்து இடுவதோடு, குடிநீர்ப் பாது காப்பிற்குரிய பிரச்சார வேலைகளையும் செய்தனர். கிராமக் குடிநீர் வழங்கு திட்டம், உள்ளூர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் புதிதாகக் கிணறுகள் அமைக்கப்பட்டன.

## குடும்பக் கட்டுப்பாடு

பொது மக்கள், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை அறிந்து கொள்ள வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. அளவான குடும்பம்



மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் மகப்பேறு பிரிவு

சமுதாய நல்வாழ்வுக்கு அடிப்படை என்பதை அனைவரும் உணர வேண்டிய கட்டத்தில் இன்று நாடு இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் குடும்பக் கட்டுப் பாட்டிற்கான அறுவை மருத்துவ முறைகளைப் பற்றியும், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தைப் பற்றியும் சுகாதாரப் பணியாளர்கள் விளக்கம் தருகின்றனர்.



தொழுநோய் சிகிச்சை நிலையம்: செம்பட்டி

இத்துறையில் சுகாதாரப் பணியாளர் தனிப் பயிற்சியும் பெற்றனர். முதன் முதலாக திண்டுக்கல், பெரியகுளம், பழனி ஆகிய மூன்று இடங்களில் குடும்பக்கட்டுப்பாடு முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அறுவைச் சிகிச்சை மூலம் சந்தான பூர்த்தி செய்து கொள்வோருக்கு ஆள் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் வழங்கப்பட்டது. மேற்கண்ட வசதிகள் திருமங்கலம், மேலூர், கொடைக்கானல், போடிநாயக்கனூர், உசிலம்பட்டி ஆகிய இடங்களிலும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை, திண்டுக்கல் மருத்துவமனை ஆகியவை தீவிரக் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி அறுவை சிகிச்சை நிலையங்களாக அனுமதிக்கப்பட்டன.

நகர்ப்புற நிலையங்களுக்குப் பெருவாரியான மக்கள் வந்து செல்கிறார்கள். மதுரை-இராமநாதபுரம் சாலையிலுள்ள நகரப்புற நிலையத்தில் 1960 எப்ரல் மாதத்தில் மட்டும் 625 பேர் வந்து சென்றிருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும் உள்ள நிலையங்களில் இந்த மாதக் கணக்கைப் பார்த்தால் இந்தியாவில் உள்ள நிலையங்களில் மதுரை நிலையத்திற்கு அதிக எண்ணிக்கையுள்ளவர்கள் வந்திருப்பதை அறியலாம். அந்த மாதத்தில் குறிப்பிடத்தக்க நிலையமாக மதுரை

நிலையம் புதுடில்லி சுகாதாரத் துறை பொது நெறியாளரால் தேர்ந் தெடுக்கப்பட்டது.

தொழு நோய் மருத்துவத்திற்காக முதன் முதல் அரசாங்கத் தொழு நோய் மருத்துவ மனை செம்பட்டியில் ஏற்படுத்தப்பட்டது. திருமங்கலம், கல்லுப்பட்டி, உசிலம்பட்டி ஆகிய இடங்களில் மேலும் சில நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றிற்கு கௌரவ டாக்டர் ஒருவர் பொறுப்பாளராக இருக்கிறார். அலங்காநல்லூர், வெள்ளலூர், கல்லந்திரி, வாடிப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் தொழு நோய்த் தடுப்பு மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன.

**மருத்துவ ஆராய்ச்சி**

எல்லா வசதிகளுடன் கூடிய புதிய ஆராய்ச்சி நிலையம் திண்டுக்கல்லில் செயலாற்றுகிறது. காந்திக் கிராமம் முன்னோடிச் சுகாதாரத்



சுகாதாரப்பணி வண்டி: வாடிப்பட்டி

திட்டத்தின் கீழ் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் ஆராய்ச்சி வேலைகளைச் செவ்வனே நடத்தி வருகின்றனர்.

கிராமப்புறங்களில் நோய்களைப் போக்கவும், தடுக்கவும் சுகாதார வசதிகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளது. அதற்கான வழி

வகைகளைக் காணவே காந்திக் கிராமம் முன்னேடிக் கிராமத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. போர்டு (Ford Foundation) நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு, தமிழ்நாடு சுகாதார, மருத்துவத்துறை, காந்திக் கிராமம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் இங்கு ஆராய்ச்சி நடைபெறுகிறது. 1959 மே மாதம் முதல் ஐந்து ஆண்டுகளுக்காக இந்தத் திட்டம் செயல்படுகிறது. ஆத்தூரில் தனியே பிரிக்கப்பட்டிருக்கும் சமுதாய நல வளர்ச்சி வட்டாரத்தில் நோய் போக்கவும், நோய் வராமல் காக்கவும் மேற்கொள்ள வேண்டிய சுகாதாரப் பணிகளைப்பற்றி இந்தத் திட்டம் ஆராய்கிறது. சுகாதாரத் திட்டத்தின் வேலைகளைத் தனி ஆலோசனைக் குழு ஆர்வத்துடன் கவனிக்கிறது.

**மதுரை மருத்துவக் கல்லூரி**

இந்த மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். 1954-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தக் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டது. கட்டிட வேலைகளுக்காகத் திட்டக் காலத்தில் சுமார் ரூ. 41·45 லட்சம் செலவிடப்பட்டது தொடக்கத்தில் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். தற்போது

மதுரை மருத்துவக் கல்லூரி



மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 150 ஆக உயர்ந்திருக்கிறது. விடுதிகளில் 550 மாணவர்களும், 156 மாணவிகளும் உள்ளனர்.

இங்ஙனம் மதுரை மாவட்டம் மருத்துவத் துறையில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. இத்தகைய முன்னேற்றம் நோயற்ற வாழ்வுக்கு அடிப்படையாக அமைகிறது. பிணி போக்கும் பணியில் பெற்று வரும் வெற்றிகள் வளமான எதிர்காலத்தில் சிறந்த நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.

# கூட்டுறவின் சாதனைகள்

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற உண்மையை நாடு நன்கு உணர்ந்திருக்கிறது. ஒன்றுபட்டுப் பணியாற்றினால் சிறந்த வெற்றிகளை அடையலாம் என்பதை மக்கள் அறிந்திருக்கிறார்கள். அதனால்தான் கூட்டுறவின் பெருமை இன்று எங்கும் பேசப் படுகிறது. மக்களின் நல்வாழ்விற்காக எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறையைப் பின்பற்ற வழி செய்யப்படுகிறது. குறிப் பாக, பண நெருக்கடியால் அவதிப்படும் குடியானவர்களுக்குப் பெரிதும் உதவியாகக் கூட்டுறவு முறை விளங்குகிறது.

தற்போது தமிழகத்தில் ஒவ்வொரு கிராமமும் கூட்டுறவு வசதி யைப் பெற்றிருக்கிறது. கிராமப் பகுதி மக்களில் நூற்றுக்கு ஐம்பத்து நான்கு பேர் கூட்டுறவுச் சங்கங்களின் பயனைப் பெற்றுள் ளார்கள். கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக 1953—54-ல் 4 கோடி ரூபாய் குடியானவர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது. தற்போது அது 25 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

குடியானவர்களுக்குக் கடன் வழங்குவதோடு, அவர்களுக்கு வேண்டிய உரம், பூச்சி கொல்லும் மருந்து, வேளாண்மைக் கருவிகள் போன்றவைகளை நியாயமான விலைக்கு வழங்கவும், குடியானவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்கவும் கூட்டுறவு இயக்கம் பெரிதும் பயன்படுகிறது.

**கூட்டுறவு நிறுவனங்கள்**

கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்ந்திருக்கும் மாவட்டங்களுள் மதுரை குறிப்பிடத்தக்கதாகும். மதுரை மாவட்டத்தில் 1,102 கிராமங்கள் இருக்கின்றன. இரண்டாவது திட்டக் காலத் தொடக்கத்தில் 83·5 சதவீதம் கிராமங்கள் கூட்டுறவு அமைப்புக்களால் பயனடைந்தன. தற்போது எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திட்டக் காலத் தொடக்கத்தில் கிராம மக்களில் 23·6 சதவீதம் பேர் இதனால் பயனடைந்தனர். திட்டக் கால முடிவில் இந்த எண்ணிக்கை 66·7 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. முதல் திட்டக் காலத்தில் 846 கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் இருந்தன. இரண்டாவது திட்டக்காலத்தில் 122 சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன, தற்போது 968 கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் உள்ளன. 1955—56-ல் குடியானவர்களுக்குக் கடன் தொகையாக 0·81 கோடி ரூபாய் அளிக்கப்பட்டது. 1960—61-ல் இந்தத் தொகை ரூ. 2·53 கோடியாக அதிகரித்திருக்கிறது. மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு பாங்கு, மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வசதி செய்து தருகிறது.

**பொருள் உதவி**

கிராமக் கடன் வழங்கு சங்கங்களுக்குப் பொருள் உதவி அளிக்கப்படுகிறது. முதலாண்டு ரூ. 150, இரண்டாவது ஆண்டு ரூ. 100, மூன்றாவது ஆண்டு ரூ. 50 என்ற அடிப்படையில் உதவி அளிக்கப்படுகிறது. இதன்படி கடந்த நான்காண்டுகளில் 286 சங்கங்கள் பொருள் உதவி பெற்றன. அளிக்கப்பட்ட உதவித் தொகை சுமார் ரூ. 61,374 ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்கு முதல் ஆண்டில் ரூ. 300-ம், இரண்டாவது ஆண்டில் ரூ. 240-ம், மூன்றாவது ஆண்டில் ரூ. 180-ம், நான்காவது ஆண்டில் ரூ. 120-ம், ஐந்தாவது ஆண்டில் ரூ. 60-ம் உதவி அளிக்கப்பட்டது. 1959 மார்ச்சுக்குப் பிறகு எல்லாச் சங்கங்களுக்கும் இவ்வுதவி அளிக்கப்படுகிறது.

மாவட்ட மத்திய பாங்குகள், கூடுதலாகக் கண்காணிப்பாளர்களை நியமித்துக் கொள்ள அரசாங்கம் உதவுகிறது. கண்காணிப்பாளரை நியமித்ததும், முதல் மூன்றாண்டுகளுக்கு இந்த உதவித் தொகை கிடைக்கும். ஒவ்வொரு கண்காணிப்பாளருக்கும் குறிப்பிட்ட

சங்கங்கள் ஒதுக்கப்படும். இதற்காகக் கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் ரூ. 83,920 உதவி அளிக்கப்பட்டுள்ளது.

முதல் திட்டக் காலத்தில் 6 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருந்தன. இரண்டாவது திட்டக் காலத்தில் மூன்று சங்கங்கள் ஏற்பட்டன. தற்போது 9 சங்கங்கள் உள்ளன.

இணைக்கப்பட்ட கிராமக் கடன் வசதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், அரசாங்கம் விற்பனைச் சங்கங்களுக்கும் கிடங்குகள் கட்டுவதற்காக நிதி உதவி அளிக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இந்த ஏற்பாட்டின்படி 36 விற்பனைச் சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மொத்தம் 10 கிடங்குகள் கட்டப்பட்டன. அவற்றிற்காக ரூ. 1,01,486 நிதி உதவியாக அளிக்கப்பட்டது.

இந்த மாவட்டத்தில் மதுரை வட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கம், தேனி விற்பனைச் சங்கம், திருமங்கலம் கூட்டுறவு விற்பனைச் சங்கம், பட்டிவீரன்பட்டி கூட்டுறவுக் காப்பி உலர்த்தும் சங்கம் ஆகிய நான்கு சங்கங்கள் மேற்சொன்ன திட்டப்படி கிடங்குகள் கட்டியுள்ளன.

### கடனும்-மானியமும்

பதினைந்தாயிரம் ரூபாய் செலவில் விற்பனைக் கிடங்குகள் கட்டுவதற்காக வேளாண்மைப் பாங்குகளும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இத்தொகையில் ரூ. 10,000 கடனாகவும், ரூ. 5,000 பொருள் உதவியாகவும் அளிக்கப்படும். கடந்த ஐந்தாண்டுகளில் 16 கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. வேளாண்மைப் பாங்குகளுக்கு ரூ. 3,29,544 கடனாகவும், ரூ. 1,33,800 பொருள் உதவியாகவும் அளிக்கப்பட்டன. விற்பனைச் சங்கங்களுக்கு ரூ. 1,72,450 கடனாகவும், ரூ. 45,775 பொருள் உதவியாகவும் அளிக்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் கடன் வழங்கு சங்கங்கள், வேளாண்மைப் பாங்குகள், விற்பனைச் சங்கங்கள் ஆகியவை மொத்தம் 45 கிடங்குகள் கட்டியுள்ளன. முதல் திட்டக் காலத்தில் இருந்த 9 கிடங்குகளையும் சேர்த்து மொத்தம் 54 கிடங்குகள் அவற்றிற்குச் சொந்தமாக உள்ளன.

நிலக்கடலை உடைக்கும் இயந்திரங்களையும், நெல் அரைக்கும் இயந்திரங்களையும், பருத்தி விதை எடுக்கும் இயந்திரங்களையும் நிறுவுவதற்காக 10 விற்பனைச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. பருத்தி விதை எடுக்கும் இயந்திரமாக இருந்தால் ரூ. 31,000 வரையும், நிலக்கடலை உடைக்கும் இயந்திரமாக இருந்

தால் ரூ. 24,000 வரையும், நெல் அரைக்கும் இயந்திரமாக இருந்தால் ரூ. 16,000 வரையும் பங்கு எடுப்பதன் மூலம் இந்த நிதி உதவிகள் செய்யப்படுகின்றன.

திருமங்கலம் கூட்டுறவு யூனியன் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 3,750, மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு பாங்கு அனுமதித்தது. கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டது.

வேளாண்மைப் பாங்குகளுக்கு, ரூ. 10,000 செலவில் கட்டிடம் கட்ட அரசாங்கம் அனுமதி அளித்தது. இருபது ஆண்டுகளில் திருப்பித் தரும் வகையில் ரூ. 7,500 கடன் தொகையாகவும், ரூ. 2,500 உதவித் தொகையாகவும் ஒவ்வொரு பாங்கிற்கும் அரசாங்கம் அளித்தது. 1959—60-ல் 7 வேளாண்மைப் பாங்குகள் ரூ. 52,500 கடன் தொகையும், ரூ. 17,500 உதவித் தொகையும் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டன. 1960—61-ல் ரூ. 22,500 கடன் தொகையும், ரூ. 24,980 உதவித் தொகையும் அளிக்கப்பட்டது.

பல நிலைகளில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்தி, அவைகளின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கச் செய்வதற்காக மாநில அரசாங்கம் அவற்றின் பங்கு முதலில் பங்கு எடுத்துக் கொண்டுள்ளது. இந்த மாவட்டத்தில் 1958—59-ல் திண்டுக்கல் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 10,000 வரையும், மதுரை மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 1959—60-ல் ரூ. 25,000 வரையும் பங்குகளில் அரசாங்கம் முதலிட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் ரூ. 5·82 லட்சம் அரசாங்கம் பங்கு முதல் போட்டிருக்கிறது.

ஒவ்வொரு வேளாண்மைப் பாங்கிலும் ரூ. 10,000 பங்கு முதல் போட அரசாங்கம் முன் வந்தது. பத்து வேளாண்மைப் பாங்குகளில் ரூ. 65,000 அரசாங்கம் பங்கு முதல் போட்டிருக்கிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவுப் பாங்கிலும் ரூ. 9·6 லட்சம் பங்கு முதல் போடப்பட்டிருக்கிறது.

### முழு நிதித் திட்டம்

வேளாண்மைக் கடன் உதவிப் பணிகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நடைபெறுமாறு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் முதன் முதலாக திருப்பரங்குன்றம் வட்டாரத்தில் 1959-ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. 1960 அக்டோபரிலிருந்து போடிநாயக்கனூர் வட்டாரத்தில் அமுலில் இருக்கிறது. 1959—60-ல் குறுகிய காலக் கடனுக

ரூ. 8·94 லட்சமும், நடுத்தரக் காலக் கடனுக ரூ. 5·66 லட்சமும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மதுரை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் வினியோகிக்கப்பட்ட ரசாயன உரங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | டன்கள் | மதிப்பு |
|---|---|---|
| 1956-57 | 8,465 | ரூ. 30,47,400 |
| 1957-58 | 7,262 | ரூ. 27,39,580 |
| 1958-59 | 7,064 | ரூ. 28,27,200 |
| 1959-60 | 6,295 | ரூ. 26,20,530 |

**வேளாண்மைப் பாங்குகள்**

பழனி, கொடைக்கானல் தவிர்த்த பிற வட்டங்கள் அனைத்திலும் வேளாண்மைப் பாங்குகள் திறக்கப்பட்டுள்ளன. 1957 ல் 9 வேளாண்மைப் பாங்குகள் இருந்தன. 4,364 உறுப்பினர் இருந்தனர். பங்கு முதல் ரூ. 1,27,401 போடப்பட்டது. சுமார் ரூ. 3,89,063 அளவிற்குக் கடன் வழங்கப்பட்டது. 1961-ல் 41,935 உறுப்பினர்கள் கொண்ட 43 வேளாண்மைப் பாங்குகள் இருந்தன. பங்கு முதல் ரூ. 14,22,106 போடப்பட்டது. சுமார் ரூ. 84,98,023 அளவிற்குக் கடன் வழங்கப்பட்டது.

இணைக்கப்பட்ட கிராமக் கடன் திட்டப்படி அமைக்கப்பட்ட மாநிலப் பண்டக சாலைக் கழகத்தின் கிளைகளுள் ஒன்று, மதுரை நகரத்தில் இயங்கி வருகிறது. எல்லா வகுப்பினரும் தம் உற்பத்திப் பொருள்களை இங்குள்ள கிடங்கில் சேமித்து வைக்கின்றனர். நல்ல விலைக்கு அவற்றை விற்க வசதி ஏற்படுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது ஆண்டிலிருந்து கடன் வழங்கு யூனியன்கள் நிறுவப்படுகின்றன. அதற்கு முன்பு வேளாண்மைப் பாங்குகள் அமைக்கப்பட்டுவந்தன. யூனியன்கள் கடன் வசதி செய்து தருகின்றன. இவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்புச் சங்கங்கள் பிற வேலைகளைக் கவனிக்கின்றன. மதுரை மாவட்டத்தில் 1959-60 ல் 7 இடங்களிலும், 1960—61 ல் கல்லுப்பட்டி, E கோட்டைப்பட்டி ஆகிய இரண்டு இடங்களிலும் கடன் வழங்கு யூனியன்கள் அமைக்கப்பட்டன. முதல் ஆண்டில் ஒவ்வொரு யூனியனுக்கும் மாதம் ரூ. 100 வீதமும், ஒவ்வொரு இணைப்புச் சங்கத்திற்கும் மாதம் ரூ. 25 வீதமும் அரசாங்கம் பொருள் உதவி அளிக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 7 நில அடமான பாங்குகள் இருந்தன. இரண்டாம் திட்டக்காலத்தில் மூன்று பாங்குகள் நிறுவப்பட்டதால், தற்போது பத்து நில அடமான பாங்குகள் உள்ளன.

கூட்டுறவு பால்வழங்கும் சங்கங்கள் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்க வழிசெய்யப்பட்டது. திட்டக்காலத் தொடக்கத்தில் இந்த மாவட்டத்தில் 162 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இரண்டாவது திட்டக் காலத்தில் மட்டும் 34 சங்கங்கள் அமைக்கப்பட்டன.

### பால் உற்பத்தி

1956-57 ல் நாள் ஒன்றுக்குச் சர்ராசரி 2,741 பட்டணம்படி பால் உற்பத்தியானது. 1960-61 ல் 6,305 பட்டணம்படி பால் உற்பத்தியானது. கறவை மாடுகள் வாங்குவதற்காக 1956-57 ல் ரூ. 87,600-ம், 1960-61 ல் ரூ. 77,200-ம் கடன் கொடுக்கப்பட்டது. 1959-60 ல் நத்தம் கோயில் பட்டியில் கூட்டுறவுக் கால்நடைப் பாதுகாப்புப் பண்ணை நிறுவப்பட்டது. பால் வற்றிப் போன கால் நடைகளைப் பாதுகாத்து உதவுவதற்கு வேண்டிய சாதனங்களைத் தருவதுதான் இதன் நோக்கமாகும். இந்தப் பண்ணை 2 சிந்திக் காளைகளையும், 1 முர்ரா எருமையும் வாங்கியது.

கொடைக்கானல் பால் வழங்கு சங்கம் ரூ. 53,500 செலவில் பாஸ்சர் முறை கருவி வாங்கியது. அதற்காக 1956-57 ல் ரூ. 21,000 கடனுகவும், ரூ. 10,500 பொருள் உதவியாகவும் வழங்கப்பட்டது. இந்தச் சங்கம் நாளொன்றுக்குச் சராசரி 59 பட்டணம்படி பால் உற்பத்தி செய்கிறது.

### கூட்டுறவு நெசவாளர் சங்கம்

கிராமத் தொழில் வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும். கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காகவும், நெசவாளர் நல்வாழ்விற்காகவும் கூட்டுறவு அமைப்புகள் நிறுவப்பட்டன. மதுரை மாவட்டத்திலுள்ள 22,190 தறிகளில் 13,547 தறிகள் கூட்டுறவு அமைப்பிற்குள் சேர்க்கப்பட்டன. திட்டக்காலத் தொடக்கத்தில் 97 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. தற்போது அவை 105 சங்கங்களாக அதிகரித்திருக்கிறன்றன. கைத்தறித் துணியின் தரத்தை உயர்த்தி, அதன் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனும், உதவித் தொகையும் வரி நிதியிலிருந்து வழங்கப்பட்டன.

இச்சங்கங்களுக்குத் தரப்பட்ட அரசாங்க உதவி பின்வருமாறு:

| | |
|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களுக்கு, விற்பனையில் தள்ளுபடிக்காகப் பொருள் உதவி | ரூ. 18,79,885 |
| நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்உதவி | ரூ. 3,21,525 |
| பங்கு முதல் கடன் | ரூ. 1,48,339 |
| வீடுகள் கட்டுவதற்குக் கடன் | ரூ. 8,75,300 |

மேலும் பொதுத்தரமுள்ள பாவு நூல் பிரிக்கும் குழல்கள், ஊடு நூல் போடும் கருவிகள், காலால் இயக்கப்படும் தறிகள், ஜாக்குவார்டு தறிகள் முதலியன வாங்குவதற்காகவும் கடனும், உதவித் தொகையும் அளிக்கப்பட்டன.

சமுதாய, பொருளாதாரத் துறைகளில் கூட்டுறவு எந்த அளவிற்குப்பயன்படுகிறது என்பது பற்றி மக்களுக்கு அறிவுறுத்தி, பல்வேறு கூட்டுறவு நிலையங்களின் நிர்வாகத்தைத் திறம்பட ஏற்று நடத்துவதற்காகப் போதுமான பயிற்சி அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். அதற்காக 1956 ல் திருநகரில் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது. 300 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1959-60 ல் இந்த நிலையக் கட்டிடத்திற்காக ரூ. 90,000 அரசாங்கம் அனுமதித்தது. இந்த நிலையத்தில் பயிற்சியாளருக்கு மாதம் ரூ. 40 உதவிச் சம்பளம் அளிக்கப்படுகிறது.

**கூட்டுறவுப் பண்ணை**

நிலச் சீர்திருத்தமும், வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில் கூட்டுறவுப் பண்ணை மிகவும் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. மதுரை மாவட்டத்தில் வேலங்தூரில் 1956 செப்டம்பர் மாதத்தில் கூட்டுறவுப் பண்ணைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தில் 229 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினரின் பங்கு உதவி முதல் ரூ. 229 ஆகும். இப் பண்ணைச் சாகுபடிக்காகவே ரூ. 15,000 வரை மதுரை மத்திய பாங்கு அளிக்கும்படி அரசாங்கம் கொடுத்துள்ளது. பண்ணையின் செய்முறைகளுக்காக அரசாங்கம் ரூ. 3,200 பொருள் உதவியாகவும், வட்டியில்லாக் கடனை ரூ. 32,500-ம் வழங்க அனுமதித்திருக்கிறது.

இரண்டாவது திட்டக் காலத்தில் 3 கூட்டுப் பண்ணைகளும், 10 கிராமதானச் சங்கங்களும், 5 நிலக் குடியேற்றச் சங்கங்களும் அமைக்கப்பட்டன.



திருமங்கலத்தில் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட குடியிருப்பு

முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் இந்த மாவட்டத்தில் 37 கூட்டுறவு முறையில் வீடுகட்டும் சங்கங்கள் இருந்தன. முதல் திட்டக்காலத்தில் 4 சங்கங்களும், இரண்டாவது திட்டக் காலத்தில் 37 சங்கங்களும் ஏற்படுத்தப் பட்டன. தற்போது மொத்தம் 78 சங்கங்கள் உள்ளன.

மாநில வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் 725 வீடுகள் கட்டப்பட்டிருந்தன. முதல் திட்டக் காலத்தில் 325 வீடுகளும், இரண்டாவது திட்டக்காலத்தில் 275 வீடுகளும் சட்டப்பட்டன. இவற்றிற்காக அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளில் ரூ. 39,17,236 நிதி உதவியாக அளித்துள்ளது. குறைந்த வருமானக்காரர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் இரண்டாவது திட்டக்காலத்தில் 188 வீடுகள் கட்டப்பட்டன.

**கிராமதானச் சங்கங்கள்**

இந்த மாவட்டத்தில் 10 கிராமதானச் சர்வோதயக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஐந்து ஆண்டுகளுக்காக அரசாங்கம் ரூ. 6,28,000 அனுமதித்தது. இவற்றில் 817 உறுப்பினர்கள் உள்ளனர். சுமார் 1,295 ஏக்கர் நிலங்கள் இந்தச் சங்கங்களுக்கு நன்கொடைகளாக அளிக்கப்பட்டன.

மாநிலத்தில் வீட்டு வசதி அளிப்பதற்கான திட்டம் நடை முறையில் இருக்கிறது. அத்துடன் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிக்காகப் பொருள் உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம், ஹரிஜனக் குடியிருப்புத் திட்டம் போன்ற பல திட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது.

போலீசுக்காரர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் 1955-56ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் ஏற்பட்ட 26 வட்டாரங்களில், 8 வட்டாரங்களில் உள்ள பணியாளர்க்கு வீடுகள் கட்டித்தரப்பட்டன. கிராமச் சேவக்குகளுக்காக 64 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 16 வீடுகள் கட்டிமுடியும் தறுவாயில் இருக்கின்றன.

## நெசவாளர்

முதல் திட்டக்காலத்தில் நெசவாளர் சங்கங்களுக்குப் பங்கு முதல் கடனாக ரூ. 70,450 அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 1,40,303 அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் வீடுகட்டும் வேலைகளை 4 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டன. 342 வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டது. இதுவரை 150 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடன் தொகையாக ரூ. 11,48,500 அனுமதிக்கப்பட்டதில், ரூ. 8,73,300 வழங்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் திட்டக் காலத்தில் ரூ. 3,58,500 செலவில் 670 வீடுகள் கள்ளர் வகுப்பினருக்காகக் கட்டப்பட்டன. ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 750 செலவாயிற்று. அரசாங்க உதவியாக ரூ. 550 தரப்பட்டது. மீதியை வீடு கட்டுபவர் ஏற்றுக்கொள்வர்.

## ஹரிஜனங்கள் வீட்டு வசதி

சமூகத்தில் மிகவும் பின்தங்கி விட்ட ஹரிஜனங்களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து தர அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு வீட்டிற்காகவும் ரூ. 550 பொருள் உதவியும், ரூ. 200 கடனும் அரசாங்கம் அளித்தது. பொருளாதாரத்தில் மட்டுமல்லாமல், சமூகத்திலும் அவர்களது வாழ்வு உயர இத்தகைய ஏற்பாடுகள் பெரிதும் உதவின. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 111 கிராமங்களில் 1,780 வீடுகள் கட்டித் தரப்பட்டன. இவற்றிற்காக அளிக்கப்பட்ட பொருள் உதவி ரூ. 9,38,200. இரண்டாவது திட்டக் காலத்தில் மலை சாதியினருக்காக 700 வீடுகள் கட்டித்தரப்பட்டன.



ஹரிஜன் குடியிருப்பு: ஆண்டிபட்டி

ஹரிஜனங்களுக்காக 80 வீடுகளும், கவுண்டர்களுக்காக 10 வீடுகளும் உள்ள குடியிருப்பு ஒன்று நிறுவ 1955-ல் அரசாங்கம் அனுமதித்தது. ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 500 பொருள் உதவி அளிக்கப்பட்டது. சில மாறுதல்களுடன் 1958—59-ல் இக்குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டது. இவற்றிற்காக மொத்தம் ரூ. 44,700 அளிக்கப்பட்டது. பூங்கா, சமுதாய நல நிலையம், விளக்கு முதலியன அமைக்க ரூ. 20,819 ஒதுக்கப் பட்டது.

இங்ஙனம் வீடு வசதித் திட்டங்களின் கீழ் பல்வேறு வகுப்பின ரும் பயன் அடைந்தனர். சமுதாய நல்வாழ்விற்கு இத்தகைய ஏற்பாடுகள் அடிப்படையாக அமைந்தன.

---

# சமூக முன்னேற்றம்



நாட்டின் பொருளாதார வளர்ச்சி மக்கள் அனைவருக்கும் பயன் தர வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். ஏற்றத்தாழ்வுகள், வளரும் சமுதாயத்திற்கு நல்ல அறிகுறிகள் ஆகா. எனவேதான் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதோடு, சமூக ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவும் பெரும்பணி ஆற்றி வருகிறோம்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற திருவள்ளுவரது மொழி, பிறப்பால் வேற்றுமை காணக் கூடாது என்பதை வற்புறுத்துகிறது. தாழ்த்தப்பட்டோர் என்றும், தீண்டத்தகாதோர் என்றும் சமூகத்தில் பிரித்து நோக்கும் கொடுமை அறவே அகற்றப்படவேண்டும். அப்போதுதான் சமூக முன்னேற்றப் பணிகள் வெற்றியைத் தேடித்தரும். இது கருதியே, அண்ணல் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பைத் தலையாய பணியாகக் கொண்டார்.

சமூகத்தில் பின்தங்கிவிட்ட மக்கள் பொருளாதார வளம்பெறும் நிலையை உண்டாக்கி விட்டால், வேறுபாடுகள் மறையும் என்பது கண்கூடு. இந்த அடிப்படையில்தான் பின்தங்கிவிட்ட மக்களுக்கு வேண்டிய சலுகைகளை அரசாங்கம் செய்து வருகிறது. நீண்ட காலமாகக் கல்வி கற்க வாய்ப்பில்லாத மக்களுக்கு நிறைந்த வாய்ப்பு வசதிகளைத் தேடித்தருகிறது. தொழில் துறையிலும், பிற துறைகளிலும் அவர்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறது.

தமிழ்நாட்டில் கல்வித் துறையில் 30,000-க்கு மேற்பட்ட ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் சலுகைகளைப் பெற்று வருகிறார்கள். 1950—51-ல் நமது மாநிலம் பிரிக்கப்படாமல் இருந்தபோது ஹரிஜன நலனுக்காக ரூ. 69 லட்சமே செலவாயிற்று. தற்போது தமிழகத்தில் ரூ. 3·55 கோடி இவ்வாண்டில் செலவிடப்பட்டுள்ளது. ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாநில ஹரிஜன நலத்துறை நெறியாளர் ஹரிஜன நல வேலைகளை மேற்கொள்கிறார். மாவட்டங்களில், கலெக்டர்களின் நிர்வாகப் பொறுப்பின் கீழ் மாவட்ட நல அதிகாரிகள் ஹரிஜன நல வேலைகளைச் செய்கின்றனர். ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தீண்டாமையை ஒழிக்கவும் சிறப்பான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மதுரை மாவட்டத்தில் முதல் இரண்டு திட்டக் காலங்களில் ஆற்றப்பட்ட பணிகளை இனிக் காணலாம்.

**கல்வி**

ஹரிஜன மக்களுக்கு வேண்டிய கல்வி வசதிகளை ஏற்படுத்துவதை அரசாங்கம் முதற் கடமையாகக் கொண்டது. முதல் திட்டக் காலத்தில் 16 ஹரிஜன நலப் பள்ளிகள் இருந்தன. 40 ஆசிரியர்கள் பணியாற்றி வந்தனர். மொத்தம் ரூ. 1,12,511 செலவிடப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் மேலும் 4 பள்ளிகள் ஹரிஜனங்களுக்காக ஏற்பட்டன. இப்பள்ளிகளில் ஹரிஜனங்களும், பின்தங்கிய வகுப்பினரும் பயின்றனர்.

பலவேறு சாதிகளைச் சேர்ந்த மாணவர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதற்காகவே 1955—56-ல் நண்பகல் உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஹரிஜன நலப் பள்ளிகளில் பயின்ற எல்லா சாதி மாணவர்களுக்கும் நண்பகல் உணவு வழங்கப்பட்டது.

இந்தச் சேவைகள் ஒன்றே குலம் என்ற எண்ணத்தைப் பிஞ்சு நெஞ்சங்களில் பதிய வைத்தன, இதற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ஏறக்குறைய ரூ. 1,60,407 செலவிடப்பட்டது. மற்றப் பள்ளிகளில் பயிலும் ஹரிஜன மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்க இரண்டாவது திட்டக் காலத்தில் நான்கு ஆண்டுகளில் சுமார் ரூ. 1,26,701 செலவிடப்பட்டது.

**உபகாரச் சம்பளம்**

ஹரிஜன மாணவர்களுக்கும், பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும் பெருமளவில் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளில் பயின்ற ஹரிஜன மாணவர்களுக்குப் புத்தகங்கள் முதலிய வாங்குவதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 11,318 உபகாரச் சம்பளங்கள் அளிக்கப்பட்டன. அவற்றிற்கான தொகை சுமார் ரூ. 2,15,530 ஆகும். 525 உணவு மானியங்கள் புதிதாக வழங்கப்பட்டன. அவற்றிற்கான தொகை ரூ. 83,946 ஆகும்.

பின்தங்கிய வகுப்பினருக்காக உயர்நிலைப் பள்ளிகளில் 1,594 உபகாரச் சம்பளங்கள் புதிதாக அளிக்கப்பட்டன. அவற்றிற்கான தொகை ரூ. 72,885 ஆகும். கல்லூரி உபகாரச் சம்பளங்கள் மூன்று ஆண்டுகளில் 518வழங்கப்பட்டன. அவற்றிற்கான தொகை ரூ. 84,118 ஆகும். 1,238 உபகாரச் சம்பளங்கள் வழங்கியதில் ரூ. 5,14,103 செலவாயிற்று.

**உணவு விடுதிகள்**

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஹரிஜன மாணவர் உணவு விடுதிகளுக்காக ரூ. 4,91,610 செலவாயிற்று. ஆண்டு தோறும் ரூ. 3,000 செலவில் சிலேட்டு, புத்தகங்கள் ஹரிஜன மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

ஹரிஜனங்கள், மலைச்சாதியினர், முன்னாள் குற்ற பரம்பரையினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருக்காகத் தனிப்பட்டவர்கள் நடத்தும் உணவு விடுதிகள் பல உள்ளன. அத்தகையவிடுதிகளில் தாழ்த்தப்பட்டோரல்லாத வகுப்பு மாணவர்கள் சேர்க்கப்பட்டால், மான்யம் கூடுதலாக அளிக்கப்படுகிறது. இந்த மாவட்டத்தில் உதவி பெறும் விடுதிகள் 31 உள்ளன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஹரிஜன மாணவர்களுக்கும், பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும், பிற மாணவர்களுக்கும் ஆக மொத்தம் 8,732 உணவு மானியங்கள் அளிக்கப்பட்டன. அவற்றிற்கான தொகை சுமார் ரூ.11·5 லட்சம் ஆகும்.

ஹரிஜன நலத் துறை, ஹரிஜனங்களுக்காக ஒரு ஆஸ்ரமப் பள்ளியினையும், நரிக் குறவர்களுக்காக ஒரு ஆஸ்ரமப் பள்ளியினையும் நடத்தி வருகிறது. அத்துடன் அரசாங்கமும் பல பள்ளிகளை நடத்தி வருகிறது. அரசாங்க உணவு விடுதிகளில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 3,279 பேர் தங்கிப் படித்தனர். அவர்களுக்காக ரூ. 4,45,423 செலவாயிற்று.

**குடிதண்ணீர் வசதி**

கல்வி வசதி அளித்ததைப் போலவே, ஹரிஜனங்களுக்காகப் பிற வசதிகளும் செய்து தரப்பட்டன. குறிப்பாக, குடி தண்ணீர்க் கிணறுகளில் ஹரிஜனங்கள் நீர் எடுக்க முடியாத நிலை சமூகத்தில் நீண்ட நாளாக இருந்தது. அந்த நிலையை மாற்றி, அவர்களுக்குக் குடி தண்ணீர் வசதி கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களுக்காகப் பல குடி நீர்க் கிணறுகள் வெட்டப்பட்டன. பல கிணறுகள் செப்பனிடப்பட்டன.

முதல் திட்டக் காலத்தில் இம்மாதிரியாக 34 வேலைகள் ரூ. 26,912 செலவில் செய்து முடிக்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் 134 கிணறுகள் வெட்டப்பட்டன. 156 கிணறுகள் செப்பனிடப்பட்டன. சுகாதார வேலைத் திட்டத்தின் கீழ் 70 குளிப்பறைகள் கட்டித் தரப்பட்டன. இவற்றிற்காக ரூ. 1,92,778 செலவிடப்பட்டது.

கிராமங்களில் உள்ள ஹரிஜனக் குடியிருப்புகளில் மக்கள் நெருக்கடி மிகுதியாக உள்ளது. இட நெருக்கடியைக் குறைத்து, காற்றோட்டமுள்ள இடங்களில் வசதியாக அவர்கள் குடியிருக்க வழி செய்யப்பட்டது. சுகாதார வசதிகளுடன் கூடிய வீடுகளைக் கட்டித் தருவதற்காகப் போதுமான மனையிடங்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டன. இந்த மாவட்டத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 361 மனையிடங்கள் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் 124 கிராமங்களில் மனையிடங்கள் ஒதுக்கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை சுமார் 4,593 ஆகும். அவற்றிற்காக ரூ. 4,32,269 செலவிடப்பட்டது.

வேளாண்மைத் துறையில் பெரும்பாலான ஹரிஜனங்களும், பின்தங்கிய வகுப்பினரும் ஈடுபட்டுள்ளனர். கூலிகளாகவும், குத்தகைதாரராகவும் உள்ளனர். நிலம் வைத்திருக்கும் மிகச் சிலரும் வேளாண்மைச் செலவுகளுக்குப் பண வசதியில்லாமல் தொல்லைப்படுகின்றனர். இந்த நெருக்கடியைப் போக்கவே அரசாங்கம் பண உதவி செய்ய முன் வந்தது.

உழவு மாடுகள், விதைகள், வேளாண்மைக் கருவிகள் ஆகியன வாங்குவதற்காக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 913 கிராமங்களில் பண உதவி அளிக்கப்பட்டது. உதவி பெற்றோர் 2,089 பேர் ஆவர். அளிக்கப்பட்ட உதவித் தொகை சுமார் ரூ. 5,95,365 ஆகும். 1959-60 வரை மலை ஜாதியினருக்கு வேளாண்மை உதவித் தொகை பாதி உதவியாகவும், பாதி கடனாகவும் அளிக்கப்பட்டது. 1960—61-ல் முழுத் தொகையும் உதவியாகவே அளிக்கப்பட்டது.

**பாசன வசதி**

ஹரிஜனங்களுக்காகப் பாசனக் கிணறுகள் தோண்ட ஒவ்வொரு கிணற்றிற்கும் ரூ. 1,500 பண உதவி அளிக்கப்பட்டது. குறைந்த அளவு 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஹரிஜனங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் 132 கிணறுகளுக்காக ரூ. 1,98,000 பண உதவி அளிக்கப்பட்டது.

தொழில்களில் பயிற்சி பெற்றிருக்கும் ஹரிஜனங்களுக்குத் தொழில் துறையில் ஊக்கம் அளிப்பதற்காகப் பல உதவிகள் செய்யப்பட்டன. தொழிலுக்குரிய கருவிகள் வழங்கப்பட்டன. இதனால் அவர்களிடையே வேலையின்மையைப் போக்க முடிந்தது. உதவி பெறத் தகுதியுள்ளவர்களுக்கு ராட்டைகளும் வழங்கப் பட்டன. தையல் இயந்திரம், பொம்மை செய்யும் கருவி, கொல்லு வேலை செய்யும் கருவி, தச்சு வேலைக் கருவி முதலியன அளிப்பதன் மூலம், தொழில் துறையில் அவர்களுக்கு ஊக்கம் காட்டப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 170 கிராமங்களில் இந்த உதவி அளிக்கப்பட்டது. 318 கருவிகள் அளிக்கப்பட்டன. அவற்றிற்காக மொத்தம் ரூ. 58,214 செலவிடப்பட்டது. அத்துடன் 1959—60-ல் 18 வட்டாரங்களில் தகுதி வாய்ந்த ஹரிஜனங்களுக்கும், மாவட்டத்தில் வேலை செய்யும் 8 துணை சேவக்குகளுக்கும் ராட்டைகள் வழங்க ரூ. 10,000 செலவிடப்பட்டது.

சமூகத்தில் பேத உணர்ச்சியின்றி ஒருமை மனப்பான்மை ஏற்பட வேண்டுமானால், மக்கள் கலந்து பழகும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். பலவேறு வகுப்பைச் சார்ந்த மகளிரும், குழந்தைகளும் சேர்ந்து பழகுவதால் உறவு மனப்பான்மை வளரும் என்பதில் ஐயமில்லை. இந்த எண்ணத்திலேயே சமுதாய நல நிலையங்கள் கிராமங்களில் நிறுவப்பட்டன.

குழந்தைகளுக்குப் பகல் உணவு வழங்குதல், ஆடைகள் அளித்தல் ஆகிய வேலைகள் இந்த நிலையங்களில் மேற்கொள்ளப் படுகின்றன. சமூகப் பணியாளர்கள் சுகாதார வாழ்க்கை யைப் பற்றி இந்த நிலையங்களில் விளக்கம் தருகின்றனர். 1959—60-ல் கொட்டாம்பட்டியில் ஒன்றும், வத்தலக் குண்டுக்கு அருகில் உள்ள கோணியம்பட்டியில் ஒன்றுமாக இரு சமுதாய நல நிலையங்கள் திறக்கப்பட்டன. ஒவ்வொரு நிலை யத்திற்கும் ஆண்டுதோறும் ரூ. 6,000 செலவாகிறது. கொட்டாம் பட்டி நிலையத்திற்குப் புதிதாக ரூ. 5,000 செலவில் கட்டிடம் கட்டப் பட்டது.

### பொதுச் சுகாதாரம்

கீழ் பழனிப் பகுதியில் புலையர், பளியர் எனப்படும் மலை ஜாதியினர் வாழ்கின்றனர். சுகாதாரத்தைப் பேணாத பகுதி களாக இருப்பதால் அங்கு மலேரியா மற்றும் தோல் நோய்கள் ஏற்பட ஏதுவாகிறது. இந்த நிலையை மாற்ற சுகாதார அதிகாரி நியமிக்கப்பட்டார். தாண்டிக்குடி தலைமை இடமாகும். மருந்து வாங்குவதற்காக மாதந்தோறும் ரூ. 200 மானியம் அளிக்கப்பட்டது. கிராமங்களைப் பார்வையிட்டு, மலேரியாத் தடுப்பு வேலைகளைச் சுகாதார அதிகாரி செய்து வருகிறார்.

மலை ஜாதியினருக்காக ஒவ்வொரு ஆண்டிலும் 4 குடிதண்ணீர்க் கிணறுகள் வெட்டப்பட்டன. புதிய கிணறுகள் வெட்டவும், பழைய கிணறுகளைச் சீர் செய்யவும் வட்டியில்லாமல் ரூ. 2,000 வரையும், ரூ. 1,000 வரையும் கடன் உதவி செய்யப்படு கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 113 பேர் இம்மாதிரி உதவிபெற் றனர். அதற்கான செலவு ரூ. 8·66 லட்சம் ஆகும். மாடுகள் முதலி யன வாங்குவதற்காக மத்திய அரசாங்கத் திட்டத்தின் கீழ் ஒவ் வொருவருக்கும் ரூ. 500 பண உதவி அளிக்கப்பட்டது. இரண்டா வது திட்டக் காலத்தில் மதுரை, நிலக்கோட்டை, திண்டுக்கல், பெரிய குளம், பழனி, திருமங்கலம் ஆகிய வட்டங்களில் 1,103 பேர் இத் திட்டத்தால் பயனடைந்தனர். அதற்காக ரூ. 5,51,500 செலவிடப் பட்டது.

'பிரமலைக் கள்ளர்' எனப்படுவோர் திருமங்கலம் வட்டத்தில் பெருவாரியாகவும், திண்டுக்கல், பெரியகுளம் வட்டங்களில் சில கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் சுமார் 3 லட்சம் பேர் உள்ளனர். சுதந்திரத்திற்குப் பின்னர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டோரின் நல்வாழ்வுக்காகப் பல்வேறு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. அவர்களுக்கான வேலைகளைக் கவனிக்கத்

தனியே ஒரு டெபுடிக் கலெக்டர் நியமிக்கப்பட்டார். ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினருக்குச் செய்யப்பட்டதைப் போலவே, முன்னுள் குற்றப் பரம்பரையினருக்கும் நன்மைகள் செய்யப் பட்டன.

கள்ளர் வகுப்பு உழவர்கள், கூட்டுறவு இயக்கத்தின் நன்மையைப் பெறவும், கள்ளர் வகுப்பினர் இலவசக் கல்வி பெறவும் ஆவன செய்யப்பட்டன. அத்துடன் குடியிருப்பு வசதிகள், குடிநீர் வசதிகள் ஆகியனவும் செய்து தரப்பட்டன. அவர்களுக்காக முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்தில் ரூ. 6,76,000 செலவிடப்பட்டது. திட்ட முடிவில் ரூ. 7,51,000 செலவாயிற்று. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் ரூ. 24,00,000 செலவாகியிருக்கிறது. இதிலிருந்து அவர்களுக்காகச் செய்யப்படும் செலவு ஆண்டு தோறும் உயர்ந்து வந்திருப்பதைக் காணலாம்.

**கல்வி**

பிரமலைக் கள்ளர் மிகுதியாக இருக்கும் பகுதிகளில் சுமார் 232 பள்ளிகள் உள்ளன. பிரமலைக் கள்ளர் அல்லாத வகுப்பு மாணவர்களும் இந்தப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். மொத்தம் இப் பள்ளிகளில் பயிலும் மாணவர் தொகை 20,000 ஆகும். இங்கு பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டம் 1960 செப்டம்பரில் அமுலுக்கு வந்தது. குறுகிய காலத்தில் நிறைய மாணவர்கள் பள்ளிகளில் சேர வாய்ப்பு ஏற்பட்டது. 1951—52-ல் பிரமலைக் கள்ளர் வகுப்புச் சிறுவர் 11,000 பேர் பயின்று வந்தனர். 1959—60-ல் அந்தத் தொகை 13,000 ஆக அதிகரித்திருக்கிறது. 1957-ம் ஆண்டில் செக்கானூரணியில் ஓர் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

ஆங்கிலப் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொருபள்ளியிலும் ஒரு. செகண்டரி கிரேடு ஆசிரியர் வீதம் 200 பேர் நியமிக்கப்பட்டனர்.

உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் பிரமலைக் கள்ளர் மாணவர்களுக்காக உசிலம்பட்டி, உத்தமபாளையம் ஆகிய இடங்களில் இரு உணவு விடுதிகள் உள்ளன. முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் இருந்த 2 விடுதிகளில் 350 மாணவர் தங்கியிருந்தனர். திட்ட முடிவில் மூன்று விடுதிகளில் 460 மாணவர் தங்கியிருந்தனர். தற்போது 7 விடுதிகள் உள்ளன. ஆயிரம் பேர் தங்கியுள்ளனர்.

**சாரணர் இயக்கம்**

கள்ளர் பள்ளிகளில் சாரணர் இயக்க நடவடிக்கைகள் குறிப்பிடத் தக்கவையாகும். இந்த இயக்கத்தில் பல்வேறு அமைப்புகளி

லும் சேர்த்து 340 பிரிவுகள் உள்ளன. அவற்றில் 4,770 பேர் உறுப்பினராக உள்ளனர். சாரணர் இயக்கத்தில் சிறுவர்கள் சிறந்த ஆர்வம் காட்டுகின்றனர். பத்திரிகைகள் வாங்குதல், நிகர் ஆடை வழங்குதல், ஆகியவற்றிற்காக ஆண்டுதோறும் ரூ. 3,000 செல விடப்படுகிறது.

கள்ளர் வகுப்பினரின் நலனுக்காகக் கூட்டுறவு இயக்கம் சிறந்த முறையில் இயங்குகிறது. முதல் திட்டக் காலத் தொடக்கத்தில் 284 கள்ளர் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள் இருந்தன. அத் துடன் கள்ளர் விற்பனைச் சங்கம், கள்ளர் தொழிலாளர் சங்கம், இரண்டு கள்ளர் சீர்திருத்தப் பணியாளர் கடன் வழங்கு சங்கங்கள், ஐந்து பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை இருந்தன. பிரமலைக் கள்ளர் வகுப்பு உழவர்களைப் பெரும் அளவில் கூட்டுறவு அமைப்பில் சேர்ப்பதற்காகத் திட்டக் காலத்தில் 47 கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டன. அதன் விளைவாக 7,100 பேர் புதிதாக உறுப்பினர் ஆயினர். சங்கங்களிலுள்ள மொத்த உறுப்பினர் 20,000 ஆகும்.

இருபத்தைந்து பம்பு செட்டுகள் வாங்குவதற்காக ரூ. 63,800 கடன் தொகையாக வழங்கப்பட்டது. பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வட்டியில்லாமல் ரூ. 1,17,000 கடனுகை வழங்கப் பட்டது.

### கூட்டுறவு விற்பனைச் சங்கம்

கடந்த இருபது ஆண்டுகளாக இந்தச் சங்கம் இயங்கி வருகிறது. இதன் உறுப்பினர்கள் தொகை 3,580 ஆகும். அவர் கள் ரூ. 51,080 பங்கு முதல் போட்டிருக்கிறார்கள். இந்தச் சங்கத் தின் தலைமை அலுவலகம் உசிலம்பட்டியில் இருக்கிறது. கம்பம், செக்கானூரணி, சின்னமனூர், தேனி ஆகிய இடங்களில் கிளைகள் உள்ளன. தேனி விற்பனைச் சங்கம் அரசாங்கத்திடமிருந்து ரூ. 17 500 கடன்பெற்று, நிலக்கடலை உடைக்கும் கருவியை நிறுவி யிருக்கிறது. மாதந்தோறும் சுமார் 1 லட்சம் மூட்டை நிலக்கடலை உடைக்கிறது.

### வேளாண்மை உதவி

உழவு மாடுகள், வேளாண்மைக் கருவிகள், விதைகள் வாங்கு வதற்காகப் பிரமலைக் கள்ளருக்கு கடனுதவி அளிக்கப்பட்டது. மத்திய அரசாங்கத் திட்டத்தின் கீழ் இரண்டாம் திட்டக் காலத்தில் 1,104 பேருக்கு மாடுகள் வாங்குவதற்காக ரூ. 5,55,500 பண உதவி அளிக்கப்பட்டது. 2,366 பேருக்கு

ரூ. 6,10,760 உதவி அளிக்கப்பட்டது. புதிதாகப் பாசனக் கிணறுகள்வெட்டவும், பழைய கிணறுகளைச் சீர்படுத்தவும் கடனுதவியும் பொருள் உதவியும் அளிக்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் 126 வேலைகளுக்கு ரூ. 2,06,000 வழங்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் கள்ளர் பள்ளிகளுக்காக 75 புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. பெரும்பாலும் எல்லாப் பழைய கட்டிடங்களும் செப்பனிடப்பட்டன. ரூ. 87,000 செலவில் கட்டப்பட்ட செக்கானூரணி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம், ரூ. 1,26,000 செலவில் கட்டப்பட்ட உசிலம்பட்டி அரசாங்க மகளிர் விடுதிக் கட்டிடம், உத்தமபாளையம் அரசாங்க உணவு விடுதிகளுக்காக ரூ. 16,000, ரூ. 20,500 செலவுகளில் கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். கட்டிட வேலைகள், பழுது பார்க்கும் வேலைகள் ஆகியவற்றிற்காக மொத்தம் ரூ. 7,20,000 செலவாயிற்று.

இத்தகைய நடவடிக்கைகள் கள்ளர் சமூகத்தினரிடையே நல்ல விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. மகளிர்க்காக ஏற்பட்ட விடுதியில் 260 பெண்கள் இருந்த நிலை மாறி 400 பேர் இருக்கும் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. படிக்க முன்வரும் பெண்களின் தொகை மிகுதியாகிறது. பின் தங்கிவிட்ட சமூகத்தினரின் வளமான எதிர்காலத்திற்கு இத்தகைய விழிப்புணர்ச்சி அறிகுறியாக விளங்குகிறது. ஹரிஜனங்கள், மலைசாதியினர், முன்னாள் குற்ற பரம்பரையினர், பின் தங்கிய வகுப்பினர் என்ற பாகுபாடுகளின் கீழ் உள்ள பின்தங்கிய சமூகத்தினர் தமக்குக் கிடைக்கும் சலுகைகளால் முன்னேற்றப்பாதையில் பயணம் செய்கின்றனர்.

**மகளிர் நலம்**

"தாயைப் போல பிள்ளை" என்ற மொழியை அறியாதார் எவரும் இரார். வளரும் குழந்தைகளுக்கு இளமையிலேயே பண்பையும் அறிவையும் ஊட்டும் வாய்ப்பைப் பெற்றிருப்பது தாய்க் குலமே யாகும். அதனால்தான் தாயின் மடியை குழந்தைகளின் பல்கலைக் கழகமாகப் பெரியவர்கள் குறிப்பிடுவர்.

இத்தகைய மகளிர் குலம் சமூகத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தால், சமுதாய வளர்ச்சிக்குத் தடை ஏற்படும். குறிப்பாக பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த பெண்களின் நிலையை எவரும் மறக்க முடியாது. ஆதிவாசிகள் என்று குறிப்பிடப்படுவோரின் வாழ்க்கையைப் பார்ப்போருக்கு இந்த உண்மை புலப்படும்.

அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர இரண்டாம் திட்டக்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



ஆயக்குடியிலுள்ள மாதர்சங்கம்

கொடைக்கானல் வட்டத்தில் உள்ள ஆதிவாசிகள் பழனிமலை ஆதிவாசிகள் எனக் குறிக்கப்படுகின்றனர். அவர்கள் இந்தியாவிலேயே மிகவும் பின்தங்கிய மலைச் சாதியினர் ஆவர். இந்நிலையில் மகளிர் நலத்துறை அவர்களது வாழ்க்கைத்தரம் உயர ஆவன செய்தது. தூய வாழ்க்கை முறைகளை விளக்கியது. இரண்டாம் திட்டத்தின் கீழ் தாண்டிக்குடியிலும், மங்களம்கொம்பிலும் ஆதிவாசி மகளிருக்காக இரு பணி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றிற்கு இந்திய அரசாங்கம் பாதி உதவி அளித்தது. மற்ற பாதிச்செலவை ஹரிஜன நலத்துறை ஏற்றது. இவ்விரு நிலையங்களிலும் பதினைந்து ஆதிவாசிப் பெண்கள் பயிற்சி பெறுகின்றனர். மங்களம்கொம்பில் கம்பளங்களும், விரிப்புகளும், வரவேற்பு அறைக்குரிய வண்ணமும் தயாரிக்கப்படுகின்றன.

தாண்டிக்குடியில் பிரம்பினால் குழந்தைகளுக்குரிய சிறிய நாற்காலி, பெரிய நாற்காலி, உணவுக்கூடை, சைக்கிள் கூடை, சோபா செட்டுகள், கைப்பைகள், சிறு பெட்டிகள் ஆகியன செய்யப்படுகின்றன. இவ்விரு நிலையங்களில், பிரம்புத் தொழிலிலும் கம்பளி நெசவிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பல்வேறு மக்களின் பழக்க

வழக்கங்களை அறிந்துகொள்ளச் செய்வதற்காக ஆதிவாசி மகளிர் நாட்டின் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். மதுரை, காந்திக் கிராமம், சென்னை, கோவை ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தனர். மூன்று ஆண்டுகளில் தாண்டிக்குடி வேலை நிலையத்தில் ரூ. 19,119-ம், மங்களம்கொம்பு வேலை நிலையத்தில் ரூ. 18,793-ம் செலவாயிற்று.

## நகர அமைப்பு

நாட்டுப்புற மக்கள் பெருவாரியாக நகர்ப்புறங்களில் சென்று குடியேறியதன் விளைவாகப் பெரும்பாலும் எல்லா நகரங்களிலுமே மக்கள் தொகை பெருகிவிட்டது. அதற்கேற்ப நகர்ப்பகுதிகள் விஸ்தரிக்கப்படுகின்றன.

மதுரை நகரில் முதல் திட்டக்காலத்தில் ரூ. 4,60,000 செலவு மதிப்புள்ள நகரமைப்பு வேலைகள் எடுத்துக்கொள்ளப் பட்டன. அவையாவன :

| | | செலவு |
|---|---|---|
| பனிரெண்டு சாலைகள் அமைத்தல் | ரூ. | 2,30,000 |
| பூங்கா அமைத்தல் | ரூ. | 20,000 |
| கிரிதமால் ஆற்றைத் திருப்பிவிட | ரூ. | 1,00,000 |
| ஹரிஜனங்களுக்காக 20 வீடுகள் கட்டுதல் | ரூ. | 1,00,000 |
| 2,500 மரங்கள் நடுதல் | ரூ. | 10,000 |

இரண்டாவது திட்டக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங் களாவன:

| | | செலவு |
|---|---|---|
| (1) பள்ளிக் கட்டிடம், பூங்கா, சாலைகள் ஆகியவற்றிற்காக நிலம் வாங்குதல் | ரூ | 2,53,000 |
| (2) பனிரெண்டு சாலைகள் அமைத்தல் | ரூ. | 64,000 |
| (3) சந்தை நிறுவுதல் | ரூ. | 6,000 |
| (4) பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் | ரூ. | 10,000 |
| (5) இதர திட்டங்கள் | ரூ. | 16,070 |

(6) குறைந்த வருவாயினருக்கு வீடுகட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் 198.
(7) சேரிச் சீர்திருத்தத் திட்டங்கள் 3.
(8) இடம் மாற்றப்பட்ட குடும்பங்கள் 216.

திண்டுக்கல், போடிநாயக்கனூர், கம்பம் ஆகிய நகராட்சி களிலும் பல நகரமைப்புத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.



மதுரையிலுள்ள சீர்ப்பயண ஓய்வு மாளிகை

## இதர திட்டங்கள்

மதுரை மாவட்டத்தில் வேலை தேடித்தரும் நிறுவனம் சிறந்த பணியாற்றிவருகிறது. முதல் திட்டக்காலத்தில் வேலை கேட்டுப் பதிவு செய்தோர் தொகை 50,470 ஆகும். இரண்டாவது திட்டக் காலத்தில் அந்த எண்ணிக்கை 79,360 ஆக அதிகரித்தது. முதல் திட்டக்காலத்திலும், இரண்டாவது திட்டக்காலத்திலும் இருபத்தோ ராயிரத்திற்கு மேற்பட்டோர் இந்த நிறுவனத்தால் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

சீர்ப் பயணம் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணையாக இருக்க வல்லது. படித்து அறிவதைவிட கண்டும், கேட்டும் அறிவது எளிது. மனதில் ஆழப்பதியும். முதல் திட்டக்காலத்தில் அரசாங்கம் சீர்ப்பயணம் பற்றிய விளக்கங்கள் அளித்ததோடு, சீர்ப்பயண அலுவலகங்களை ஏற்படுத்தின. இரண்டாம் திட்டக்காலத்தில் சீர்ப் பயணங்களுக்காக மதுரை மாவட்டத்தில் ரூ. 5·95 லட்சம் செல வாயிற்று.

வெளி நாட்டுப் பயணக்காரர்களுக்குப் பயன்படும் வகையில் சீர்ப்பயண ஓய்வு இல்லத்தை மதுரையில் கட்டியது. அதற்காக ரூ. 2·50 லட்சம் செலவாயிற்று.

இந்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சேர்ந்து ரூ. 2·50 லட்சம் செலவில் குறைந்த வருவாயினருக்கான ஓய்வு இல்லத்தைக்

கட்டின. மதுரைக்கு வரும் பயணக்காரரை வரவேற்கவும், பயணத்திற்கு உதவவும் 1958 ஏப்ரல் 15 முதல் சீர்ப்பயணத் தகவல் நிலையம் மதுரையில் இயங்கி வருகிறது.

மக்களாட்சியில் நடைபெறும் ஆக்க வேலைகளை மக்கள் அறிந்தால்தான் உண்மையான வளர்ச்சி ஏற்பட முடியும். மக்கள் தரும் முழு ஒத்துழைப்பின் அடிப்படையில்தான் எந்த அரசாங்கமும் சிறந்த பணியாற்ற முடியும். எனவேதான் நாடகம், கதாகாலட்சேபம், திரைப்படம் ஆகியவற்றின் மூலம் மாவட்டப் பிரச்சார அதிகாரி சாதனைகளை விளக்கி வருகிறார். அரசாங்கத்தின் பலவேறு சாதனைகள் இக் கலை நிகழ்ச்சிகளால் விளக்கப்பட்டன. ஆண்டுதோறும் திட்டப் பிரச்சார வாரங்கள் கொண்டாடப்பட்டன. மதுரை நகராட்சி நடத்தும் சித்திரைப் பொருட்காட்சி போன்ற பொருட்காட்சிகளில் சிறப்பான முறையில் பிரச்சாரப் பிரிவு பங்கெடுத்துக் கொண்டது.

இங்ஙனம் மதுரை மாவட்டத்தில் பலவேறு துறைகளிலும் சிறப்பான பணிகள் ஆற்றப்பட்டுள்ளன. வளமான நாட்டை உருவாக்கும் பணியில் இன்று ஈடுபட்டிருக்கிறோம். அத்தகைய ஆக்கப்பணியில் மதுரை மாவட்டத்தின் பங்கு குறிப்பிடத்தக்கதேயாகும். பத்து ஆண்டுகளில் பெற்ற பயன்கள் வருங்காலத்தில் பெறவேண்டிய வெற்றிகளை நினைவூட்டுகின்றன.

———



# மத்திய அரசாங்க திட்டங்கள்

தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள மிகப் பெரிய தொழில்கள் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையும், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டமும் ஆகும். இவையல்லாமல் கச்சா பிலிம் தொழிற்சாலை, டெலிபிரின்டர் தொழிற்சாலை, மருத்துவ மனைகளுக்கான அறுவைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை முதலியனவும் அமைக்கப்பட்டு வருகின்றன.

### நெய்வேலி நிலக்கரி

இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மிக முக்கியமானது ஆகும். எதிர் காலத்தில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் இதன் சேவை மிகப் 'பெரியதாகவிருக்கும். தென் ஆர்க்காடு மாவட்டம் நெய்வேலிப் பிரதேசத்தில், 145 லிருந்து 200 அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் 100 சதுர மைல் பரப்பளவுக்கு 200 கோடி டன்கள் பழுப்பு நிலக்கரி படிந்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும். இதைப் பயன்படுத்தி 4 லட்சம் கிலோவாட் வரை மின்சாரம்

உற்பத்தி செய்யவும், 1·5 லட்சம் டன் யூரியா உரம் தயாரிக்கவும், 3·8 லட்சம் டன் சுட்ட நிலக்கரி அச்சுக்கள் தயாரிக்கவும், 6,400 டன் மோட்டார் ஸ்பிரிட், 54,300 டன் தார், 1,032 டன் பினயில் ஆகியன தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நிலக்கரியைத் தோண்டும்போது வெளிவரும் தரமான களிமண்ணைப் பயன்படுத்துவதற்கான தொழிற்சாலையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரித் திட்டம் ரூ. 86 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, மூன்றாவது திட்டக்கால விஸ்தரிப்பு வேலைகளையும் சேர்த்துச் சுமார் ரூ. 110 கோடி செலவிடப்படும்.

**பெரம்பூர் ரயில்பெட்டி**

பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை முதல் திட்டக் காலத்தில் இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. இது 1955-ல் உற்பத்தியைத் தொடங்கிற்று. சுவிட்ஸர்லாந்து உதவியுடன் இது அமைக்கப்பட்டது. இதில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை 8 கோடி ரூபாய். இரண்டாம் திட்டக் காலத்தில் இத் தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகளைத் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளது. தற்போது இத் தொழிற்சாலையில் சுமார் 7,800 பேர் வேலை செய்கின்றனர். 300 பெட்டிகளுக்கு ஆசனம் முதலிய வசதிகளை அமைப்பதற்கான தொழிற்சாலைப் பிரிவு ரூ. 3·5 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது திட்ட மத்தியில் இங்குத் தயாராகும் எல்லாப் பெட்டிகளுக்கும் இந்தத் தொழிற்சாலையிலேயே ஆசனம் முதலிய வசதிகள் அமைக்கப்படும்.

**உதகை கச்சா பிலிம்**

உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பிரெஞ்சு

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தோடு



நிபுணர்களின் ஒத்துழைப்புடன் போட்டோ பிலிம்கள் உற்பத்தி செய்யப்படும். இத்திட்ட வேலைக்காக இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி கம்பெனி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் ரூ. 6·5 கோடி செலவாகும். நானூறு நிபுணர்கள் உட்படச் சுமார் ஆயிரம் பேர் இதில் வேலை வசதி பெறுவர். எக்ஸ்-ரே போட்டோ பிலிம், பதிவுத் தாள்கள், போட்டோ லித்தோவுக்கான தாள்கள் முதலியன இதில் உற்பத்தியாகும். மூன்ருவது திட்ட முடிவில் கலர் பிலிம்களும், கலர் போட்டோ தாள்களும் உற்பத்தியாகும். ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் இதில் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கம்பெனிக்காக 272 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

**டெலிபிரின்டர்**

"ஆலிவெட்டி" என்ற இத்தாலி நாட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்திய அரசாங்கம் கிண்டியில் ஒரு டெலிபிரின்டர் தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. மாதம் 100 டெலிபிரின்டர்கள் இதில் உற்பத்தி செய்யப்படும். இதில் மொத்தம் சுமார் 200 பேர் வேலை பெறுவர். கிண்டித் தொழிற் பண்ணையில் ஏற்கனவே இதற்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு அளவில் உற்பத்தி தொடங்கிவிட்டது.

மத்திய அரசாங்கம், ரஷ்யத் தொழில் நுணுக்க உதவியுடன் கிண்டியில் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்குச் சுமார் 5 கோடி ரூபாய் செலவாகும். இங்கு 150 வகைகளில் சுமார் 25 லட்சம்

புதியதோர் நகரமும் எழுந்துள்ளது



அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கப்படும். இந்தக் கம்பெனிக்காக 115 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

## சேலம் இரும்பு

சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனி அதிக அளவில் கிடைக்கிறது. ஆயின் அதில் இரும்புச் சத்துக் குறைவாக இருக்கிறது. இப்பொழுது நெய்வேலியில் நிலக்கரி கிடைப்பதினால், அதையும் சேலம் இரும்புக் கனியையும் கொண்டு இரும்பு உற்பத்தி செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. பூர்வாங்க சோதனைகள் நம்பிக்கை அளித்துள்ளன. ஆனால் இனி மேற்கொண்டுதான், விரிந்த அளவில் சோதனைகளை மேற்கொள்ள இயலும். இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் மூன்றாம் திட்டத்தில் ரூ. 25 கோடி ஒதுக்கியுள்ளது. பூர்வாங்க வேலைகளுக்காக மாநில அரசாங்கம் மூன்றாவது திட்டத்தில் ரூ. 75 லட்சம் ஒதுக்கியுள்ளது.

காவேரிப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பற்றிப் பல அயல்நாட்டு நிபுணர்களால் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வந்துள்ளது. 1956-ம் ஆண்டு ரஷ்ய நிபுணர்கள் அவ்விடத்தைப் பார்வையிட்டு இங்கு எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறிகள் இருப்பதைத் தெரிவித்தனர். அதனையொட்டி 1957-58-ல் பூர்வாங்க சோதனைகள் நடத்தப்பட்டன. இந்தியப் புவியியல் ஆராய்ச்சிக் கழகம் இதற்கான சோதனைகளை மேற்கொண்டது. இதுவரை சுமார் 4,000 சதுர மைல் அளவில் சர்வே நடத்தப்பட்டுள்ளது. மேலும் சில பகுதிகளில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பூர்வாங்க சோதனைகள் இந்தப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன.

## சேது சமுத்திரத் திட்டம்

சேது சமுத்திரத் திட்டமும் இந்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பாக் ஜலசந்திக்கும் மன்னார் வளைகுடாவிற்கும் இடையில் அடித்தரை பாறையாக உள்ள பகுதியில் கால்வாய் அமைத்து, போக்குவரத்துக்கு வழி செய்வதே இத் திட்டத்தின் முக்கிய அம்சம் ஆகும். இந்தக் கால்வாய் அமைப்பின் மூலம் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கு வரும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிவர வேண்டிய அவசியம் இராது. இதன்மூலம் கப்பல் பிரயாண நேரமும், எரி பொருளும் கணிசமாகக் குறையும்.

**ரயில் பாதை**

தமிழ் நாட்டில் ரயில்பாதை வசதிகளை அதிகரிப்பதற்கான திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன. சேலம்-பெங்களூர், விருதுநகர்-மானமதுரை, திருநெல்வேலி-கன்னியாகுமரி ரயில் பாதைத் திட்டங்களை மூன்ருவது திட்டத்தில் சேர்ப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைத்தொழிலும் வாணிபமும் செழிப்படைவதற்கு வேண்டுமான நிலக்கரி, உருக்கு, மற்றும் இதர கச்சாப் பொருள்கள் போதிய அளவில் கிடைக்க வேண்டுமானல், ரயில் வசதிகள் அதிகரித்தாக வேண்டும். இந்த வசதியைச் செய்வதின் அவசியம் பற்றி மாநில அரசாங்கம் தீவிரமாக வலியுறுத்தியுள்ளது.

கல்கத்தா-சென்னை, அரக்கோணம்-ஈரோடு ஆகியவைகளுக்கு இடையில் பிராட்கேஜ் லைன் இரட்டைப்பாதை அமைப்பதற்கான ஏற்பாடும், ரயில்வே அபிவிருத்தித் திட்டத்தில் இடம் பெறும் என்று நம்பப்படுகிறது.

---

# வளமான

# எதிர்காலம்

சுதந்திரப் பாதையில் பயணம் தொடங்கிப் பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேறி விட்டன. தற்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்றுவருகிறது.

நாட்டு மக்கள் நலனுக்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 186 கோடியும் அரசாங்கத்தால் செலவிடப்பட்டதை அறிந்தோம். மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 291 கோடி செலவிடப்படும். இரண்டாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து நடத்தவும், நிறுவனங்களைப் பராமரிக்கவும் ஆண்டுதோறும் ரூ. 8 கோடி செலவிட வேண்டியிருக்கிறது. மூன்றாவது திட்டக்கால அளவில் இச் செலவு ரூ. 40 கோடியாகும். இதற்கு வழி வகுப்பதோடு, திட்டச் செலவுக்காக மாநில அரசாங்கம் ரூ. 101 கோடி ஒதுக்கும். அதற்கு மேல் ரூ. 190 கோடி வரை மத்திய அரசாங்கம் உதவி செய்யும். இந்த வகையில் மூன்றாவது திட்டத்தின் மொத்த அளவு

ரூ. 291 கோடியாக இருக்கும். திட்ட வாரியான செலவு விவரங்கள் பின் வருமாறு :—

| (1) | முதல் திட்டச் செலவு (2) | இரண்டாம் திட்டச் செலவு (3) | மூன்றும் திட்ட உத்தேசச் செலவு (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய்கள் கோடியில்) | |
| வேளாண்மை | 9·67 | 16·80 | 36·98 |
| சமுதாயநல அபிவிருத்தியும் கூட்டுறவும் | | 15·23 | 25·18 |
| பாசனமும் மின்சக்தியும் | 50·43 | 95·78 | 127·61 |
| பெருந்தொழில்களும், நடுத்தரத் தொழில்களும், | 1·53 | 1·13 | 3·35 |
| சிறு தொழில்களும், கிராமத் தொழில்களும் | | 12·72 | 20·16 |
| சாலைகள், சுற்றுலா வசதிகள் | 2·70 | 5·38 | 11·25 |
| கல்வி | 3·82 | 13·73 | 32·16 |
| சுகாதாரம் | 6·42 | 14·35 | 21·50 |
| வீட்டு வசதி | 1·29 | 4·80 | 7·00 |
| பின்தங்கிய வகுப்பினர் நலன் | 4·52 | 4·59 | 5·38 |
| | | | (—) 2·12* |
| சமூக நலன் | | 0·18 | 0·52 |
| தொழிலாளர் நலன் | | 0·48 | 1·33 |
| மற்ற இனங்கள் | | 1·01 | 0·59 |
| மொத்தம் | 80·38 | 186·18 | 290·89 |

* மத்திய அரசாங்கத் துறையில் செலவிடப்படும் தொகை

நம் நாட்டில் பெரும்பாலோர் ஈடுபட்டிருக்கும் வேளாண்மைக்காக உற்பத்திக்கும் சிறு பாசனத்திற்கும் இரண்டாவது திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது மூன்றுவது திட்டத்தில் ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு பாசனக் குளங்களையும் ஏரிகளையும் புதுப்பிப்பதற்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 4·4 கோடி செலவாகியிருக்க, இப்போது அதற்கு ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை மட்டும் அல்லாமல், தூர்வாரிச் செப்பஞ் செய்யும் வேலைத் திட்டம் ரூ. 80 லட்சம் செலவில் தொடர்ந்து நடத்தப்படும். கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 1 கோடி அளவிற்குக் கடன் தொகைகளும், உதவித் தொகைகளும் வழங்கப்படும். சுமார் 7,200 மின்சார மோட்டார் பம்பு செட்டுகளும் 1,240 ஆயில் என்ஜின் பம்பு செட்டுகளும் வாடகைக் கிரய அடிப்படையில் வழங்கப்படும். இதற்குச் சுமார் ரூ. 1 கோடி செலவாகும். வாடகைக் கிரய அடிப்படையில் 250 யந்திரக் கலப்பைகள் விநியோகிக்கப்படும். மேலும் 2,000 துளைக் கிணறுகளுக்காக

ரூ. 50 லட்சம், 150 குழாய்க் கிணறுகள், 500 ஊற்றுக் கிணறுகள் ஆகியவற்றிற்காக ரூ. 94 லட்சம், 3,000 வடிமுனைக் கிணறுகளுக்காக ரூ. 50 லட்சம் செலவிடப்படும். அரசாங்க விதைப் பண்ணைகள் புதிதாக 76 நிறுவ ரூ. 100 லட்சம் செலவாகும். தனிப்பட்ட சாகுபடியாளர்க்கு வாடகைக்கு விடுவதற்காக 25 கனரக டிராக்டர்கள் வாங்க ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிருமி, பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் வழங்க ரூ. 100 லட்சமும், சிறந்த வேளாண்மைக் கருவிகளை வழங்க ரூ. 20 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. வாணிகப் பயிர்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்குரிய பல்வேறு திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 192 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பாசனத்துக்கு ரூ. 27 கோடி**

பாசனத்துக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 17 கோடி செலவிடப்பட்டது. மூன்றாவது திட்டத்தில் இதற்கென ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வகை செய்துள்ள ரூ. 21 கோடியும் இதில் சேர்ந்ததாகும். ரூ. 48 லட்சம் செலவில் பாலாறு கால்வாய்த் திட்டம், ரூ. 55 லட்சம் செலவில் சாத்தனூர் (இரண்டாம் நிலை) திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளால் உணவு உற்பத்தி 53 லட்சம் டன்களிலிருந்து திட்ட முடிவில் 70 லட்சம் டன்களாக உயரும் என எதிர்பார்க்கலாம். கரும்பு (வெல்லம்) 4 லட்சம் டன்னிலிருந்து 5 லட்சம் டன்னாகவும், எண்ணெய் வித்துக்கள் 10·50 லட்சம் டன்னிலிருந்து 13·40 லட்சம் டன்னாகவும், பருத்தி 4·20 லட்சம் பேல்களிலிருந்து 5·20 லட்சம் பேல்களாகவும், தேங்காய் 4,150 லட்சம் காய்களிலிருந்து 5,160 லட்சம் காய்களாகவும் உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கால்நடை நலம்**

கால்நடை வளர்ப்புக்கென மூன்றாவது திட்டத்தில் ரூ. 352 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கேந்திர கிராம நிலையங்களுக்கான ரூ. 75 லட்சமும், கோழி வளர்ப்புக்கான ரூ. 52 லட்சமும் இதில் அடங்கும்.

பால் பண்ணையும், பால் வழங்கலும் என்பதன்கீழ் மூன்றாவது திட்டத்தில் ரூ. 275 லட்சம் செலவாகும். இத்தொகையிலிருந்து சென்னை பால் பண்ணைத் திட்டத்திற்காக ரூ. 100 லட்சமும், திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் அமைக்க ரூ. 53 லட்சமும் செலவிடப்படும்.

மதுரையில் ஏற்படுத்தப்படும் இயந்திரத்திற்காக ஐக்கிய நாட்டு சர்வதேச குழந்தைகள் நிதியிலிருந்து உதவி கிடைக்கக்கூடும். ரூ. 15 லட்சம் செலவில் வெண்ணெய், பால் பவுடர் தொழிற்சாலையும், ரூ. 6 லட்சம் செலவில் கால்நடைத் தீனி தயாரிப்பு நிலையமும் அமைக்கப்படும்.

மீன் வளத்திற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 79 லட்சம் செலவாயிற்று. இப்போது மூன்றாவது திட்டத்தில் இதற்காக மொத்தம் ரூ. 2·22 கோடி செலவிடப்படும். அத்தொகையில் படகுகள் வழங்க ரூ. 63 லட்சமும், நைலான் வலைகள் போன்றவை வாங்க ரூ. 20 லட்சமும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்க ரூ. 30 லட்சமும், மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும், மீன்களைக் கரைசேர்க்கும் வசதிகளைச் செய்து தரவும் ரூ. 35 லட்சமும் செலவிடப்படும்.

**ரப்பர் தோட்டம்**

மூன்றாவது திட்டத்தில் வன வளத்திற்காக ரூ. 2·12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 2·62 லட்சம் ஏக்கரில் கிராமக்காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூ. 75 லட்சம் செலவாகும். ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் ஆகியவற்றின் கரைகளில் மரங்கள் நட ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பில் ரப்பர் தோட்டம் வைக்கப்படும். மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக ரூ. 250 லட்சம் செலவிடப்படும். குந்தா பள்ளத்தாக்கு மண்வளப் பாதுகாப்பு, சிறப்புத் திட்டத்திற்கு ஆகும் செலவுக்காக ரூ. 25 லட்சம் செலவுத் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்கும்.

சமுதாய நல வளர்ச்சித் திட்டத்திற்கு மூன்றாவது திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1962-63க்குள் மாநிலம் முழுவதற்கும் சமுதாய நலவளர்ச்சி வேலை விஸ்தரிக்கப்படும்.

மூன்றாவது திட்டக்கால அளவில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் குறுகியகால, நடுத்தரக் காலக் கடன்களாக ரூ. 47 கோடியும், நீண்டகாலக் கடன்களாக ரூ. 3 கோடியும் வழங்கும். கூட்டுறவு என்பதன்கீழ் பல்வேறு திட்டங்களுக்காக ரூ. 471 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான ரூ. 110 லட்சமும், 1,030 கிடங்குகளைக் கட்டுவதற்கான ரூ. 100 லட்சமும் அடங்கும்.

இரண்டாவது திட்டக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் பேட்டை, நாசரத் ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்

டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டையிலும் ஆக நான்கு இடங்களில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது. பேட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகியவைகளில் ஆலைகள் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தி தொடங்கிவிட்டன. நாசரத்தில் கூட்டுறவு நூற்பு ஆலை விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை இன்னும் உருவாகும் கட்டத்தில் உள்ளது. மூன்ருவது திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் மேலும் நான்கு கூட்டுறவு நூற்பு ஆலைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு நூற்பாலைகளின் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்ருவது திட்டக் காலத்தில் இதற்கென ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்கச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

**அணு மின்சார உற்பத்தி**

மின்சார அபிவிருத்திக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 79 கோடி செலவிடப்பட்டது. மூன்ரும் திட்டத்தில் மின்சாரப் பெருக்கத்திற்கு ரூ. 100 கோடி செலவிடப்படும். நெய்வேலியில் மத்திய அரசாங்கத்திட்டத்தின்கீழ் அனல் மின்சாரநிலைய விஸ்தரிப்பு வேலை ரூ. 15 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இரண்டாம் திட்ட முடிவில் தமிழ்நாடு மின்சார இணைப்பில் உற்பத்தி 5·71 லட்சம் கிலோ வாட்டாகும். மூன்ரும் திட்ட முடிவில் 10·46 லட்சம் கிலோ வாட்டாக இது உயரும். ஆனாலும்கூட, மின்சாரத் தேவை இந்த உற்பத்தித் திறனுக்கும் மேல் போகக் கூடுமாதலால், மாநிலத்தில் அணுமின்சார நிலையம் அமைப்பு சம்பந்தமான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சார விநியோக வேலைத் திட்டங்களுக்காக ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு மின்சார வசதியும் இதில் அடங்கும். 7,300 கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிப்பதென்ற லட்சிய அளவை அடைவது கடினமாக இருக்காது என்று கருதப்படுகிறது. கிராம மின்சாரத் திட்டங்களுக்காகத் தனிப்பட்ட லைசென்சுதாரர்களுக்குக் கடன் கொடுப்பதற்கென ரூ. 200 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக மூன்ருவது திட்டத்தில் ரூ. 11·2 கோடி செலவிடப்படும். தொழிற் கூடங்கள், தொழிற்சாலை யூனிட்டுகள் இவற்றை நிறுவவும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளை வழங்கவும் ஒதுக்கப்பட்ட ரூ. 320 லட்சம் இத் தொகையில் அடங்கும். கைத்தறிகளுக்காக மொத்தம் ரூ. 800 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களில்

2,500. விசைத் தறிகளை நிறுவுவதற்கென மத்திய அரசாங்கத் தொழில் துறையின் கீழும் தொகை ஒதுக்கப்படும்.

சாலைகள் அபிவிருத்திக்காக இரண்டாம் திட்டத்தில் ரூ. 5·33 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்டத்தில் இந்த வகையில் சுமார் ரூ. 11 கோடி செலவிடப்படும்.

கல்வி அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 25 கோடி செலவிடப்படும். கட்டாய ஆரம்பக் கல்வியை அமுலாக்க ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் 6 முதல் 11 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளும் 1965-66-ஆம் ஆண்டுக்குள் பள்ளி செல்வர். மூன்றும் திட்டக்கால முடிவில் 17 லட்சம் குழந்தைகள் மதிய உணவு பெறும்படியாகத் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

**கட்டாயக் கல்வி**

பொறியியற் கல்லூரிகளில் மேற்கொண்டு 610 மாணவர்களைச் சேர்க்கவும், பாலிடெக்னிக்குகளில் மேற்கொண்டு 1,060 மாணவர்களைச் சேர்க்கவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்தியத் திட்டத்தின் பாகமாகப் பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஒன்று இம்மாநிலத்தில் நிறுவப்படும். தனியார் துறையில் மேலும் ஒரு பொறியியற் கல்லூரி ஏற்படும். புதிதாக ஆறு பாலிடெக்னிக்குகள் தொடங்கப்படும். அவற்றுள் மூன்று பெண்களுக்கானவை. ரூ. 100 லட்சம் செலவில் 20 ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகள் தொடங்கப்படும்.

ஹரிஜன நலனுக்காக 1955-56-ம் ஆண்டுச் செலவு ரூ. 117 லட்சமாக இருந்தது. 1960-61-ல் இது ரூ. 355 லட்சமாக அதிகரித்தது. மூன்றும் திட்டத்தில் ஹரிஜன நலனுக்காக மேற்கொண்டு ரூ. 5·4 கோடி செலவிடப்படும். அதில் மத்திய அரசாங்கப் பங்கு ரூ. 2·1 கோடியாகும். இத்தொகை மாநிலத் திட்டத்தில் ஒதுக்கிய தொகைக்கு மேற்பட்டுள்ள தொகையாகும். ஹரிஜன நலன் சம்பந்தப்பட்ட எல்லாத் திட்டங்களுக்காகவும் மூன்ருவது திட்டத்தில் ரூ. 20 கோடி செலவிடப்படும்.

வீட்டு வசதி, நகர அபிவிருத்தித் திட்டங்களுக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 4 கோடி மத்தியத் திட்டத்தின் பங்காக இருக்கும்.

சுகாதார அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 21·5 கோடி செலவிடப்படும். நகரத் தண்ணீர் வசதித் திட்டங்களுக்காக ரூ. 7½ கோடியும், கிராமங்களில் தண்ணீர் வசதித் திட்டங்களுக்காக ரூ. 1½ கோடியும் இதில் அடங்கும்.

மூன்றாவது திட்டக் காலத்தில் புதிய மருத்துவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்படும். ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிகள் அபிவிருத்திக்காகவும், மருத்துவப் பயிற்சி வசதிகள் அதிகரிக்கவும் ரூ. 456 லட்சம் செலவிடப்படும். குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களுக்காக ரூ. 161 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத்தில் அந்த வகையில் ரூ. 64 லட்சம் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. பாக்கியுள்ள ரூ. 97 லட்சத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

இவ்விதமாக, வளமான எதிர்காலத்தை நோக்கி மேலும் முன்னேறும் முயற்சியாக மூன்றாவது திட்டம் விளங்குகிறது.

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS

pages 122
30-7-62